

“தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்”

**சுவடி : 2** **ஏடு : 7**

**மே-சூன் 2023**

**ஆசிரியர்**

வாலாசா வல்லவன்

**ஆசிரியர் குழு**

க. முகிலன்

சா. குப்பன்

தி. துரை சித்தார்த்தன்

முனைவர் முத்தமிழ்

சி. நடராசன்

ந. கருணாகரன்

இரா. திருநாவுக்கரசு

**இதழ் வடிவமைப்பு :**

சன் நகலகம்

சென்னை - 600 005.

பேசி : 98400 15179

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

ஆசிரியர் **‘புதிய சிந்தனையாளன்’**

2/12, சி.என்.கே.சந்து,

சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொடர்புக்கு :

**86681 09047, 98947 28032**

**94885 34225**

மின்னஞ்சல் :

sinthanaiyalantamilmonthly@gmail.com

*

இணையத்தில் படிக்க

www.keetru.com

**ஆசிரியவுரை**

# புதிய நாடாளுமன்றக் கட்டடம் கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவது

நரேந்திர மோடி தலைமையிலான பா.ச.க. அரசு புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைக் கட்டுவதற்கான திட்டத்தை 2019ஆம் ஆண்டு தீட்டியது. 2020-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10ஆம் நாள் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி புதிய நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். நான்கு தளங்களில் மொத்தம் 16,500 சதுர மீட்டர் பரப்பளவில் 862 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்ற மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட இக்கட்டடம், கட்டி முடிப்பதற்குள் சுமார் 1200 கோடியை எட்டியுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவிற்கு வேண்டுமென்றே இவர்களின் “இந்துத்துவா தத்துவ நாயகர்” சாவர்க்கரின் 150-வது பிறந்த நாளான மே மாதம் 28ஆம் நாளைத் தேர்ந்தெடுத்தனர்.

புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவிற்கு குடிஅரசுத் தலைவர் முர்முவை மோடி அரசு புறக்கணித்தது. குடிஅரசுத் தலைவர் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்றும் அதை மறுத்த மோடி அரசின் செயலைக் கண்டித்தும் காங்கிரசு, தி.மு.க. உள்ளிட்ட இருபது எதிர்கட்சிகள் புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவைப் புறக்கணித்தன.

குடிஅரசுத் தலைவர் ஒரு பெண் அதுவும் மலைவாழ் பழங்குடியினக் கைம்பெண் என்பதால் அவர் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார். இந்து சாத்திரங்கள் குறிப்பாக மனுதர்மம் பெண்களுக்குச் சடங்குகள் நடத்த உரிமை அளிப்பதில்லை. அதன் காரணமாகத்தான் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார் என்று பலரும் கூறுகின்றனர்.

புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறப்பு விழா 28.5.2023 ஞாயிறு அன்று காலை தொடங்கியது. புதிய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த சாவர்க்கர் படத்திற்குத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும், அவைத் தலைவர் ஓம் பிர்லாவும் மலர் தூவி மரியாதை செய்தனர்.

1947 ஆகஸ்டு 14 அன்று திருவாவடுதுறை சைவ மாடதிபதி சார்பில் வெள்ளியில் செய்யப்பட்டுத் தங்க முலாம் பூசப்பட்ட செங்கோல் சுதந்திர இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பேற்கவிருந்த நேருவிடம் பரிசாக அளிக்கப்பட்டது. அலகாபாத்தில் நேரு வீட்டு அருங்காட்சியத்தில் அந்தச் செங்கோல் தங்கக் கைத்தடி என்ற பெயரில் வைக்கப்பட்டிருந்தது. பிரித்தானியிரிடமிருந்து இந்தியர்களுக்கு ஆட்சி மாற்றம் செய்யப்பட்டதன் குறியீடாக இந்தச் செங்கோல் முதலில் மவுண்ட் பேட்டனிடம் தரப்பட்டது; பிறகு நேருவிடம் அளிக்கப்பட்டது என்று எத்தகையச் சான்றுமில்லாமல் பா.ச.க. கற்பனை கதையைப் பரப்பியது. மன்னராட்சிக் காலத்தின் அதிகாரக் குறியீடான செங்கோலை இந்தியாவின் பழைய மரபுகளைக் காத்தல் என்ற பெயரால் புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு நிகழ்ச்சியில், நேருவிடம் அளிக்கப்பட்ட செங்கோலைத் தமிழ்நாட்டிலிருந்து திருவாவடுதுறை ஆதீனம் தலைமையில் சென்ற 20 சைவ மடங்களின் ஆதீன கர்த்தர்கள் மோடியிடம்

வழங்கினர். மோடி நெடுஞ்சாண்கிடையாக விழுந்து அச்செங்கோலை வணங்கினார். பின்பு அவைத் தலைவர் இருக்கை அருகே அதை நிறுவினார். இந்தியாவில் நடப்பது மக்களாட்சியா? மன்னர் காலத்து ஆட்சியா? ஆர்எஸ்எஸ் தீட்டித்தரும் திட்டத்தின்படி இந்தியாவில் மன்னர் காலத்து வருணாசிரம-சாதியக் கட்டமைப்பை மீண்டும் நிலைநாட்டுவதன் அறிகுறியே நாடாளுமன்றத்தில் நிறுவப்பட்ட செங்கோல் ஆகும்.

கருநாடகத்தில் உள்ள சிருங்கேரி சங்கர மடத்தைச் சேர்ந்த பார்ப்பனர்கள் கணபதி ஹோமம் செய்தனர். வேத மந்திரங்கள் முழங்க தலைமை அமைச்சர் நரேந்திர மோடி புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். அங்கிருந்தவர்கள் மோடி மோடி என்று முழக்கமிட்டனர். இந்நிகழ்வு பேரரசர்கள் முடிசூட்டு விழாவைப் போல் காட்சி அளித்தது.

அதன்பிறகு பேசிய தலைமை அமைச்சர் மோடி, மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை உயரக் கூடிய வாய்ப்பு உள்ளது; எனவேதான் புதிய நாடாளுமன்றக் கட்டடம் கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது என்று பேசினார். தற்போதைய நாடாளுமன்றக் கட்டடத்தில் மக்களவையில் 543 உறுப்பினர்களும் மாநிலங்கள் அவையில் 238 உறுப்பினர்களும் உள்ளனர்.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் மக்களவையில் 888 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. தேவைப்பட்டால் 1272 இருக்கைகள் வரை விரிவுபடுத்திக் கொள்ளலாம். மாநிலங்கள் அவையில் 384 இருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன.

புதிய நாடாளுமன்றக் கட்டடம் வடிவமைப்பு முழுக்க முழுக்க இந்துத்துவா கலாச்சாரத்தையே பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. அர்த்த சாத்திரத்தை எழுதிய சாணாக்கியருக்கு 30 அடி உயரப் புடைப்புச் சிலையை நிறுவியுள்ளனர்.

மைய மண்டபத்தில் 250 அடி நீளத்தில் விட்ணு புராணத்தில் இடம்பெற்றிருக்கும் அசுரர்களும் - தேவர்களும் பாற்கடலை கடைவதைப் போன்ற காட்சி புடைப்புச் சிற்பக் கலை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. வேத காலம் முதல் தற்போது வரையிலான இந்து புராணங்களின் படங்களை வரைந்து வைத்துள்ளனர். ஆங்காங்கே சமசுகிருத வரி வடிவ எழுத்துகளும் இடம்பெற்றுள்ளன. யாகம் வளர்ப்பது முனிவர்கள் தவம் செய்வது போன்ற படங்களும் இடம்பெற்றுள்ளன.

ஆர்.எசு.எசு. அமைப்பினர் அடைய நினைக்கும் 'இந்து ராஷ்டிரா' வரைபடமும் அந்த ஓவியங்களில் இடம்பெற்றுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பல போதாமைகள் இருப்பினும் மக்களாட்சிக் கூறுகள், மதச்சார்பின்மை, போன்றவை உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்த அடிப்படைக் கூறுகளைத் திருத்தவோ மாற்றவோ நாடாளுமன்றத் திற்கு அதிகாரம் இல்லை என்று உச்சநீதிமன்றத்தின் 13 நீதிபதிகள் கொண்ட பேராயம் தீர்ப்பளித்துள்ளது.

வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலேயே ஆட்சியதிகாரத்தின் துணையுடன் அனைத்துத் துறைகளையும் சமூகத் தையும் இந்தத்துவ மயமாக்கும் செயல்பாடுகள் தொடங் கப்பட்டன. 2014இல் மோடி தலைமையமைச்சரான பிறகு இந்துத்துவ மயமாக்கம் நடைமுறைகள் பாசிச வடிவம் எடுத்துள்ளன. ஒரே நாடு ஒரே மொழி ஒரே கலாச்சாரம் என்று பல்வேறு பெயர்களில் இந்தியாவின் பன்மைத்துவம் அழிக்கப்படுகிறது. மாநில உரிமைகள் பறிக்கப்பட்டு எல்லா அதிகாரமும் ஒன்றிய அரசில் குவிக்கப்பட்டு வருகின்றன. இப்பாசிசப் போக்கை எதிர்ப்பவர்கள், கட்சிகள், இயக்கங்கள் தேச விரோத சக்திகள் என்ற முத்திரைக் குத்தப்பட்டுக் கொடுமையாக ஒடுக்கப்படுகின்றனர்.

மோடி தலைமையிலான பத்து ஆண்டுக்கால பாசகவின் பாசிச ஆட்சி யின் காலடியின் கீழ் இந்திய அரச மைப்புச் சட்டம் நசுக்கப்பட்டுக் கிடக் கிறது. நாடாளுமன்றத்தின் பிரம் மாண்டமான புதியக் கட்டடம் என்பது கண்ணை (சனநாயகத்தை) விற்றுச் சித்திரம் வாங்குவது போன்றதே ஆகும்.



● - வாலாசா வல்லவன்


ROOTS TAMIL

**தோழர் கரிகாலனின்**
**'ரூட்ஸ் தமிழ்' வலையொளி மீதான**
**இந்திய அரசின் தடையை**
**வன்மையாகக் கண்டிக்கிறோம்!**
**தடையைத் திரும்பப்**
**பெறக்கோருகிறோம்!**

- ஆசிரியர் குழு

# பெரியார் கொள்கையை வென்றெடுப்போம், வாரீர்!

**- வே. ஆனைமுத்து**

இந்தியா இன்றைக்கு இருப்பதுபோல் ஒரே ஆட்சிப் பரப்பாக இல்லாத காலத்திலேயே, இங்கு, பிறவி சாதி என்கிற வருண வேறுபாட்டுக் கொள்கை சமுதாய வாழ்வில் இடம்பெற்றுவிட்டது. அத்துடன், யாகம் என்னும் வேள்வி செய்வதும் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் இவற்றைப் பின்பற்றும்படி பார்த்துக் கொண்டவர்கள் ஆங்காங்கு இருந்த அரசர்களும், சிற்றரசர்களுமே ஆவர்.

இதை 2560 ஆண்டுகளுக்கு முன்னரே சித்தார்த்தர் எதிர்த்தார்.

புத்தர் மறைவுக்குப் பின்னர் அசோகர் காலத்திலும், அவருடைய வழி வந்தவர்கள் காலத்திலும் கி.மு.180 வரை, வடநாட்டில் பவுத்தம் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது.

பவுத்தம் பரவவும் காக்கப்படவும் அரசே காரணம் என்பதை உணர்ந்த புஷ்யமித்ர சுங்கன் என்கிற பார்ப்பனன் -அசோகரின் கொள்ளுப் பேரனான பிருகத்ரதனின் ஆட்சியில் படைத் தலைவனாக இருந்தவன் - படை வீரர்களின் கண் முன்னேயே, அரசனை வெட்டிக் கொன்றான். தன்னைத்தானே அரசன் என அறிவித்துக் கொண்டான். பவுத்தப் பிக்குகளைக் கொன்று, அவர்களின் தலைகளைக் கொண்டுவர ஆணை யிட்டான். பவுத்தத்தின் செல்வாக்கை அடியோடு துடைத்தான். அதுவரையில் செவிவழியாகப் புழக்கத்திலிருந்த இராமாயணம், மநுதரும சாத்திரம் இவற்றைத் தொகுக்கச் செய்தான். மநுநீதியில் விதிக்கப்பட்டபடி நால்வருண - பிறவி சாதிப் பகுப்பு நிலைபெறக் கெட்டியான அடித்தளமிட்டான்.

தென்னாட்டில், பிராமணிய - பார்ப்பனியக் கொள்கை என்பது கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதலே செல்வாக்குப் பெற்றுவிட்டது. தமிழ்நாட்டுச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வேத நெறிகளைப் பின்பற்றி வேள்விகளைச் செய்து, மேல் உலகத்தை அடைவதில் நாட்டம் கொண்டனர். பாமர மக்களிடம் இக்கொள்கைகள் பரவ, இராமாயணம் ஒரு வலிமையான ஊடகமாகப் பயன்பட்டது.

சமணமும், பவுத்தமும் பல பகுதிகளில் ஆட்சியாளர் களின் ஆதரவுடன் செல்வாக்குப் பெற்றிருந்தன. அந்தச் செல்வாக்கை ஒழித்திட ஒரு பக்கத்தில் சைவ நெறியாளர் களும், இன்னொரு பக்கத்தில் ஆதிசங்கரரும் முனைந்து செயல்பட்டனர்.

“சமய மறுமலர்ச்சி” என்ற பேரால், தமிழகத்தில் சைவ சமயக் குரவர்களும், அரசர்களும் சமணம், பவுத்தம் பெற்றிருந்த செல்வாக்கை 9-ஆம் நூற்றாண்டுக்குள் ஒழித்தனர்.

கி.பி.10-ஆம் நூற்றாண்டில் தொடங்கி, பிற்காலச் சோழர்களாலும், பாண்டியர்களாலும், வருணப் பாதுகாப்பு - பார்ப்பனர் பாதுகாப்பு-இராமாயணம், மகாபாரதச் செல்வாக்கு



இவை 14-ஆம் நூற்றாண்டு தொடக்கம் வரையில், ஆட்சி மூலமாகப் பாதுகாக்கப்பட்டன. சாத்திரக் கட்டளைகளை மக்கள் மீறுவது முடியாததாக ஆகிவிட்டது. நாயக்க மன்னர்கள் இவர்களை மிஞ்சி நின்றனர்.

இது சமூகத்தின் பேரில் மட்டும் ஆதிக்கம் பெற்றிருக்க வில்லை. மனித உரிமைகளைத் துய்ப்பது, உடைமைகளைப் பெற்றிருப்பது, அறிவைப் பெற்றுக்கொள்ளுவது என்கிற எந்த ஒன்றிலும் பெரிய எண்ணிக்கையினராக இருந்த கீழ்ச்சாதி மக்களுக்கு உரிமை இல்லாமலே இது செய்துவிட்டது.

இதற்கு இடையில் கி.பி.3-ஆம் நூற்றாண்டு தொடங்கி 10ஆம் நூற்றாண்டுக்குள் பார்ப்பனக் கொள்கைப்படி இயற்றப் பட்ட புராணங்கள், நான்கு வருணங்களுக்கு அப்பால் - 4000 உள்சாதிகளைக் கற்பனையாக உருவாக்கிச் செல்வாக்குப் பெற வைத்தன. ஒவ்வொரு உள்சாதியின் முன்னோர் எவரானாலும், அவர் ஒரு மேல் வருணத்து ஆணுக்கும், ஒரு கீழ் வருணத்துப் பெண்ணுக்குப் பிறந்தவரே ஆவார். அதாவது வருண சாதியைக் கெடுத்த - சங்கர சாதியாரே ஆவார்.

நான்கு வருணங்களாகப் பிரிக்க, மூன்று தடுப்புச் சுவர்கள் போதும், புராணங்களை நம்பிய மக்கள், 3999 தடுப்புச் சுவர்களை நம்பிக்கொண்டு, 4000 சிறுசிறு உள்பிரிவு களாக-மேல், நடு, கீழ் எனப் படிக்கட்டு முறைகளை உண்டாக்கிப் பின்பற்றி அதனைக் கட்டிக் காப்பதே வாழ்க்கையின் குறிக் கோள் என்று ஆக்கிக்கொண்டனர்.

1. மநுநீதியில் விதிக்கப்பட்டபடி இந்தியா முழுவதிலும் வருணங்கள் உண்டு. தென்னாட்டில் பிராமணன், சூத்திரன் என்கிற இரண்டு வருணங்களே உண்டு. வருணம் மாறி இப்போது திருமணங்கள் செய்து



கொள்ளலாம். ஆனால் சட்டப்படி "இந்து" என்று மணமகனும் மணமகளும் உறுதி ஒப்பம் செய்ய வேண்டும்.

2. உள்சாதி மாறித் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால், அதனால் வருண வேறுபாடு சட்டப்படி மாற்றம் அடையாது.

3. பார்ப்பனப் புரோகிதத்தைக் கைவிடலாம்; சிலையை உடைக்கலாம்; மநுநீதி, இராமாயணம்-பாரதம் இவற்றை எரிக்கலாம். அதாவது வேத-புராண நெறிகளை மீறி அன்றாட வாழ்க்கையில் இலக்கக்கணக்கான தமிழர்கள் - கோடிக்கணக்கான இந்துக்கள் நடக்கலாம். ஆனாலும் அதற்குப் பிறகும் அந்த ஒவ்வொருவரும் "இந்து"தான்; அவன் பிறந்த ஏதாவது ஒரு வருணத்தைச் சார்ந்தவன் தான். அதை அவன் மாற்றிக் கொள்ள முடியாது.

இந்த மாபெரும் மானிட உரிமைப் பறிப்பை - மக்கள் சமத்துவத் தடையை எதிர்த்துத்தான் மகாத்மா புலே, பண்டித அயோத்திதாசர், தந்தை பெரியார், மேதை டாக்டர், அம்பேத்கர் ஆகியோர் தத்துவங்களையும் கொள்கை களையும் வேலைத் திட்டங்களையும் நமக்கு அளித்தனர்.

இவர்களுள் நீண்ட வாழ்நாளைப் பெற்றவர் பெரியார் ஒருவரே, தம் வாழ்நாளில் சரி பகுதிக் காலத்தை - மேலே சொல்லப்பட்ட எல்லாச் செய்திகளையும் வெகுமக்கள் செவிகளில் படும்படியும், மனத்தில் தைக்கும்படியும், சிலர் இவற்றை முழுமையாகப் பின்பற்றும்படியும் ஆவதற்கு ஏதுவாகப் - பட்டிதொட்டியெங்கும் சென்று பரப்புரை செய்த ஒரே தலைவர் தந்தை பெரியார் அவர்களே.

ஆயினும் படித்தவர்களில் - அறிஞர்கள் எனப்படு வோரில் - அரசியல் களத்தில் உள்ளோரில் - வெகுமக்களில் எத்தனை விழுக்காட்டுப்பேர் பார்ப்பன புரோகிதத்தை ஒழித்தனர் - எத்தனை விழுக்காட்டுப்பேர் இராமாயண, பாரத நம்பிக்கையைக் கைவிட்டனர் - எத்தனை விழுக் காட்டுப்பேர் தீபாவளி கொண்டாடுவதை நிறுத்தினர் - எத்தனை விழுக்காட்டுப்பேர் சிலை வணக்கத்தை, தேர்த் திருவிழாவுக்கும், குடமுழுக்குக்கும் செல்லுவதைக் கை விட்டனர் என்னும் வினாக்களுக்கு நம்மிடம் எந்த விடையும் இல்லை.

பகுத்தறிவாளர்கள், சிந்தனையாளர்கள், நாத்திகர்கள் என விளங்குவோர் இப்படிச் சிந்திப்பதில் மட்டும் - பகுத்தறிவு அற்றவர்களாக, பகுத்தறிவைக் கைவிட்டவர்களாக, மூடநம்பிக்கைக்காரர்களாக உள்ளனர். இது உண்மை,

ஏன்? எவ்வாறு?

தந்தை பெரியார், "இராமாயணத்தையும் மநுநீதியையும் எரிக்க வேண்டும்" என 1922-இல் முதன்முதலாக அறிவித்தார். மேதை அம்பேத்கர் 1927-இலேயே அப்படி முழங்கினார்.

இராமாயணம் பற்றிய கட்டுரைகள், சொற்பொழிவுகள் அடங்கிய சிறு சிறு நூல்களை 1926 முதலும்; "இராமாயண ஆராய்ச்சி" நூல்களை 1936 முதற்கொண்டும் வெளியிட்டுப் பரப்பினார். இவை கடந்த 82 ஆண்டுகளில் ஓர் இலக்கம் படிகள் அச்சிடப்பட்டிருந்தால், அதுவே அதிகம்.

தந்தைப் பெரியாரை நன்றாகப் புரிந்த ஆச்சாரியார், 1940 முதல் "சக்ரவர்த்தித் திருமகன்" என இராமாயணம் பற்றி எழுதினார்; 1954 முதல் "வியாசர் விருந்து" என மகாபாரதம் பற்றி எழுதினார். இவற்றில் ஒவ்வொன்றிலும் - ஆங்கில மொழிப் பதிப்பு மட்டும் ஒருகோடிப் படிகள் விற்பனையாகி உள்ளன. படித்த பார்ப்பனர்கள் மட்டுமின்றிப் படித்த எல்லோரும் உலக அளவில் இவற்றைப் படிக்கின்றனர்.

இவற்றுக்கு அப்பால் ஒருவர் எவ்வளவு பெரிய கல்வி பெற்றிருந்தாலும், அவர் படித்த கல்வித் திட்டத்தில் இவை எல்லாம் இடம்பெற்றுள்ளன. நேற்றும் இன்றும் நிலை இதுவே; நாளையும் இதுவே.

படித்தவர்கள் மூடநம்பிக்கையாளர்களாகவும் பழமை வாதிகளாகவும் விளங்கிட இதுதான் மிகப்பெரிய காரணம். இந்தக் காரணத்தை அரசு அகற்ற வேண்டும்.

இன்றைய இந்திய அரசு "மதச்சார்பற்ற அரசு" அன்று. எல்லா மதங்களையும் ஒன்றுபோல் கருதிப் பாதுகாக்கும் அரசு.

எனவே படிப்பிலிருந்து மதத்தைப் பிரித்திட இந்திய அரசு முன்வராது; மாநில அரசுகள் முன்வரமுடியாது. அதற்கு உரிய அதிகாரம் மாநிலங்களுக்கு இல்லை. இது மூன்று தலைவர்களுக்கு மட்டும் புரிந்திருந்தது. 1. மேதை அம்பேத்கர், 2. தந்தை பெரியார், 3. காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சரசுவதி ஆகியோரே அம்மூவர்.

இதை எதிர்த்து, 1947, 1948-இல் அம்பேத்கரும், பெரியாரும் எடுத்த முயற்சிகளும்; 1957-இல் பெரியார் நடத்திய சட்ட எரிப்புப் போரும், 2008 வரை வெற்றி பெறவில்லை. ஆனால் இவர்களை எதிர்த்துக் காஞ்சி சங்கராச்சாரியார் செய்த முயற்சி 26.11.1949 அன்றே வெற்றி பெற்றுவிட்டது. அதனால்தான் படிப்பிலிருந்தோ, அரசின் நடப்புகளிலிருந்தோ "மதம்" பிரிக்கப்படவில்லை.

இது மட்டுமா?

திருப்பதி வெங்கடாசலபதி கோயிலுக்கு இன்று ஆண்டுக்கு ரூபா.1,000 கோடி வருமானம் உண்டியல் மூலம் கிடைக்கிறது; முடி இறக்குதல் மூலம் ஆண்டுக்கு 80 கோடி ரூபா கிடைக்கிறது. அக்கோவிலுக்கு உரிமையாக ரூபா 50,000 கோடி பெறுமானம் உள்ள தங்கம், வைரம், வெள்ளி நகைகள் உள்ளன. அசையாச் சொத்துக்களாக நிலங்கள், கட்டடங்கள், மடங்கள் உள்ளன.

இவற்றையெல்லாம் பெற்றிடவும், உரிமையாக வைத்துக்கொள்ளவும். "வெங்கடாசலபதி" என்கிற கல் சிலைக்குச் சட்டப்படி உரிமை உண்டு. "இதைப் பொறுத்த வரையில் - வெங்கடாசலபதியின் சிலை என்பது சட்டப்படி ஒரு மனிதன்" - As far as these purposes are concerned, Venkatachalapathy's idol is a juridic person.

இப்படியே - இந்துக் கோயில்கள்; இசுலாமியர் மசூதிகள், கிறித்துவர் மாதா கோயில்கள், சீக்கியர் குருத்துவாரங்கள் எல்லாம் அசையாச் சொத்து, அசையும் சொத்துகளை உடைமையாக வைத்துக்கொள்ள வழிதேடிய ஒரே தலைவர் காஞ்சிப் பெரியவர்தான்.

இந்திய அரசமைப்புச் சட்டம் என்பதே அப்படி எழுதப்பட இவர்தான் வழிசெய்தார். அதற்குக் கருவியாகச் செயல் பட்டவர் இன்று 101 அகவையினராக உள்ள அக்னிகோத்திரம் இராமாநுச தாத்தாச்சாரியார் ஆவார். அரசமைப்புச் சட்டத்தில் விதி 25(2)a என்பது இன்றைக்கு உள்ள வடிவத்தில் அமைக் கப்பட இவர்களே காரணம்.

இதனை முழுவதுமாக மக்களிடையே அம்பலப்படுத்தி எதிர்த்தவர் தந்தை பெரியார். இதைக் கருவிலேயே சிதைத்திட, 1947-இலேயே முயன்று, 1951-இல் தோல்வியைக் கண்டு வெதும்பியவர் மேதை அம்பேத்கர்.

புத்தரையும், புலேவையும் நன்றாகப் புரிந்து போற்றிய நம் இரண்டு தலைவர்கள் தந்தை பெரியாரும், மேதை அம்பேத்கரும் ஆவர்.

இன்று தந்தை பெரியாரின் 130-ஆவது பிறந்த நாள்.

94 ஆண்டுகள் 98 நாள்கள் வாழ்ந்த பெரியார். 47 ஆண்டுகள் - செம்பாதிக் காலம் ஒரு ஜெட் வானூர்தியின் வேகத்தில் ஊர் ஊராகச் சென்று, தம் மனத்தில் பட்டதை ஒளிவு மறைவின்றி, நிருவாணமாக - வெளிப்படையாக எடுத்துக் கூறினார்; சிந்திக்க வைத்தார்.

அம்மேதையின் அடியொற்றி நிற்கும் பல இலக்கம் தொண்டர்களுள் நானும் ஒருவன். அதேநேரத்தில், பெரியாரை நன்கு புரிந்திட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவன்.

அந்த ஆர்வத்தின் வெளிப்பாடாகவே, இங்கே இவற்றை எல்லோருடைய மேலான பார்வைக்கும் முன்வைக்கிறேன்.

வருணம், கடவுள், மத நிறுவனங்கள், மடங்கள், வேத பாடசாலைகள், இறையியல் கல்லூரிகள், அரபிக் கல்லூரிகள், பழைய பழக்க வழக்கங்கள் இவை அப்படியே இருக்கவும், நீடிக்கவும் இடம் தருபவை அரசு, அரசு நிருவாகம், நீதித் துறை, கல்வி முறை, பெரிய உடைமை உரிமை முதலான வைதாம். இவ்வளவுக்கும் உரிமையை வழங்குவது இந்திய அரசமைப்பும், இந்திய நாடாளுமன்றமும்தான்.

இவற்றை அடியோடு மாற்றிட எல்லாம் செய்வதுதான், தந்தை பெரியாரின் கொள்கை என்றேனும் வெற்றி பெற ஒரே வழியாகும்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களும், பெரியார்-அம்பேத்கர் கொள்கைக் காப்பாளர் களும் அருள்கூர்ந்து இவற்றைப் புரிந்துகொள்ளவும், ஆய்வுசெய்யவும், ஆய்வில் சரி என்று படுவதை ஏற்று நடக்கவும் முன்வரவேண்டுமெனக் கோருகிறேன்.

பெரியார் கொள்கைகளை வென்றெடுக்க இவையே ஏற்ற வழிகள்.

பெரியார் கொள்கையை வென்று எடுப்போம், வாரீர்!

**(17.9.2008, "சிந்தனையாளன்")**

## வாலாசாபேட்டையில் மேதை அம்பேத்கர் பிறந்த நாள் விழா

மே 17 இயக்கத்தின் சார்பில் வாலாசாப் பேட்டை பேருந்து நிலையத்தில் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு சனநாயகம் காப்போம் என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மே 17, ஒருங்கிணைப்பாளர்கள் திருமுருகன் காந்தி, பிரவீன் குமார், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் ஆகியோர் உரையாற்றினர்.

## வெல்லட்டும் தமிழீழம் வீரவணக்கம் பொதுக்கூட்டம்

மே 17 இயக்கத்தின் சார்பில், மே 17, 2023 அன்று மாலை 5.30 மணிக்கு சென்னை, சைதாப்பேட்டையில் வெல்லட்டும் தமிழீழம் வீரவணக்கம் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வாலாசா வல்லவன், திருமுருகன் காந்தி, குடந்தை அரசன், பிரவீன் குமார், கொண்டல்சாமி, சுந்தரமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர்.

# சங் பரிவாரங்களின் ஆட்சியா? மக்களாட்சியா?



பேராசிரியர் **மு.நாகநாதன்**

புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறந்த பிறகு பல்வேறு செய்திகள் வந்தவண்ணமே உள்ளன. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையில் இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குடியரசுத் தலைவர் பிரதமர் முதலமைச்சர்கள், ஆளுநர்கள், உள்ளாட்சி அமைப்பின் தலைவர்கள் பற்றிய அதிகாரங்கள் தெளிவான முறையில் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்தந்த அமைப்புகளுக்கும் தலைவர்களுக்கும் வழங்கப்பட்ட அதிகார எல்லையை மீறி தன்னிச்சையாக தான்தோன்றித்தனமாக ஒன்றிய அரசின் நிருவாகம் செயல்படுவது பலருக்கு அதிர்ச்சியாகக்கூட இருக்கலாம்.

சனாதனத்தை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஆட்சியாக பாஜக ஒன்றிய அரசு செயல்பட வாய்ப்புள்ளது என்பதை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வரையறைக் குழுத் தலைவராக இருந்த அண்ணல் அம்பேத்கர் அன்றே கணித்து இருந்தார். அரசமைப்புச் சட்ட அவையில் 1948 நவம்பர் 4ஆம் நாள் அரசமைப்புச் சட்டத்தின் வரைவு (Draft) பற்றிய தீர்மானத்தில் அண்ணல் அம்பேத்கர் உரை நிகழ்த்திய போது, “அரசமைப்புச் சட்ட நெறிகளுக்கும் நிருவாகத்திற்கும் நெருங்கிய தொடர்பும் உறவும் உள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் நெறிகளை ஒட்டி நிருவாகம் இயங்கினால் சரியான முறையில் அமையும். அரசமைப்புச் சட்டத்தின் விதிகளை மாற்றாமலேயே நிருவாகம் அரசமைப்புச் சட்ட உணர்வுகளுக்கு எதிராகவும் முழு அளவில் செயல்பட வாய்ப்புள்ளது. அரசமைப்புச் சட்ட நெறியானது இயற்கையாக ஏற்படாது. அதனை வளர்த்தெடுக்க வேண்டும். நமது மக்கள் இதை உணர்ந்து புரிந்து செயல்பட வேண்டும். இந்தியாவின் ஜனநாயகம் இந்திய மண்ணின் ஒரு அலங்காரமாகும். அடிப்படையில் அது ஜனநாயகத்திற்கு எதிரானது (Constitutional morality is not a natural sentiment. It has to be cultivated. We must realize that our people yet to learn it. Democracy in India is only a top dressing on an Indian soil, which is essentially undemocratic)” ஆகும் என்று அறிவுறுத்தினார்.

இந்த அலங்காரத்தைத் தான் பிரதமர் நரேந்திரரின் உடை நடை பாவனையிலும் அதை வழி நடத்திய ஆகம வேதங்களை ஓதிய பார்ப்பனர்களின் செயல்களிலும் வேடிக்கை பார்த்து மகிழ்ச்சியால் துள்ளிய அரை நிர்வாண ஆதினங்களின் ஆட்டங்களிலும் காண முடிந்தது. இதுவரை புதிய நாடாளுமன்றத்தின் வெளி வடிவத்தைத்தான் பார்த்தார்கள். ஆனால் உட்புறம் செங்கோலைவிட ஆபத்தான ஒரு மதச்சார்பான சிலைகள் வடிவங்கள் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன என்பது வெளியாகி வருகிறது. கோல்களில் பல வகை உண்டு. அவற்றில் ஒன்று கண்ணக்கோல். செங்கோல் பிடிக்கும் ஒருவன் கண்ணக்கோல் பிடிக்கும் கள்வனென்றால் நீதியெங்கே குடியிருக்கும் என்ற ஒரு திரைப்படப் பாடல் வரிகள் இன்றைய புதிய நாடாளுமன்றக் காட்சிகளை அம்பலப்படுத்துவது போல் அமைந்துள்ளது அல்லவா?

இந்திய அரசியல் வரலாற்றை உன்னிப்பாக ஆய்வு செய்தால் காங்கிரசுக் கட்சி தொடக்கக் காலத்தில் எவ்வாறு செயல்பட்டது. காங்கிரசு இயக்கம் 1885ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட போது இருந்த கருத்துக்கு முற்றிலும் எதிரான இந்துத்துவா கருத்துகளைப் புகுத்த 1909ஆம் ஆண்டிலிருந்தே பல தலைவர்கள் முற்பட்டனர். 1885 டிசம்பர் 29 அன்று மும்பையில் நடந்த முதல் காங்கிரசு அமர்வில் அன்றைய



காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உமேஷ் சந்தர் பானர்ஜி மத, இன, மாநில வெறுப்புணர்வுகளை எல்லாம் கடந்து நாம் இயக்கத்தைக் கட்டமைக்க வேண்டும்; ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்று கூறினார். சுருங்கக் கூறின் ஒருங்கிணைந்த தேசியம் (Inclusive Nationalism) என்று இதை அழைக்கலாம். காங்கிரசின் இரண்டாவது தலைவராக இருந்த தாதா பாய் நௌரோஜி பிரித்தானியப் பொருளாதாரச் சுரண்டலை எதிர்த்துப் போராடி உள்நாட்டுப் பொருளாதாரக் கூறுகளை வளர்த் தெடுப்பதுதான் தேசியம் என்று கூறினார். குறிப்பாக 1886இல் உள்ள ஆவண அறிக்கையில் நாட்டினுடைய பொது நலன் களைக் கருதி இந்துக்கள் கிறித்தவர்கள் இசுலாமியர்கள் பார்சிகள் இடம் பெற்று பொதுவான மதச்சார்பற்ற தன்மைக் கூறுகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1895இல் காங்கிரசு தலைவராக இருந்த சுரேந்திர நாத் பானர்ஜி சீக்கியர்கள் பார்சிகள் கிறித்தவர்கள் இசுலாமியர்கள் இந்துக்கள் இணைந்த பொதுத்தளத்தில்தான் நாம் நிற்க வேண்டும். இதுதான் இந்தியாவை ஒருங்கிணைக்கும் காங்கிரசு அமைப்பாகும் (It is the Congress of United India) என்று குறிப்பிட்டார்.

ஆனால் காலப்போக்கில் இந்த நிலைமைகள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தோன்றிய பிறகு மாறத் தொடங்கியது. காங்கிரசு இயக்கத்தில் திலகர், லாலா லஜபதி ராய் போன்ற மதவாதப் பிற்போக்குத் தலைவர்களின் கருத்துகளால் காங்கிரசு இயக்கத்திற்குள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நுழைந்துவிட்டது. 1909க்குப் பிறகு எப்படிச் செயல்படத் தொடங்கியது என்ற உண்மைகள் தெரிய வரும். மதன் மோகன் மாளவியா 1909, 1932ஆம் ஆண்டுகளில் இரு முறை காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆனால் காங்கிரசு இயக்கத்தில் பங்கு பெற்றுக்கொண்டே அகில பாரத இந்து மகா சபா என்ற இந்துத்துவா அமைப்பை 1915இல் உருவாக்கினார். இந்த அமைப்பின் வழியாக இந்துத்துவா கொள்கைகள் காங்கிரசுக் கட்சியில் இடம் பெறுவதற்கு ஒரு அழுத்தம் தரும் அமைப்பாக இயக்கினார். இக்காலக்கட்டத்தில் 1925ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று விஜயதசமி நாளன்று அவரது இல்லத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்புத் தொடங்கப்பட்டது. கேசவ பாலிராம் ஹெட்கேவர் தலைமையில் ஆர்.எஸ்.எஸ்.தொடங்கிய நேரத்தில் அவருடன் பங்கு பெற்றவர்கள் மூஞ்சே, வி.டி.சவர்காரின் அண்ணன் பாபா ராவ் சவர்கார், பரஞ்ச்பே, வி.வி. தக்கார் ஆகிய 4 நபர்கள். இந்த 5 மத வெறியர்களால் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு பல்வேறு நிலைகளில் பல்வேறு வடிவங்களில் பல்வேறு தளங்களில் இந்தியா முழுவதும் ஊடுருவியது.

இந்தத் தீமையான ஒரு பாசிச வடிவத்தைக் கண்டு அஞ்சி மனம் நொந்த மோதிலால் நேரு, "1926ஆம் ஆண்டு தனது மகனான ஜவகர் லால் நேருவிற்கு ஒரு எச்சரிக்கை மடல் எழுதினார். அப்போது காங்கிரசுப் பல இடங்களில் தேர்தல்களில் போட்டியிட்டது. அதை உற்று நோக்கிய மோதிலால் நேரு மத வெறுப்புணர்ச்சியும் அதிக அளவில் வாக்காளர்களுக்குப் பணம் அளித்து ஊழல் செய்வதுதான் இன்றைய நடைமுறையாக உள்ளது. இதைக் கண்டு முழுமையாக நான் மனச்சோர்வை அடைந்துள்ளேன். பொது வாழ்விலிருந்து விலகிவிடலாமா என நான் கடுமையான முறையில் சிந்தித்து வருகிறேன். எனது வாழ்நாளை எப்படி இனிமேல் கழிப்பது என்பதில் கவலையுற்று உள்ளேன். கவுகாத்தி காங்கிரசு மாநாட்டிற்காகக் காத்திருக் கிறேன். அதுவரை அமைதியாக இருப்பேன். மாளவியா, லாலா லஜபதி ராய் கும்பல் பிர்லா அவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு காங்கிரசைக் கைப்பற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் (The Malavia-Lala gang aided by Birla's money are making frantic efforts to capture the congress)" என்று அம்மடலில் குறிப்பிட்டுள்ளார்.

1928ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் சைமன் குழுவிற்கு எதிராக லாகூரில் நடந்த ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கினார் லாலா லஜபதி ராய். அமைதியான முறையில் போராட்டம் அமைந்தாலும் பிரித்தானியக் காவல் அதிகாரி ஸ்காட், லாலா லஜபதிராயைக் கடுமையான முறையில் தாக்கினார். லாலா லஜபதி ராய் நவம்பர் 17 அன்று 1928ஆம் ஆண்டு மறைந்தார்.

அப்போது இந்தியாவில் பிரித்தானிய அடக்குமுறை ஒடுக்குமுறையை எதிர்த்து நிற்க எந்த ஆண்மகனும் இல்லையா? என்ற கேள்வியை வங்கத்தின் சிங்கம் என்று போற்றப்பட்ட சி.ஆர்.தாசின் மனைவியும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற வீராங்கனையுமான வசந்தி தேவி எழுப்பினார். ஆனால் இந்துத்துவா கொள்கைளை ஆதரித்த காங்கிரசுக் கட்சியின் சில தலைவர்களும் இந்து மகாசபையைச் சார்ந்தவர்களும் மௌனமாக இருந்தார்கள். இந்த எழுச்சிக் குரலைக் கேட்டு பிரித்தானியக் காவல் அதிகாரி ஸ்காட்டை பழி வாங்க முற்பட்டார் மாவீரர் பகத்சிங். ஆனால் ஸ்காட்டுக்குப் பதிலாக சான்டரஸ் என்ற மற்றொரு அதிகாரியைத் தான் பகத் சிங்கும் அவரது நண்பர்களும் பழி தீர்த்தார்கள். இதன் தொடர்ச்சியாக 1929 ஏப்ரல் 8 அன்று அன்றைய பாராளு மன்றமாக இயங்கிய மத்திய சட்டமன்றத்தின் மீது மாவீரர் பகத் சிங் தலைமையில் வெடிகுண்டு வீசப்பட்டது. மோதிலால் நேரு, ஜின்னா, மாளவியா ஆகியோர் அப்போது மன்றத்து நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருந்தனர்.

இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுக் கட்சியின் சார்பில் பகத் சிங் மற்ற தோழர்கள் இதில் பங்கு பெற்றனர். பிரித்தானிய ஏகாதிபத்தியம் ஒழிக என்று முழக்கமிட்டனர். வழக்கு விசாரணையைத் தீவிரப்படுத்திய பிரித்தானிய அரசு பகத் சிங், ராஜகுரு சுகதேவ் ஆகியோர்க்கு மரண தண்டனை வழங்கியது. மத்தியச் சட்டமன்றத்தில் இவ்வழக்குப் பற்றி ஜின்னா ஒருவர்தான் சிறந்ததொரு உரையை நிகழ்த்தினார். "இந்தத் தீவிரவாதத்திற்கு பிரித்தானிய ஏகாதிபத்தியம்தான் காரணம். வெடிகுண்டு வெடிக்கும் போது மத்திய நாடாளுமன்றத்தில்தான் இருந்தேன். எந்த உயிரிழப்பும் இல்லை. இந்த வழக்கைத் தீவிரப்படுத்தித் தண்டனை வழங்க பிரித்தானிய ஏகாதிபத்திய அரசு முயற்சி செய்வது தவறு" என்று சுட்டிக்காட்டினார். பலர்

மத்திய நாடாளுமன்றத்தில் பேசினாலும் பிரித்தானிய ஏகாதிபத்திய அரசு மரண தண்டனை வழங்கியது. அப்போது மீண்டும் ஜின்னா ஒரு கருத்தை முன்மொழிந்தார். இந்த வழக்கில் உரிய முறையில் விசாரணையை மேற்கொள்வதற்குப் பதிலாக பிரித்தானிய அரசு அவர்களை விசாரிக்க விரும்புகிறதா? அல்லது துன்புறுத்த விரும்புகிறதா? (do you wish to prosecute them or persecute them?) என்று ஜின்னா முழங்கினார். மேலும் நீதி நெறியைச் சிறிதளவாவது பின்பற்றுகிற எந்த ஒரு நீதிபதியும் மனச்சான்று இன்றி விசாரணை மாண்புகளைப் புறந்தள்ளி இது போன்ற மரண தண்டனையை வழங்க மாட்டார் என்றும் கூறினார். இது போன்ற பல நிகழ்வுகள் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து 1947 வரை நடந்தேறின. கோழை சாவர்கார் போன்றே இந்த இந்துத்துவாவாதிகள் பிரித்தானிய ஏகாதிபத்திய அரசுக்கு எதிராக வாய் திறக்கவில்லை. மாறாக பிரித்தானிய அரசை ஆதரித்தார்கள்.

காங்கிரசுக் கட்சிக்குள் ஊடுருவியதால்தான் 1947ஆம் ஆண்டு விடுதலைப் பெற்ற இந்தியாவில் ஜவகர்லால் தலைமையில் அமைந்த முதல் அமைச்சரவையில் இந்து மகா சபையைச் சார்ந்த சியாமா பிரசாத் முகர்ஜி முதன்மையான தொழில் துறை அமைச்சராகப் பொறுப்பேற்க முடிந்தது. 1948ஆம் ஆண்டு மகாத்மா காந்தி ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் படுகொலை செய்யப்படுகிறார். இந்தப் படுகொலைக்குச் சதித்திட்டம் தீட்டிய கோழை சாவர்கர் ஒரு கொடியவர் என்பதை இந்திய வரலாற்றின் பல நிகழ்வுகளில் காண முடிகிறது. தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று மன்னிப்புக் கடிதம் கேட்ட போது காந்தியின் ஆதரவைக் கோரியவர்தான் இந்த சாவர்கர். ஆனால் சனாதனவாதி என்று தன்னை அழைத்துக் கொண்ட காந்தி 1947க்குப் பிறகுத் தன் நிலையை மாற்றிக் கொள்கிறார். இந்து-முசுலிம் ஒற்றுமை பற்றிப் பேசுகிறார் என்பதால் தான் உரியக் காவல் துறை பாதுகாப்பு இன்றி இருந்த காந்தியைச் சுட்டுக் கொன்றான் கோட்சே.

ஆனால் இந்த வழக்கு விசாரணையின் போது சாவர்கர் மீண்டும் ஒரு கோழை போலச் செயல்பட்டான் என்பதை அண்மையில் வெளிவந்த கொலையாளி மன்னர் பக்கிரி (The Murderer-The Monarch and the Fakir, 2021) என்ற தலைப்பில் வந்த நூலின் ஆசிரியர்களான திரு.அப்பு எஸ்தோஸ் சுரேசு, பிரியங்கா கோட்டமாரு ஆகியோர் சாவர்கர் காந்தி கொலை வழக்கில் எப்படித் தொடர்புடையவர் என்பதைப் புதிய தரவுகளைக் கொண்டு பல கருத்துகளை முன் வைத்துள்ளனர். காந்தி கொலையாளிகளுடன் சாவர்கர் நீண்ட நாட்கள் தொடர்பில் இருந்தார் என்பதற்குப் பல தரவுகளை இந்நூலில் அளித்துள்ளனர். காந்தியைச் சுடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கோட்சே தனது ஆயுள் காப்பீட்டு ஆவணத்தைத் தன் பெயரில் இருந்து ஆப்தே மனைவி பெயரிலும் தனது தம்பி கோபால் கோட்சே பெயரிலும் மாற்றியுள்ளார். 1925ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு உருவாவதற்கும் சாவர்கர்தான் காரணமாக இருந்தார். சாவர்கர், ஆப்தே, கோட்சே ஆகிய மூவரும் பார்ப்பனர்களே என்று இந்நூலில் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு புதிய புதிய நூல்கள் வட நாட்டிலிருந்து வெளியிடப்படும் நேரத்தில் கோழை கொலைகார சாவர்கர் பிறந்தநாளில் புதிய நாடாளுமன்ற வளாகத்தினைத் திறப்பது எத்தகைய மோசடி என்பதை மக்கள் உணரும் காலம் வந்துவிட்டது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நேரடியான இந்துத்துவா கொள்கையைப் பரப்பும் அமைப்புகள் இந்து மகாசபை, விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தளம், ராம ஜென்ம பூமி அறக்கட்டளை, இந்து ஜனஜாக்குருதி சமிதி, வீடு திரும்புதல் தர்ம ஜாக்ரண் சமிதி (இந்துக்களிலிருந்து மதம் மாறியோரை மீண்டும் இந்துக்களாக மதம் மாற்றும் அமைப்பு) முஸ்லிம் ராஷ்டிரிய மஞ்ச் (முஸ்லிம்களின் வளர்ச்சிக்கான அமைப்பு) ராஷ்டிரிய சீக்கியர் இயக்கம், இந்து முன்னணி, தமிழ்நாடு இந்து இளைஞர் சேனை, விராட் இந்துஸ்தான் சங்கம் என்று பல வடிவங்களில் உள்ளன.

மக்களுக்குத் தொண்டு செய்யும் அமைப்புகள் என்ற பெயரில் ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு வடிவங்களில் இந்த அமைப்புகளுக்கு உதவி செய்யும் அமைப்புகள் உள்ளன. இவை செய்யும் நிதி மோசடிகள் எத்தகையன என்பதை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கடந்த சட்டமன்றத் தொடரில் சுட்டிக் காட்டினார். தொண்டு நிறுவனம் என்ற போர்வையில் இயங்கி வரும் அட்சய பாத்திரம் என்ற அமைப்பு இந்துத்துவா சார்புடையது. இந்த அமைப்புக்குச் சட்டத்திற்குப் புறம்பாக நிலம் எடப்பாடி ஆட்சியில் அதிமுக அரசு மிரட்டப்பட்டு வழங்கப்பட் டுள்ளது. தமிழக மக்கள் அளிக்கும் வரிப்பணத்தில் பல கோடி ரூபாயை இந்நிறுவனத்திற்கு ஆளுநர் இரவி நிதி விதிகளுக்குப் புறம்பாக மாற்றம் செய்துள்ளார் என்று சட்டசபையிலேயே அறிவித்தார். இதுவரை இது தொடர்பாக ஆளுநர் இரவி எந்தவித உரிய விளக்கத்தையும் அளிக்க முன் வரவில்லை.

இதுபோன்ற தொண்டு நிறுவனங்கள் என்ற பெயரில் அதானி, அம்பானி போன்ற குஜராத்திய நிறுவனங்களும் மற்றைய முதலாளித்துவ நிறுவனங்களும் ஏராளமான நிதியுதவிகளை அளித்து வருகின்றன. இதைப் பற்றி உரிய ஆய்வை நேர்மையான உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் மேற்கொண்டால் பல உண்மைகள் வெளிவரும். இராமாய ணத்தில் வாலியை மறைந்திருந்து தாக்கிய இராமன் காட்டிய சதி வழிதான் இந்த சங்க பரிவாரங்களின் நடைமுறையாகும். இதற்குப் பல முன்னுதாரணங்கள் உண்டு. 1951ஆம் ஆண்டு இந்துத்துவாவின் அரசியல் வடிவான ஜனசங்கத்தை உருவாக்கியவர் சியாமா பிரசாத் முகர்ஜி. ஜனசங்கம் அரசியல் கட்சியாக உருவெடுத்த பிறகு அதற்கு நானாஜி தேஷ்முக், பால்ராஜ மத்தோக் போன்ற தலைவர்கள் இணைந்து பணி யாற்றினார்கள். இந்த இரு தலைவர்களும் தங்களின் அரசியல் நடவடிக்கைகளில் ஆர்.எஸ்.எஸ். தலையிடுகிறது என்று குற்றம் சாட்டினர். இவர்கள் பதவியில் நீடிக்க முடியவில்லை.

இரத யாத்திரை மேற்கொண்டு இந்தியாவில் மதவெறியைத் தூண்டிய அத்வானி, ஆர்.எஸ்.எஸ். கூறியதனால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். 2005ஆம் ஆண்டு சென்னையில் கூடிய பாரதிய ஜனதா கட்சியின் கூட்டத்தில் இவரை அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். வலியுறுத்தியது. வாஜ்பாய் வலியுறுத்தியதனால் அத்வானி

நீக்கப்படவில்லை. இந்த அத்வானி யார்? 2002இல் குஜராத்தில் கலவரம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான இசுலாமியர்கள் கொல்லப்பட்ட போது முதல்வராக இருந்த நரேந்திர மோடியைப் பதவி விலக வேண்டும் என்று பலரும் வலியுறுத்திய போது அதைத் தடுத்து நிறுத்திக் காப்பாற்றியவர்தான் அத்வானி.

அத்வானி மீது ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு ஏன் இந்தக் கோபம்? 2005ஆம் ஆண்டு மே மாதம் அத்வானி பாகிஸ்தானிற்குச் சென்ற போது அங்கு இருந்த பாரதப் போரைச் சித்தரிக்கும் ஒரு கோயிலுக்குச் சென்றார். அதற்குப் பிறகு ஜின்னா நினைவிடத்திற்குச் சென்றார். இந்தியாவை விடச் சிறந்த முறையில் இந்துக் கோயில்களை மிகவும் தூய்மையான முறையில் பாகிஸ்தான் பாதுகாக்கிறது என்று குறிப்பிட்டார். ஜின்னாவை ஒரு தேசியத் தலைவர் என்று குறிப்பிட்டார். சில மாதங்களிலேயே இவர் தலை உருண்டது. பாஜக ஆட்சிக்கு வருவதற்கு காரணமாக இருந்த மோடியைக் காப்பாற்றிய அத்வானி எங்கே இருக்கிறார்? வாஜ்பாயின் அமைச்சரவையில் நிதியமைச்சராக பணியாற்றிய ஜஸ்வந்த் சிங் ஜின்னாவைப் பற்றி 2009ஆம் ஆண்டு ஒரு நூல் எழுதினார். இவரும் தூக்கியடிக்கப்பட்டார். துரத்தப்பட்டார். இன்னொருவர் யஷ்வந்த சின்கா. சங்க பரிவாரங்கள் இவரை விரும்பவில்லை. இவரும் தூக்கியடிக்கப்பட்டார்.

இந்தியக் காங்கிரசுக் கட்சியில் இணைந்து பணியாற்றிய தமிழகத்தைச் சேர்ந்த ஆர்.வெங்கட்ராமன் காமராஜர் அமைச்சரவையில் தொழில்துறை அமைச்சராகப் பணியாற்றியவர். 1976இல் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட போது காங்கிரசை விட்டு விலகி நின்றார். மீண்டும் 1980இல் காங்கிரசு ஒன்றிய அரசில் ஆட்சியமைத்த போது நிதியமைச்சராக, பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பணியாற்றிப் பின்பு துணைக் குடியரசுத் தலைவராகவும் குடியரசுத் தலைவராகவும் பணியாற்றினார்.

2004இல் ஜெயலலிதா ஆட்சியில் சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சி சங்கராச்சாரியார் ஆந்திராவில் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இதைக் கண்டித்து தில்லியில் உண்ணாநிலைப் போராட்டத்தில் வாஜ்பாயுடன் இணைந்து வெங்கட்ராமன் கலந்து கொண்டார். அப்போது காங்கிரசுத் தலைமையிலான கூட்டணி ஆட்சியில் நிதி அமைச்சராகப் பணியாற்றிய பிரணாப் முகர்ஜி அமைச்சரவைக் கூட்டத்திலேயே மாநில அரசிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இதே பிரணாப் முகர்ஜி குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து 2017இல் ஓய்வு பெறுகிறார். 2018இல் நாக்பூர் சென்று ஆர்.எஸ்.எஸ். கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகிறார். 2019இல் பிரணாப் முகர்ஜிக்கும் ஜனசங்கத்தின் தலைவராக இருந்து நானாஜி தேஷ்முக்கிற்கும் பாரத ரத்னா விருது வழங்கப்படுகிறது. இத்தகைய நிகழ்வுகள் எல்லாம் 2014இல் பாஜக நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசை ஆட்டிப்படைப்பது சங்க பரிவாரங்கள்தான் என்பதையே உறுதி செய்கின்றன.

1966 நவம்பர் 7 அன்று காங்கிரசு ஆட்சியில் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராக இருந்தப் பெருந்தலைவர் காமராஜரின் இல்லம் ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரங்களால் தாக்கப்பட்டது. அப்போது தில்லியில் ஒன்றிய அரசின் கல்வி ஆலோசகராக இருந்த கல்வி நெறி காவலர் நெ.து.சுந்தர வடிவேலு இந்தத் தாக்குதல் சம்பவத்தை நினைவலைகள் என்ற நூலில் குறிப்பிடுகிறார். தங்கள் வீடு தாக்கப்பட்டதா? என்று ஆம்பூர் ராஜகோபால் நாயுடு வினவினார். ''ஆமாங்கறேன். இன்று மத்தியானம் என் வீட்டைச் சுற்றி கலாட்டா செய்தார்களாம். எனக்கு ஒன்றும் தெரியாது. நான் வழக்கம் போலப் பகல் உணவு உண்டதும் போய் உறங்கிவிட்டேன். தூங்கிக் கொண்டிருந்த என்னை உதவியாளர் அம்பி வந்து எழுப்பி ஒன்றும் சொல்லாமல் நேரே பின்பக்க நுழைவாயிலின் வழியாக அழைத்துச் சென்று காரில் ஏற்றி இங்குக் கொண்டு வந்துருக்கான். வருகிற வழியில் சாமியார்கள் என் வீட்டை முற்றுகையிட்டார்கள். தீ மூட்ட முயன்றார்கள். அவ்வளவே எனக்குத் தெரியும். வெறிப்பயல்கள் இருந்தால் என்ன செய்திருப்பார்களோ சொல்ல முடியாது'' எனக் கலகலப்பாக காமராஜர் பதில் கூறினார். 1948இல் காந்தி கொலை செய்யப்பட்டார். காமராஜர் இல்லம் 1966ஆம் ஆண்டு தாக்கப்பட்டது.


சாதி வெறி, கொலை வெறி, மதவெறி தளங்களில்தான் சனாதனம் இயங்குகிறது. தமிழ்நாட்டில் மட்டும்தான் இவர்களுடைய ஆட்டம் முழு அளவில் நடைபெறவில்லை. இதன் தொடர்ச்சிதான் புதிய நாடாளுமன்ற வளாகத் திறப்பும் தொடர்ந்து நடைபெற்ற சனாதன ஆதிக்க நிகழ்வுகளும் என்பதைப் பறைசாற்றுகின்றன. சங்க பரிவாரங்களின் சர்வாதிகார ஆட்சிதான் ஒன்றிய அரசில் கோலோச்சுகிறது என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்வு என்ன என்பதை ஆந்திராவைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் மனித உரிமை செயல்பாட்டாளர் மறைந்த கே.ஜி.கண்ணபிரான் எழுதிய இந்திய அரசமைப்புச் சட்டம் பேசுகிறது (The Speaking Constitution, 2022, p.194) என்ற நூலில் சுட்டப்பட்டுள்ளது.

பழமைவாதத்தையும் தெளிவில்லாத மதம் சார்ந்த கருத்துகளையும் தான் உயர்ந்த சாதி என்ற எண்ணத்தையும் மக்கள் மீது பார்ப்பனர்கள் திணித்ததற்கு எதிராகச் சுயமரியாதை இயக்கத்தின் வழியாகப் பெரியார் ஈ.வெ.ராமசாமி ஓர் அறிவுப் போரைத் தொடுத்தார். இத்தகைய உறுதியான மரபு அழியாமல் தொடர்வதுதான் பிரேமானந்தாவையும் சங்கராச்சாரியாரையும் சட்டத்தின் வழியாகத் தண்டிப்பதற்கு உதவியது என்று விளக்கி திராவிடம் ஒன்றே ஆரியத்தைச் சாய்க்கும் அறிவாயுதம் என்பதை மூத்த வழக்கறிஞர் கண்ணபிரான் தனது நூலில் அழகுறத் தெளிவுறக் குறிப்பிட்டுள்ளார்.

சனாதனம் சாய, மாநிலங்கள் முழு உரிமை பெற, மதச்சார்பின்மை தழைத்தோங்க, பன்முகத் தன்மைகள் மீண்டும் ஏற்றம் பெற சங்க பரிவாரங்களின் அடிமையாகச் செயல்படும் ஒன்றிய ஆட்சி வீழ்த்தப்பட வேண்டும். அப்போது தான் மக்கள் ஜனநாயகம் மீண்டும் உயிர்த்தெழும். ●

**தோழர் வே.ஆனைமுத்து 99ஆம் பிறந்த நாள் - சூன் 21**

# மார்க்சியப் பெரியாரியம் தோழர் வே. ஆனைமுத்துவின் முன்னோக்கு




**(மார்க்சியத்திற்கு இசைந்த கொள்கையே பெரியாரியல் என்பதை நிறுவியதில் தோழர் வே. ஆனைமுத்துவின் பங்களிப்பு)**

- சா.குப்பன்

பெரியார் சிந்தனைகளை - பெரியார் கொள்கைகளை - பெரியாரியலை தமிழ்ச் சமுதாயத்தில் நிலைக்கச் செய்வதைத் தன் வாழ்நாள் பணியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதற்காகவே உழைப்பது, எவ்வளவு இன்னல் வரினும் ஏற்பது என்ற பாதையில் பயணித்தவர் தோழர் வே. ஆனைமுத்து.

பற்பல ஏடுகளில் பல்லாயிரக்கணக்கானப் பக்கங்களில் பரவி, விரவிக் கிடந்த பெரியாரின் எழுத்துகளை, உரைகளைப் பொறுக்கித் தேர்ந்தெடுத்து, பகுத்துத் தொகுத்தளித்ததோடு அல்லாமல், எந்தச் சூழலில் எந்த நோக்கத்திற்காகக் கூறப் பட்ட கருத்துகள் அவை என விளக்கமளிப்பது என்பதோடு நில்லாமல் காலத்திற்கு ஏற்ப பெரியாரியலை செழுமையாக்குவது என்பதையும் தம் தோள் மேல் போட்டுப் பாடாற்றியவர் தோழர் வே.ஆனைமுத்து.




*“கொலைமலிந்த நாளில் கொல்லா நோன்பு*
*நிலைபெற வேண்டி நெடுந்தவம் புரிந்தநம்*
*தாயகம் சமண்மதம் தனைப்பெற்ற தன்றோ?*
..........
*மக்கள் தொகுதி எக்குறை யாலே*
*மிக்க துன்பம் மேவு கின்றதோ*
*அக்குறை தீர்க்கும் ஆற்றல்வாய்ந்*
*தோனை*
*சிக்கென ஈன்று சீர்பெறல் இயற்கையாம்.*
*ஜாரின் கொடுமை தாங்கா உருசியம்*
*ஏகுற வெனினை ஈன்றே தீரும்!”*

என்று புரட்சிப் பாவலர் பாரதிதாசன் எடுத்துக்காட்டியது போல பிரித்தானிய அரசினுடைய அரவணைப்புடன் கோலோச்சிக் கொண்டிருந்த பார்ப்பன வல்லாதிக்கத்தினால் வெகுமக்க ளுக்குக் கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட் டிருந்தது; அரசு வேலை வாய்ப்பு பெறும் உரிமை தடுக்கப்பட்டிருந்தது. உரிமை மறுப்புகளால் அமுக்கப்பட்டுக் கிடந்த சென்னை மாகாணப் பார்ப்பனரல்லாத மக்களின் தன்மானத்தைத் தட்டி எழுப்பி நிமிரச் செய்த உரிமை மீட்பராக எழுந்த மாமனிதர் பெரியார் ஈ.வெ.இரா.

*“வரலாற்றில் புத்தருக்கு*
*வாய்த்திட்ட தொண்டர் போலப்*
*பெரியாருக்குச் சரியாய் வாய்த்த*
*பெருந்தொண்டர் ஆனை முத்து*
*சரியான முறையில் அய்யா*
*தத்துவம் தனைஉள் வாங்கி*
*விரிவாக்கி செழுமையான*
*வீச்சோடு வழங்கும் வீரர்”*

என எழுச்சிப் பாவலர் தமிழேந்தி எடுத்தியம்பியது போல் பல ஏடுகளிலும் இருந்த பெரியாரின் எழுத்துகளைத் தேடித் திரட்டி, படித்து, ஆய்ந்து, தெரிவு செய்து, தலைப்பு முறையில் காலவரிசையில் நிரல்படுத்தித் தொகுத்து ஒப்பரியக் கொடையாக “பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்” என்ற பெயரில் நூல்களாக்கித் தமிழர்களுக்குத் தந்தார். (1974-இல் 2100 பக்கங்களில் (இராயல் அளவு) 3 தொகுதிகள்; 2010இல் 9300 பக்கங்களில் 20 தொகுதிகள்).

**பெரியாரியல்**

பெரியாரின் கொள்கைகளை உள் வாங்கி, பிழிவாகப் ‘பெரியாரியல்’ என்பதை ஒரு மெய்யியலாக நிறுவியவர் அறிஞர் வே. ஆனைமுத்து.

வே.ஆனைமுத்து பிழிவாகத் தந்துள்ள பெரியாரின் கொள்கைகள் :

1. பிறவியில் மேல்தன்மை - கீழ்த்தன்மை, உயர்வு-தாழ்வு கற்பிக்கும் வருண-சாதி வேறுபாடு அழிக்கப்பட வேண்டும். இதனை மக்களுக்கு உணர்த்த, சுயமரியாதை மக்கள் பிறப்புரிமை என்ற அறிவிப்பு.

2. நாட்டின் செல்வப் பெருக்குக்கும், வளர்ச் சிக்கும் அடித்தளமாக விளங்குகிற உழைக்கும் மக்களை அவர்கள் சுரண்டப்படுவதிலிருந்து விடுதலை அடையச் செய்து சுரண்டல் அற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் (சோசலிச அமைப்பு நிறுவுதல்).

3. தாம் பிறந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்கள் இன்னொரு நாட்டினருக்கோ, மொழியினருக்கோ கட்டுப்பட்ட அடிமை களாக இருப்பதிலிருந்து விடுதலை பெறச் செய்ய வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் உலகில் பிற நாடுகளில் உள்ள மக்களின் நிலைக்கொத்த மேலான நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும்.

3. (அ) வருண-சாதி வேறுபாட்டைக் காக்கும் நோக்குடன் சாத்திர, புராண அடிப்படைகளில் கற்பனையாகச் செய்யப்பட்ட சடங்குகளையும் பார்ப்பன புரோகிதத் தையும் அடியோடு ஒழிக்க வேண்டும்.

3. (ஆ) ஸ்மிருதிகளின் அடிப்படையிலும், இதிகாசங்கள், புராணங்களின் அடிப்படையிலும் கற்பனையாக செய்யப் பட்ட பெண் அடிமைத்தனத்தை அடியோடு நீக்க வேண்டும்.

3. (இ) வருணாசிரம - சாதி அமைப்புத் தகர்க்கப்படாமல் இருக்கின்ற வரையில் அரசுக் கல்வியிலும் வேலை களிலும் அனைத்து வகுப்பு மக்களுக்கும் (all communities) அந்தந்த வகுப்பு மக்கள் தொகைக்கு ஏற்ப வகுப்புவாரியாக இடஒதுக்கீடு தரப்பட வேண்டும்.

1924-இல் பெரியார் தலைமை ஏற்று நடத்திய வைக்கம் கிளர்ச்சி, அந்த நகரத்தின் நடுவில் இருந்த சிவன் கோவிலின் நான்கு பக்கங்களிலும் இருந்த சாலைகளில் நடந்து செல்ல தடைசெய்யப்பட்டிருந்த அவர்ணஸ்தர் எனும் பத்து சாதிகளைச் சார்ந்த மக்கள் நடந்து செல்லும் உரிமைக்காக நடத்தப்பட்டதாகும். அனைத்து இந்தியாவிலும் பொது இடங்களைப் பயன்படுத்திட மக்கள் அனைவருக்கும் சம உரிமை இருத்தல் வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்டு, வெற்றி ஈட்டிய முன்னோடியானதொரு வரலாற்று நிகழ்வு ஆகும். பின்னர் நடத்தப்பட்ட பிள்ளையார் உடைப்புப் போராட்டம், இராமன் பட எரிப்புப் போராட்டம், கம்ப இராமாயண எரிப்புப் போராட்டம், சாதியமைப்பைப் பாதுகாக்கும் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் எரிப்புப் போராட்டம் என பெரியார் முன்னெடுத்தப் போராட்டங்கள் அனைத்தும் சாதி இழிவு நீக்கம் அல்லது சம உரிமைக்கான போராட்டம் என மேலே சொல்லப்பட்ட கொள்கைகள் அடிப்படையில் புரிந்துகொள்வோம்.

**மார்க்சியப் பெரியாரியம்**

"சுயமரியாதை இயக்கம்" என்பதே மார்க்சியப் பெரியாரியம் தான். அது பழைய சொல்லாட்சி - வழக்கு; அவ்வளவே. சுயமரியாதை என்பது வருணாசிரம - சாதி ஒழிப்பு; பிறவி அடிப்படையிலான உயர்வு-தாழ்வுக்குக் காரணமான ஸ்மிருதி கள், சாத்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள், விதிக்கோட் பாடுகள், மதம், கடவுள் ஆகியவற்றை மறுத்தது என்பதன் திரட்சி எனக் கொள்ளலாம்.

பெரியார் 1928 முதலே "சமதர்மம் என்றால் என்ன? இது ஒரு சமுதாய அமைப்புத் திட்டம். அதற்கேற்ற ஆட்சி முறை வகுக்க வேண்டும்; அதற்கேற்றவர்கள் ஆட்சி பீடத்தை அடையும்படிச் செய்ய வேண்டும்" என்றார். 07.11.1928-இல் Revolt - ரிவோல்ட் எனும் ஆங்கில வார ஏட்டைத் தொடங்கி நடத்தினார். பெரியாருக்கு பொதுவுடைமைக் கொள்கையின் பால் ஏற்பட்ட பற்றுறுதி காரணமாகவே 14.02.1932 முதல் 17.05.1932 முடிய 94 நாள்கள் உருசியா - சோவியத்து சோசலிசக் குடியரசுகள் ஒன்றியத்(U.S.S.R.)தில் பல இடங் களுக்கும் விரிவாகப் பயணம் செய்து பல செயல்பாடுகளை உற்றுநோக்கிக் கவனித்து வந்தார்.

1933-இல் "இன்றைய ஆட்சிமுறை ஏன் ஒழிய வேண்டும்?" என்ற கட்டுரையை குடிஅரசு ஏட்டில் எழுதியதற் காக பெரியார் பிரித்தானிய அரசால் தண்டிக்கப்பட்டார். அவரது தங்கை கண்ணம்மா அவ்வேட்டின் பதிப்பாளர் என்பதற்காகத் தண்டிக்கப்பட்டார். பெரியாருக்கு கோவையில் இராச நிந்தனை வழக்கில் 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 21.02.1934 முதல் இராசமகேந்திரபுரம் சிறையில் அடைக்கப்பட்டு 15.5.1934-இல் விடுதலை செய்யப்பட்டார்.

மேற்சொன்ன விவரங்களைத் திரட்டி நிரல்படுத்தி மக்களுக்கு விளங்க வைத்தவர் வே. ஆனைமுத்து அவர்கள் ஆவார்.

"காட்டுமிராண்டித்தனமான - தற்பெருமை குணம் கொண்டவர்களாகவும் இந்திய மக்கள் இருந்ததை நாம் மறந்து விடக் கூடாது... சிறிய சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமைத்தனத்தினாலும் பீடிக்கப்பட்டிருந்தன என்பதையும், அதனால் சூழல்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற அளவுக்கு மனிதனை உயர்த்துவதை விட்டுவிட்டு, புறச்சூழல்களுக்கு மனிதன் அடிமையாவதை ஏற்றிருந்தனர் என்பதையும் மறந்துவிடக் கூடாது... இயற்கையை வென்றிருக்க வேண்டிய மனிதனின் நிலையைத் தாழ்த்திக் கொண்டு மண்டியிட்டு அனுமான் என்கின்ற குரங்கையும், பசுவையும் கடவுளாக மதித்து வணங்குகின்ற நிலைக்கு மக்கள் ஆளாகிவிட்ட தையும் நாம் மறந்துவிடக் கூடாது."

(Marx - Engels - The First Indian War of Independence 1857-1858, நூல் பதிப்பு 1978, ப.16, 17, 18)

இப்படிப்பட்ட சமூக அமைப்பைக் கொண்ட இந்தியாவில், சமுதாயத்தில் தலைகீழ் மாற்றத்தையும் மக்களின் சிந்தனை யில் ஒரு பெரும் புரட்சியையும் தம் வாழ்நாள் காலத்திலேயே கண்டுவிட வேண்டும் என்கிற மானிடப் பற்றோடும், கவலையோடும், பற்றுறுதியோடும் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு 50 ஆண்டுக்காலம் இடையீடும் ஓய்வும் இன்றி முழு நேரமும் பணியாற்றிய பெரியார் ஈ.வெ.இரா. அவர்களின் கொள்கைகள் பேராசான் காரல் மார்க்சு உரைத்த விஞ்ஞான சோசலிசப் பாதைக்கு இசைவானது என்பதைத் தமிழ் மக்களுக்கு விளங்க வைத்திடத் தன் எண்ணத்தாலும், எழுத்தாலும், பேச்சாலும், செயல்களாலும் இடையறாது உறுதியோடு பாடுபட்டவர் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்கள் ஆவார்.

"உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மை களில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருந்து வருகிறது. அதென்னவென்றால் மற்ற நாடுகளில் ஒரு விஷயந்தான் முக்கியமாகக் கருதப்படுகிறது. அதாவது, முதலாளி (பணக்காரன்) - வேலையாள் (ஏழை) என்பதுவேயாகும். ஆனால் இந்தியாவிலோ மேல்சாதியார் - கீழ்ச்சாதியார் என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையான தாகவும் இருப்பதால் அது பணக்காரன் - ஏழை தத்துவத்

திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறது.'' (குடிஅரசு 4-10-1931)

பெரியாரின் இந்தக் கருத்து இந்தியாவில் சமதர்மம் (சோசலிசம்) மலர வேண்டும் என்பதையும் இந்திய சமுதாய அமைப்பில் சோசலிசம் வரச் செயற்கையாக உள்ள முதன் மையான தடை சாதியக் கட்டமைப்பு என்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுவதாகும்.

''சோசலிசவாதிகள் ஒருங்கிணைந்த புரட்சிகர வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அவர்கள், தாங்கள் வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ள சூழல்களைக் கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டும். விஞ்ஞான சோசலிசம் என்பது எல்லாவிதமான சூழல்களுக்கும் ஏற்றதான அனைத்து நோய்களுக்குமான தீர்வு போன்ற ரெடிமேடு மருந்துச் சரக்கு என சோசலிசவாதிகள் கருதிவிடலாகாது. ஒரு சோசலிசவாதி, தான் செயல்படும் சூழ்நிலையில், அந்தச் சூழ்நிலை உருவானதற்கான வரலாற்று நிலைமையிலான காரணங்களை முற்றிலும் தழுவியதாகவே அவர் மேற் கொள்ளும் சோசலிச வேலைத் திட்டம் அமைந்திருக்க வேண்டும்.'' (Karl Marx - A Biography - Progress Publishers - Moscow 1973, P.557 & Marx and Engels Selected Correspondences, P.337).

காரல் மார்க்சு மேற்சுட்டியதைத் தான் பெரியார் இங்கு மேற்கொண்டு பிறவி வருண-சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்புக்கு முதன்மை தந்து பணியாற்றினார் என்பதை எடுத்துக்காட்டி பெரியாரின் சமதர்மப் பாதை என்பது விஞ்ஞான சோசலிசமே என்பதைத் தெளிவுபடுத்தியதில் வே. ஆனைமுத்து முன்னோடி ஆவார்.

மார்க்சிய மெய்யியலின்படி சமூகத்தின் அடித்தளமாக விளங்குபவை உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திக் கருவிகள், உற்பத்தி உறவுகள் ஆகும். இவற்றின் அமைப்புக் காரண மாக அந்தந்தக் காலத்தில் தோன்றிய மேல் கட்டுமானங்கள் என்பவை-மதம், சாதி, அரசியல் கொள்கைகள், நீதித்துறை, சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் இவற்றைச் சார்ந்தே வளர்ந்துவிட்ட கருத்துகள், தேற்றங்கள், சமுதாய உணர்ச்சி கள், இயல்புகள் முதலியவைகளாகும்.

இயங்கியல் பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள் முதல்வாதம் கற்பிப்பது இதுதான். இந்தியாவில் உள்ள சமுதாய அமைப்பில் சாதி பெற்றுள்ள உண்மையான இடத்தைக் கொண்டும் ஆய்வு செய்ய வேண்டும்.

''சாதி அமைப்பு என்பது இங்கு மேல்கட்டுமானமாக மட்டும் இல்லாமல், சமுதாய அடித்தளத்தின் பிரிக்க முடியாத ஒரு கூறாக ஆகிவிட்டது. இன்றும் அது அப்படியே இருக் கிறது'' என்று பெரியார் திடமாகக் கருதினார்.

''சாதி அமைப்பு இங்கு மேல் கட்டுமானங்களுள் ஒன்றாக மட்டும் இல்லை. சாதியானது உற்பத்திச் சாதனங் கள், உற்பத்திக் கருவிகள், உற்பத்தி உறவுகள் என்கிற சமூகப் பொருளாதார அடித்தளத்தின் பிரிக்க முடியாத பகுதியாக இன்றும் இருக்கிறது'' என்பது தோழர் வே. ஆனைமுத்துவின் விளக்கம் ஆகும்.

பெரியார் 29.9.1945-இல் திருச்சியில் நடந்த நீதிக்கட்சி மாநாட்டில்,

''திராவிட நாடு (சென்னை மாகாணம்) சமுதாயம், பொருளாதாரம், தொழில்துறை, வியாபாரம் ஆகியவற்றில் பூரண சுதந்தரமும் ஆதிக்கமும் பெற வேண்டும்.

திராவிட நாடும், திராவிட மக்களும், திராவிட நாட்டவ ரல்லாத அந்நியர்களின் எந்தவிதமான சுரண்டல்களிட மிருந்தும் ஆதிக்கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு காப்பாற்றப்பட வேண்டும்.

திராவிட நாட்டில் உள்ள மக்கள் யாருவம் சாதி, வகுப்பு, அவை சம்மந்தப்பட்ட உயர்வு-தாழ்வு இல்லாமல் சமுதாயத் திலும் சட்டத்திலும் சமஉரிமையும் சம சந்தர்ப்பமும் பெற்று சமவாழ்வு வாழச் செய்ய வேண்டும்'' என்று கூறினார்.

1956-இல் மொழிவழி மாநிலம் பிரிக்கப்பட்ட பின் திராவிட நாடு கோருவது தமிழர்களுக்குத் தொடர்பில்லாதது என அறிவித்து சுதந்தரத் தமிழ்நாடு என்ற கோரிக்கையை பெரியார் முன்வைத்தார்.

''எல்லாத் தேசிய இனங்களுக்கும் சமத்துவமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். எல்லாத் தேசிய இனங் களுக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும். எல்லாத் தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களை ஒன்றிணைக்க வேண்டும்... மார்க்சியம் தொழிலாளர் களுக்குக் கற்பிக்கும் தேசியம் பற்றிய வேலைத் திட்டம் இதுவே ஆகும்'' என்று இலெனின் அறிவித்தார். (V.I. Lenin selected works in 3 volumes, Vol.I, P.616)

இதையே,

''ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே ஒன்று சேருங்கள்!'' எனத் தோழர் வே. ஆனைமுத்துவின் தலைமையில் இயங்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் மூன்று இலட்சிய முழக்கங்களுள் ஒன்றாக 1984 முதல் கொள்ளச் செய்தார்.

மேலும் மார்க்சியத்துடன் பெரியாரியத்தை இணைத்தது போலவே அம்பேத்கரியத்தையும் இணைத்ததில் வே. ஆனைமுத்து அவர்களே முதல் முன்னோடி. இதைப் பற்றித் தனியானதொரு கட்டுரையில் காண்போம்.

மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம் ஆகியவற்றின் இசைவான தன்மைகளை எடுத்துக்காட்டியதில் முதல் முன்னோடி வே.ஆனைத்து அவர்களே! இன்று தமிழ்நாட்டில் முற்போக்குக் கட்சிகள், இயக்கங்கள் மேற்காணும் மூன் றையும் ஏற்றுள்ளதற்குக் காரணர் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களே!

தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் வழியில் கொள்கைப் பயணத்தைத் தொடர அவரது கருத்துக் கருவூலத்தைக் கற்று உந்தாற்றல் பெறுவோம்! ●

# பற்றி எரிகிறது மணிப்பூர் மாநிலம்



- வாலாசா வல்லவன்

மணிப்பூர் தனி மாநிலமாக 21.1.1972-இல் உதயமானது.

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மணிப்பூர் மக்கள் தொகை

இந்துக்கள் 41.39 விழுக்காடு
இசுலாமியர்கள் 8.40 விழுக்காடு
கிறித்துவர்கள் 41.29 விழுக்காடு
சீக்கியர்கள் 0.05 விழுக்காடு.

மணிப்பூரின் தலைநகரம் இம்பால். அதை ஒட்டிய சமவெளிப் பகுதிகளில் 'மெய்த்தேயி' (Meitei) இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 53 விழுக்காடு உள்ளனர். இவர்களில் பெரும்பாலனவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள். கிருட்டிணரை வழிபடுபவர்கள். வேளாண் மைத் தொழிலே முதன்மையான தொழிலாகக் கொண்டவர்கள். பழங்குடி மக்களைக் காட்டிலும் வளமாக உள்ளவர்கள். இவர்களே ஆட்சியதிகாரத்திலும் ஆதிக்கம் செலுத்துவோராக உள்ளனர். 1992-இல் மண்டல் ஆணையத்தின் பரிந்துரை நடை முறைக்கு வந்த பிறகு இவர்கள் இதரப் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மணிப்பூர் மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை அறுபது பேர். இதில் மெய்த் தேயி இனத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் நாற்பது பேர்.

மணிப்பூர் மாநிலத்தின் மலைப் பகுதிகளில் முப்பத்து நான்கு வகையான மலைவாழ் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இதில் முதன்மையானவர்கள் குக்கி-சோமி (Kukki-Zomi) நாகா இனத்தவர் ஆவர்.

இவர்கள் மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். மணிப்பூர் மக்கள் தொகையில் இவர்கள் 40.88 விழுக்காடு ஆவர். மலைவாழ் பழங்குடியினருக்கான (ST) பிரிவில் இவர்களுக்கு 31 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப் படுகிறது. இவர்களில் பெரும்பான்மையினர் கிறித்தவர்கள் ஆவர்.

வாக்கரசியலில் வெற்றி பெற்று தொடர்ந்து ஆட்சி நடத்துவதற்காகப் பெரும்பான்மை இந்துக்களாக உள்ள மெய்த்தேயி மக்களை மலைவாழ் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதாக பா.ச.க. ஆசை வார்த்தைகள் கூறிவந்தது.

தற்போது மணிப்பூரில் பா.ச.க. தலைமையிலான கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது. என். பைரோன் சிங் முதல மைச்சராக உள்ளார். அவர் மெய்த்தேயி சமூகத்தைச் சேர்ந்தவர். பா.ச.க.-32, காங்கிரசு-5, ஜெ.டி.யூ.-6, நாகாலாந்து மக்கள் முன்னணி (N.P.F.)-7, மற்றவர்கள் 10 பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

மெய்த்தேயி வகுப்பைச் சார்ந்த சிலர் மணிப்பூர் உயர்நீதிமன்றத்தில் தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்குமாறு வழக்குத் தொடுத்தனர்.

மணிப்பூர் உயர்நீதிமன்றத்தில் பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த எம்.வி.முரளிதரன் மெய்த்தேயி வகுப்பு மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான பரிந்துரை செய்து நான்கு வாரங்களுக்குள் ஒன்றிய அரசுக்கு அனுப்ப வேண்டுமென உத்தர விட்டார்.

இதனால் மலைவாழ் பழங்குடியினரான குக்கி-சோமி, நாகா இன பழங்குடி மக்கள் தங்களுடைய வேலை வாய்ப்புகள் பறிபோய்விடும் என்று அச்சமடைந்தனர். மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் உத்தரவைப் பழங்குடிகளின் தலைவர் தின்காங்க் லூங்க் காங்க்மேய் கடுமையாக விமர்சனம் செய்தார். இதனால் ஆத்திரமடைந்த நீதிபதி முரளிதரன், பழங்குடி தலைவர் மீது அவமதிப்பு வழக்குத் தொடுத்து அவரை நீதிமன்றத்தில் நேர் நிறுத்த மாநிலக் காவல் துறைத் தலைவருக்கு உத்தரவிட்டார்.

மலைவாழ் பழங்குடியினரின் உரிமையைப் பாது காப்பதற்காக 3.5.2023 அன்று மணிப்பூர் அனைத்துப் பழங்குடிஇட மாணவர் கூட்டமைப்பு (All Tribal Students' Union Manipur) (ATSUM) சார்பில் மலைவாழ் பழங்குடி யினரின் ஒற்றுமைப் பேரணியை எட்டு மலை மாவட்டங்களில் நடத்தினர். பா.ச.க. ஆட்சியின் ஆதரவோடு மெய்த்தேயி குழுவினர் பழங்குடி மக்கள் மீது மிகப்பெரியத் தாக்குலை நடத்தினர். இதனால் இரு பிரிவினருக்கும் இடையில் மிகப்பெரிய வன்முறை மூண்டது.

3.5.2023 அன்று தொடங்கிய வன்முறைப் போராட்டம் இன்று வரை தொடருகிறது. ஏராளமான வீடுகள், தேவால யங்கள், மருத்துவமனைகள் தீக்கிரையாக்கப்பட்டன.



நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் பழங்குடியினரே ஆவர். இலக்கக்கணக் கானவர்கள் தங்கள் உடைமைகளை இழந்து பரிதவித்தனர். வீடிழந்தவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அகதிகள் முகாம்களில் தங்கினர். இராணுவமும், அசாம் ஆயுதப்படையும் வரவழைக்கப்பட்டது. மெய்த்தேயி இன மக்கள் வாழும் சமவெளிப் பகுதியில் பெரும்பான்மையினர் இந்துக்கள், சிறுபான்மையினர் கிறித்தவர்கள். சங்பரிவாரக் கும்பல்கள் அந்த பகுதியில் மட்டும் 247 தேவாலயங்களை அழித்தனர்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து தின்காங்க்லுங்க் காங்க்மேய் இரண்டு மேல்முறையீடுகளை உச்சநீதி மன்றத்தில் செய்தார். ஒன்று மெய்த்தேயி மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் பரிந்துரைக்குத் தடை. இரண்டாவது நீதிமன்ற அவமதிப்புக்கு தடை விதிக்க வேண்டும். இவ்வழக்கு உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் முன் விசாரணைக்கு வந்தது. மேல் முறையீடு செய்த பா.ச.க. சட்டமன்ற உறுப்பினரும் மலைவாழ் பகுதி குழுவின் தலைவருமான தின்காங்க் லுங்க் காங்க்மேய் பா.ச.க. வின் மேலிடம் அழுத்தம் காரணமாகத் திரும்பப் பெற்றார்.

அந்த மேல் முறையீட்டு வழக்குகளை அனைத் திந்திய பழங்குடி மாணவர் சங்கத்தின் தலைவர் பட்டின்தாங் லூபெங் (Paotin thang Lupheng) தொடர்ந்து நடத்தினர்.

7.5.2023 அன்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், "எந்த மாநிலத் திற்கும் எவர் எவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கான அதிகாரம் நீதித்துறைக்கு இல்லை என்று உச்சநீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு பல ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளதை எடுத்துக்காட்டி மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறானது" என்று தீர்ப்பளித்தார்.

இந்தத் தவறான தீர்ப்புதான் மே மாதம் 3-ஆம் நாள் நடைபெற்ற பேரணியில் ஏற்பட்ட வன்முறைக்கு மூலக்காரணமாகும். மணிப்பூர் சட்டப்படி பழங்குடியினர் வாழும் மலைப் பகுதியில் பள்ளத்தாக்கில் வாழும் மெய்த்தேயி இனமக்கள் நிலம் வாங்கமுடியாது. அதனால்தான் நிலம் வாங்கும் உரிமையைப் பெற்று மலைப் பகுதியின் நிலவளங்களைச் சுரண்டுவதற் காகவே இந்துக்களான இவர்கள் பட்டியல் இனப் பிரிவில் சேர்க்கவேண்டும் என்கின்றனர்.

பா.ச.க. பற்ற வைத்த தீயில் எண்ணெய் ஊற்றி எரிய வைத்தது மணிப்பூர் உயர்நீதிமன்றம்.

மணிப்பூர் பா.ச.க. அரசின் முதலமைச்சர் பைரோன் சிங் கடந்த ஓராண்டாகவே மணிப்பூர் மலைவாழ் பழங்குடி மக்களின் வாழ்வாதாரங்களைப் பறிக்கும் வகையில் காடுகளின் பாதுகாப்புச் சட்டத்தை திருத்தி, மலைவாழ் மக்களின் வாழ்விடங்களில் பல வீடுகளை ஆக்கிரமிப்பு என்று கூறி இடித்துத் தள்ளினார்.

பழங்குடியினர் கஞ்சா பயிரிடுகின்றனர் என்று கூறி பல இடங்களில் அவர்களின் பயிர்களை அழித்து விரட்டியத்தனர். பழங்குடியினரில் பெரும்பான்மையினர் கிறித்துவர் என்ப தால் பா.ச.க. ஆட்சி இத்தகைய ஒடுக்குமுறைகளில் ஈடுபட்டது. இது பழங்குடியினர் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

பன்னாட்டு கம்பெனிகளுக்கு மலை வளங்களை தாரைவார்ப்பதற்காக மணிப்பூர் அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அதற்குத் தடையாகவும் தங்களின் நீண்டகால வாழ்விடத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும் மலைவாழ் மக்கள் நீண்டகாலமாக ஆயுதம் ஏந்தி போராடி வருகின்றனர்.

மலைவாழ் பகுதியைச் சேர்ந்த பத்து சட்டமன்ற உறுப்பினர்கள் 10.5.2023 அன்று கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதில் ஏழு பேர் பா.ச.க. சட்ட மன்ற உறுப்பினர்கள்


அந்தக் கூட்டறிக்கையில் இனிமேல் மணிப்பூர் மாநிலத்தின் நிர்வாகத்தின்கீழ் நாங்கள் வாழ விரும்ப வில்லை. எங்களை ஒடுக்குவதிலேயே இந்த அரசு குறியாக இருக்கிறது. எனவே எங்களுக்கு தனி நிர்வாக அமைப்பு (யூனியன் பிரதேசம்) தேவை என்று வலியுறுத்தினர். உள்துறை அமைச்சர் அமித்ஷா அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

மலைப்பகுதியில் வாழும் குக்கி, நாகா இனமக்கள் குறிப்பாக கிறித்தவர்கள், மே 3 அன்று நடைபெற்ற தாக்கு தலில் குக்கி இன மக்கள் அதிகமாக வாழும் கராசந்தபூர் பகுதிதான் மிக மோசமான அளவில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது. அங்குள்ள தேவால யங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. மாநில அரசின் துணையுடன் சங் பரிவாரக் கும்பல்கள்தான் இந்தத் தாக்குதலை மேற்கொண்டது. வழக்கம் போல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் இந்த வன்முறைகளுக்குக் காரணம் கிறித்துவ மிஷனரிகள்தான் என்று ஒப்பாரி வைக்கின்றனர்.

காங்கிரசு கட்சித் தலைவர் கார்க்கே உள்ளிட்டோர் 30.5.2023 அன்று குடிஅரசுத் தலைவரைச் சந்தித்து மணிப்பூர் கலவரத்தை நீங்கள் தலையிட்டு உடனடியாக தீர்த்து வைக்க ண்டேும் என்று வேண்டுகோள் வைத்தனர்.

உள்துறை அமைச்சர் அமித்ஷா வன்முறை நிகழ்ந்த பிறகு பல நாள்கள் கழித்து 29.5.2023 முதல் 1.6.2023 வரை மணிப்பூரில் தங்கியிருந்து பல்வேறு போராளிக் குழுக்களுடன் பேச்சுவார்த்தை என்னும் நாடகத்தை நடத்தி முடித்தார். தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இதைப் பற்றி வாயே திறக்கவில்லை. கலவரத்தை நடத்தி இந்துத்துவா வெறியூட்டி பா.ச.க. ஆட்சியைத் தக்க வைத்து கொள்வதற் காகவே இப்படியெல்லாம் செய்கிறார்கள். யார் செத்தால் அவர்களுக்கு என்ன, அவர்களுக்கு வேண்டியது ஆட்சி. ●

# செங்கோல் புரட்டுகள்



- பேராசிரியர் த.செயராமன்
நெறியாளர், தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

கடந்த மே 28ஆம் நாள் முதல் அரசியல்வாதிகளும், ஆன்மிகவாதிகளும் பொய்களையும் புரட்டுகளையும் அவிழ்த்து விட்டு திகைப்பை ஏற்படுத்திய காட்சிகள் இந்திய அரசியல் அரங்கில் நடந்தேறின.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் புதிய நாடாளு மன்றக் கட்டடத் திறப்பில் முக்கிய நிகழ்வாக இருந்தது, தமிழ்நாட்டின் 21 சைவ மடாதிபதிகள் கொண்டு போய்ச் சேர்த்த செங்கோலை, பிரதமர் நரேந்திர மோடி சபாநாயகர் இருக்கைக்கு அருகில் நிறுவிய நிகழ்ச்சி ஆகும்.

இந்தியாவுக்குப் புதிய நாடாளுமன்றம் ஒன்றை 970 கோடி செலவில் மோடி அரசு கட்டியுள்ளது. இதில் 'மத்திய விஸ்டா மறு வளர்ச்சி திட்டம்' என்ற பெயரில் கட்டப்பட்ட நாடாளுமன்றம் பா.ஜ.க.வின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். இன் தத்துவத் தலைவரும், இந்துராஷ்டிரப் படைப்பு என்ற இலக்கை வழங்கியவருமான சாவர்க்கரின் பிறந்த நாளான மே 28 அன்று திறந்து வைக்கப்பட்டது. மே 24 அன்று அமித்ஷா நாடாளுமன்றக் கட்டடத்தில் செங்கோல் ஒன்று வைக்கப்படும் என்று அறிவித்தார். அதுவும் மக்களவை சபாநாயகர் மேடைக்கு அருகில் வைக்கப்படும் என்று அறிவித்தார். இவர்கள் முன்னமே திட்டமிட்டு, தமிழ்நாட்டின் மடாதிபதிகளைத் தங்கள் திட்டத்தின் பங்காளிகளாக மாற்றி வைத்திருந்தது யாருக்கும் தெரியாது.

## 1947-இல் பரிசுப் பொருளாக அளிக்கப்பட்ட செங்கோல்! ஆன்மிக அரசியலுக்கான வரலாற்றுத் திரிப்புகள்!

இதற்கு முன்னால் 1947 ஆகஸ்ட் 14 அன்று, தமிழ் நாட்டில் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து ஆதினகர்த்தரின் ஆன்மிகப் பிரதிநிதிகள் பிரதமர் ஜவஹர் லால் நேருவிடம் பரிசுப் பொருளாக சென்னை உம்மிடி பங்காரு செட்டியார் நகை நிறுவனம் தயாரித்து வழங்கிய ஒரு செங்கோலை ஜவஹர்லால் நேருவின் வீட்டில் வழங்கியிருக்கிறார்கள். நேருவுக்கு அளிக்கப்பட்ட அப்பரிசுப் பொருள் நேருவின் கைத்தடி என்று அழைக்கப்பட்டது. அலகாபாத்தில் நேருவின் வீடு அருங்காட்சி யகமாக மாற்றப்பட்ட போது, அருங்காட்சி யகத்தில் அக்கைத்தடி அல்லது செங்கோல் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது. அதன் முக்கியத்துவம் அவ்வளவே. சமீபத்தில் நேருவின் வீட்டில் பரிசுப் பொருளாகக் கொண்டு சேர்த்த செங்கோல் அளிப்பு நிகழ்ச்சியை செங்கோல் வரலாறு வீடியோவாக அந்த நகை நிறுவனமே தயாரித்து பெருமை பொங்க வெளியிட்டு இருந்தார்கள். இது இன்றைய பிரதமர் நரேந்திர மோடியின் கண்ணில் பட்டுவிட்டது. இந்த வீடியோ முற்றிலுமாக சித்தரிக்கப்பட்ட ஒன்று. ஆனால் இதைத் தந்திரமாகத் தங்களுடைய மதவாத அரசியலுக்குப் பயன் படுத்தக்கூடிய உத்தியை மோடிக்கும்பல் கையாண்டிருக்கிறது.



நேருவின் வீட்டில் பரிசுப் பொருளாக அளிக்கப்பட்ட செங்கோல், ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவுக்கு "அதிகார மாற்றம்" (Transfer of Power) செய்ததன் அடையாளம் என்ற பொய்ப் பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது.

சித்தரிக்கப்பட்ட அந்த வீடியோவில், தமிழ்நாட்டு திருவாவடுதுறை ஆதீனகர்த்தரின் பிரதிநிதிகள் கொண்டு சென்ற செங்கோலை மவுண்ட்பேட்டன் பிரபுவின் கையில் கொடுத்து வாங்கி, அதை ஜவகர்லால் நேருவிடம் கொடுப்ப தாகக் காட்டப்பட்டது. மவுண்ட் பேட்டன் பிரபுவிடம் செங்கோல் அளிக்கப்படும் புகைப்படம் எதுவும் இல்லை. நேரு செங்கோலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய புகைப்படத்தில் நேருவின் அருகில் மவுண்ட் பேட்டன் பிரபு இல்லை. ராஜாஜிதான் திருவாவடு துறை மடத்திடம் கூறி இந்த ஏற்பாட்டை செய்தார் என்று புரளியைக் கிளப்பி விட்டார்கள். ஆனால் ராஜாஜியின் படமும் அதில் இல்லை.

1947 ஆகஸ்ட் 14-ம் தேதி நேருக்கு அளிக்கப்பட்ட செங்கோல் பற்றிய செய்தி 'தி இந்து' இதழில் ஒரு விளம்பரமாக ஆகஸ்ட் 29-ஆம் தேதி வெளிவந்திருக்கிறது. எந்த இடத்திலும் எந்த பத்திரிக்கையிலும் செங்கோல் அதிகார மாற்றத்தின் சின்னம்

என்று கூறப்படவில்லை. ராஜாஜி ஆலோசனை வழங்கினார் என்பதற்கும், அது மவுண்ட் பேட்டனிடம் கொடுத்து வாங்கப்பட்டு நேருவிடம் அளிக்கப்பட்டது என்று கூறுவதற்கும் எந்தச் சான்றும் இல்லை.

அந்தச் செங்கோல் பற்றிய வீடியோ சித்தரிக்கப்பட்ட ஒன்று; உண்மையானது அல்ல. இதைப் பார்ப்பவர்கள் ஏதோ அப்போதே இதையெல்லாம் படமாக்கி வைத்திருக் கிறார்கள் என்று கருதிக் கொள்வார்கள். அந்த வீடியோ கூறும் செய்தி :

இந்தியர்களுக்கு ஆட்சியைக் கைமாற்ற எம்மாதிரியான நிகழ்வு பின்பற்ற உள்ளது என்ற கேள்வியினை மவுண்ட் பேட்டன் நேருவிடம் கேட்டார். நேரு, ராஜாஜியிடம் இது குறித்துக் கேட்க; அவரோ, சோழ மன்னர்கள் தங்கள் ஆட்சியை ஒரு மன்னரிடமிருந்து மற்றொரு மன்னருக்கு மாற்றச் செங்கோலினை ஒரு அடையாளமாகப் பயன்படுத்தினர் என்று கூறினார்.

எனவே, ராஜாஜி திருவாவடுதுறை ஆதீனத்தைத் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொல்ல, அவரும் சென்னை உம்மிடி பங்காரு செட்டி ஜுவல்லர்ஸ் மூலம் செங்கோலினைச் செய்து பெற்றார். பின்னர் சுதந்திரம் அடைவதற்கு முந்தைய நாளான ஆகஸ்ட் 14ஆம் நாள் ஆதீனம் மடத்தின் இளைய மடாதிபதி குமாரசாமி தம்பிரான், ஓதுவார் மாணிக்கம் மற்றும் நாதஸ்வர வித்வான் ராஜரத்தினம் பிள்ளை ஆகியோர் டெல்லி சென்றனர். அவர்கள் மவுண்ட்பேட்டனிடம் செங்கோலினைக் கொடுத்துத் திரும்பப் பெற்று, பிறகு நேருவிடம் அளித்தனர். இம்மாதிரி நாட்டின் ஆட்சி மாற்ற நிகழ்வானது 1000 ஆண்டுகளுக்கு முந்தைய பாரம்பரிய முறையைப் பின்பற்றி நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது. அதாவது ராஜ குருமார்கள் கையால் மன்னர்கள் முடிசூட்டிக் கொள்வதைப் போல, மதத்தலைவர்களின் கையால்தான் இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் செங்கோல் வழங்கப்பட்டு ஆட்சி தொடங்கியது என்று காட்ட விரும்புகிறார்கள்.

இந்த வீடியோவின் கடைசியில் நேருவின் கையில் செங்கோல் உள்ளது போல் புகைப்படம் ஒன்று காட்டப் படுகிறது. இதைத் தவிர மவுண்ட்பேட்டனிடம் செங்கோல் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுவதற்கு எந்த புகைப்பட ஆதாரங்களும் காட்டப்படவில்லை. இராசகோபாலாச்சாரியார் இதில் தொடர்புடையவர் என்பதற்கு எந்தச் சான்றும் காட்டப்படவில்லை.

1947-இல் இந்தியா விடுதலை அடைந்த பிறகு அடிமைத்தனம் முடிந்துவிட்டதாக மோடி வகையறாக்கள் கருதுவதில்லை; ஆங்கிலேயர்கள் கட்டிய பாராளுமன்றக் கட்டடம்கூட அவர்களுக்கு அடிமைச் சின்னம்தான். அதிலிருந்து வெளியேறியது அவர்களுக்கு அடிமைத்தனத்தின் முடிவாகத் தெரிகிறது.

இந்துராஷ்டிர உருவாக்கத்தின் முக்கியக் கட்டம் மதசார்பற்ற இந்தியாவை மதவாத இந்தியாவாக மாற்றுவது. புதிய நாடாளுமன்றத் திறப்பு அச்சதித்திட்டத்தின் முக்கிய கட்டம் என அவர்கள் கருதுகிறார்கள். நாடாளுமன்ற திறப்பு நிகழ்ச்சியில் மோடி முழங்கினார்: “ஆதீனகர்த்தர்கள் வழங்கிய இந்தப் புனிதச் செங்கோல் சோழ அரசில் நீதி, நேர்மை, நல்ல நிர்வாகம் ஆகியவற்றை அடையாளப்படுத்தும் ஒன்றாக விளங்கியுள்ளது. அத்தகைய புனித செங்கோலின் பெருமையை மீட்டெடுக்க முடிந்திருப்பது நமக்கு அதிர்ஷ்டம் தான்” என்று பேசினார். இதைப் பார்த்தவர்கள், கேட்டவர்கள், சோழ சாம்ராஜ்யத்தின் செங்கோலையே மீட்டுக் கொண்டு வந்து நிறுவுகிறார்கள் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆனால் சோழர்களுக்கும் இவர்கள் நிறுவும் செங்கோலுக்கும் என்ன தொடர்பு?

**எதிர்க்கட்சிகள் புறக்கணிப்புக்கு இப்படியொரு காரணம்!**

நாடாளுமன்ற திறப்பு நிகழ்ச்சியை 19 எதிர்க்கட்சிகள் புறக்கணித்திருந்தன. எதிர்க்கட்சிகளும் பெரிய கோரிக்கை ஒன்றையும் வைத்து விடவில்லை. “நரேந்திர மோடிக்கு பதில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நாடாளுமன்றக் கட்டிடத்தை திறந்து வைக்க வேண்டும் என்பது மட்டுமே அவர்கள் கோரிக்கை.” திரௌபதி முர்மு பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்; தாழ்ந்த சாதிக்காரர். அது மட்டுமின்றி, அவர் கணவனை இழந்தவர். ஆகவே நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைக்க, அவர் குடியரசுத் தலைவராகவே இருந்தாலும் கூட, அனுமதிக்க முடியாது என்பதுதான் சனாதனவாதி களுடைய பார்வை.

1947-இல் ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு செங்கோலைப் பரிசுப் பொருளாக அவரது வீட்டில் அளித்துவிட்டு இப்போது ஆங்கிலேயரிடமிருந்து அதிகாரம் மாற்றம் நடந்ததற்கு அடையாளமாகவே இச்செங்கோல் வழங்கப்பட்டது என்று ஆதீனமும், இந்திய ஒன்றிய அரசும் சாதிப்பதற்கு அடிப்படை காரணம் இருக்கிறது. இந்தியாவில் பாரம்பரியமாக ராஜ குருக்கள் மன்னர்களுக்கு முடி சூடுவது அல்லது செங்கோல் அளிப்பது என்ற பழக்கம் இருந்து வந்திருக்கிறது. அந்த வகையிலேயே, மரபு மாறாமல் ஆதீனகர்த்தர் ஒருவரால் விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் பிரதமருக்கு செங்கோல் வழங்கப்பட்டது; அந்த மரபு தொடரப்பட வேண்டும் என்று இந்துராஷ்டிரத்தை படைப்பதில் முனைப்பாக இருக்கும் பாஜக அரசு கருதுகிறது.

இந்துத்துவவாதிகளால் ஓர் அரசியல் சக்தியாக தமிழகத்தில் கால் ஊன்ற முடியாத நிலையில், எப்படியாவது தமிழக அரசியலில் முக்கியத்துவம் பெற்றுவிட வேண்டும்; அது எதிர்கால இந்துராஷ்டிர உருவாக்கத்துக்கு அவசியம் என்று கருதி, அனைத்து வகையிலும் ஆர்.எஸ்.எஸ். முயற்சி செய்து வருகிறது. பார்ப்பன மடங்களைப் பயன்படுத்தி மக்கள் ஆதரவைத் திரட்டிவிட முடியாது என்பதைப் புரிந்து கொண்டு, இப்போது சூத்திர சாதி மடாதிபதிகளைப் பயன்படுத்தி காலூன்ற முயற்சிக்கிறார்கள்.

## இந்துராஷ்டிரத்தின் நாடாளுமன்றம்!

திறக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றம் அனைத்து வகையிலும் ஆரியப் பண்பாட்டை, சனாதனத்தை, இந்து மதவாதத்தை, கட்டிடமாகவும் கலைப் படைப்பாகவும் பதிவு செய்துள்ளது. எங்கு திரும்பினாலும் வேத, இதிகாச, புராணக் காட்சிகள் காணக் கிடக்கின்றன. அவர்களே அறிவித்துள்ளபடி, “சனாதன பரம்பரா” படி நாடாளுமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்துத்துவ இந்தியா உருவாக்கம் அதிதீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

புதிய நாடாளுமன்றத்தில் அசுரர்கள்-தேவர்கள் பாற்கடலை கடையும் புராணக் காட்சி, நியாய உணர்வுக்கே தொடர்பற்ற நயவஞ்சக அரசியல் பேசும் சாணக்கியனுக்கு 30 அடி உயரத்தில் கலைப்படைப்பு சுவரில் பதிப்பு, ரிக்வேத காலம் முதல் இந்தியப் பண்பாடு தொடங்குவதாகக் காட்சிப்படுத்தும் கலைப் படைப்புகள், இந்திய வரலாற்றை ரிக் வேதகால ரிஷியின் உருவப்படத்துடன் தொடங்கும் காட்சிப்படுத்தல்கள் என இந்து ராஷ்டிரத்திற்கான படைப்புகள் 5000 என்ற அளவில் நிறைந்து கிடக்கின்றன.

## இந்துத்துவ இந்தியா எந்தத் தடையும் இல்லாமல் படைக்கப்படுகிறது!

இப்படி எல்லாம் உருவாக்கம் செய்யப்பட்டது எந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் தெரியாது. எந்த எதிர்க் கட்சித் தலைவருக்கும் தெரியாது. எவருக்கும் தெரியப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை என்று ஆர்.எஸ்.எஸ்.-இன் பாஜக அரசு கருதுகிறது.

சமயச் சார்பற்ற அரசியல் சட்டம் பின்பற்றப்படும் ஒரு நாட்டில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள் இந்தியாவின் சமயச் சார்பின்மையை காக்க என்ன செய்வதாக இருக்கிறார்கள்? நடத்தப்பட்டு இருக்கும் - நாசகார செயலை, ஜனநாயக ஒழிப்பு சதி வேலையை, பேரழிவுத் திட்டத்தை, எப்படி சரி செய்வதாக இருக்கிறார்கள்?

## புரட்டை வரலாறாக மாற்ற மற்றுமொரு முயற்சி!

கல்வெட்டு ஒன்று திருவாவடுதுறை ஆதினத்தில் புதிதாக முளைத்துள்ளது. “இன்றைய பொய், நாளைய வரலாறு” என்று ஆதீனங்கள் நம்புகின்றன. புகைப்படத்தைக் கல்வெட்டில் கணினி மூலம் பதிப்பது இன்றைய தொழில்நுட்பம். இந்தக் கல்வெட்டு இப்போதுதான் வெட்டி சுவரில் ஏற்றப்பட்டுள்ளது. நேரு மற்றும் கட்டளைத் தம்பிரான் உருவம் கணினியில் வடிவமைக்கப்பட்டு வெட்டப்பட்டுள்ளது. எழுத்துக்கள் கணினி யில் வடிவமைத்து வெட்டப்பட்டுள்ளன. இந்தத் தொழில் நுட்பம் மிக மிக நவீனமானது. 1947 செங்கோல் அளிப்பு நிகழ்ச்சியை வரலாறு போல காட்ட முயற்சித்து இருக்கிறார்கள்.

ஆனால் இந்தக் கல்வெட்டில், 1978-இல் தமிழ்நாடு அரசு அறிவித்த சீர்திருத்தப்பட்ட தமிழ் எழுத்து பயன்படுத்தப் பட்டுள்ளது. “ளை, னை” உள்ளிட்ட எழுத்துக்கள் பயன்படுத் தப்பட்டுள்ளன. பழைய சுவரில் புதிய கல்வெட்டைப் பதித்து, சிமெண்ட் காரை மீது வெள்ளை அடித்திருக்கிறார்கள். அனேகமாக, இந்தச் செங்கோல் பிரச்சினை தொடங்கிய பிறகு, இரண்டு தினங்களில் இதை செய்து முடித்திருக் கிறார்கள் என்று கருதலாம். வரலாற்றுப் புரட்டு வேலைகளில் ஆதீனங்கள் ஈடுபடுவது திகைப்பை உண்டாக்குகிறது.

நரேந்திர மோடியும் முக்கிய பிரமுகர்களும் செங்கோலை சோழர் காலத்து செங்கோல் என்று விவரித்து பேசி இருக்கிறார்கள், எழுதி இருக்கிறார்கள். சோழர்கள் காலத்தில் ஏது மடங்கள்? சோழர்கள் காலம் என்பது கி.பி.846 முதல் கி.பி.1279 வரை. கி.பி.14-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சைவ மடங்கள் கிடையாது. கி.பி. ஏழாம் நூற்றாண்டை சேர்ந்த திருஞான சம்பந்தரின் பெயரில் இயங்கும் மதுரை ஆதீனம் அவருடைய காலத்திலேயே உருவாக்கப்பட்டதாக கூறுவது தவறானது. அதுவும் பிற்காலத்தில் தான் ஏற்படுத்தப் பட்டது. எந்த ஆதீனகர்த்தரும் எந்த மன்னருக்கும் செங்கோல் அளித்ததில்லை.

சோழர்கள் காலம் 13-ஆம் நூற்றாண்டில் முடிந்தது. பிற்காலப் பாண்டியர்கள் காலம் கி.பி.1216 முதல் கி.பி.1311 வரை. பாண்டியர் காலம் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே முடிந்தது. விஜயநகரப் பேரரசின் காலம் கி.பி.1336 முதல். அதற்கு இடைப்பட்ட 50 ஆண்டுகளில் (கி.பி.1335 முதல் கி.பி.1371 வரை) மதுரை சுல்தான்கள் ஆட்சி நடந்தது. எந்தச் சோழர்களுக்கு, பாண்டியர்களுக்கு மடாதிபதிகள் செங்கோல் அளித்தார்கள்?

1947-இல், திருவாவடுதுறை ஆதினத்தார் செங்கோலைப் பரிசுப் பொருளாகக் கொண்டு சேர்த்தபோது, மவுண்ட்பேட்டன் பிரபு பாகிஸ்தான் கராச்சியில் இருந்தார். ராஜாஜி வங்காளத்தில் இருந்தார். செங்கோல் அளிப்புக்கும் அவர்களுக்கும் என்ன தொடர்பு?

சாதாரண மனிதர்கள் பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு பொய் கூறுவதுண்டு. ஆன்மிக மடங்களும் இப்படித் தொடங்கினால் என்ன செய்வது? மடங்களிலும் மனிதர்கள் தாம் இருக்கிறார்கள். பெருமை கருதி இல்லாதவற்றை நிலைநிறுத்த முயற்சிக்கிறார்கள்.

அதிகார மாற்றத்தின் அடையாளமாகத்தான் செங்கோல் அளிக்கப்பட்டது என்பது உண்மையென்றால், அது இந்திய துணைக்கண்டம் முழுவதும் செய்தியாகப் பதிவாகியிருக்க வேண்டும். ஆனால் 15-16 ஆகஸ்ட் 1947 செய்தி இதழ்கள் அப்படிப் பதிவு செய்யவில்லை. செங்கோல் என்பது ஒரு பரிசுப் பொருள்தான் என்பதால் அதைப் பற்றி பேசத் தேவை யில்லை என்று செய்தித்தாள்கள் கருதியிருந்திருக்கின்றன.

## எந்த அதிகார மாற்றத்தைக் குறிக்க இப்போது செங்கோல் அளித்தார்கள்?

இப்போது 21 மடாதிபதிகள் கூட்டமாகச் சென்று நரேந்திர மோடியிடம் ஒரு செங்கோலை அளித்திருக்கிறார்கள். இது எந்த அதிகார மாற்றத்தைக் குறிக்கிறது? அதிகாரம் அளிப்பின் குறியீடாகவே செங்கோல் வழங்கப்பட்டிருக்கிறது என்றால், எந்த அதிகாரத்தை வழங்கினார்கள்? யாருடைய சார்பில் இந்த அதிகாரத்தை வழங்கி இருக்கிறார்கள்? தமிழ் நாட்டின் சார்பாக இவர்கள் இதை வழங்கி இருக்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டின் எந்த அதிகாரத்தை வழங்கி இருக்கிறார்கள்? அப்படி வழங்க அதிகாரம் அளித்தது யார்? - என்பது குறித்து சிந்திக்க வேண்டும். 21 மடாதிபதிகள் கூட்டாகச் சென்று ஒரு செங்கோலை வழங்குகிறார்கள் என்றால் அது ஒரு நகைச்சுவை நிகழ்ச்சி அல்ல. அது ஒரு குறியீடு; பொருள் பொதிந்தது. அவ்வாறெனில் அந்தச் செங்கோல் எந்த அதிகாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது? "அளிக்கப்பட்ட செங்கோல் பரிசுப் பொருள் அல்ல; அதிகாரத்தின் அடையாளம் தான்"-என்பது உண்மையானால், இதன்மூலம் தமிழ்நாட்டு மடாதிபதிகள் இந்திய அதிகார பீடத்துக்கு அள்ளிக் கொடுத் திருக்கும் அதிகாரத்துவம் என்ன?

பார்ப்பனியத்தின் அரசியல் முகம் தான் இந்திய தேசியம் என்பது அப்பட்டமாக தெரிந்துவிட்டது. பார்ப்பனியமும் ஒளிவு மறைவு இன்றி, தன் மேலாளுகையை நிரந்தரப்படுத்தும் வகையில் இந்துராஷ்டிரத்தைப் படைப்பதை விரைவுப் படுத்திக் கொண்டிருக்கிறது. அதேநேரம் பல்வேறு தேசிய இனங்கள் தங்கள் தனி அடையாளத்தைப் பாதுகாக்கவும், தங்கள் மொழியின இறையாண்மையை மீட்டெடுக்கவும், இந்தியத்துக்கு எதிர் நிலையில் நின்று போராடிக் கொண்டிருக்கின்றன. சில தேசிய இனங்கள் விடுதலை கோருகின்றன. சில தேசிய இனங்கள் இந்தியாவுக்குள் தங்கள் அடையாளத்தையும், மொழியையும், தங்கள் அதிகாரத்தையும் உத்தரவாதப்படுத்திக் கொண்டு வாழத் தயாராக இருக்கின்றன.

ஆனால், இந்துத்துவவாதிகள், இந்து தேசியவாதிகள் இந்திய கட்டமைப்பையே ஒட்டுமொத்தமாகக் கலைத்துப் போட்டு, மொழியின் அடையாளமே இல்லாமல் ஒழித்துக் கட்டி, மொழிவாரி மாநிலங்களைக் கலைத்துவிட்டு, இந்தியா முழுவதையும் மாவட்டங்களைப் போன்று ஜனப்பதாக் களாகப் பிரித்து, அவற்றிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்தில் அமர்த்தி, ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே அடையாளம் என்பதை நிறுவும் நோக்கத்தில், வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் தமிழ்நாட்டிலிருந்து சென்று, இந்த மடாதிபதிகள் செங்கோல் வடிவில் எந்த அதிகாரத்துவத்தை ஆர்.எஸ்.எஸ்.-இன் மோடி அரசுக்கு வழங்கினார்கள் என்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. தமிழ்த் தேச இறையாண்மையை மீட்க கடந்த காலத்தில் ஏராளமானவர்கள் சிறையில் வாடி இருக்கிறார்கள்; பலர் தமிழ்த் தேச விடுதலை முயற்சியில் பலியாகியிருக்கிறார்கள்; படுகொலை செய்யப்பட்டிருக் கிறார்கள்; வாழ்நாள் முழுவதும் தமிழ்த் தேசிய விடுதலைக் காக அல்லல்பட்டு மடிந்திருக்கிறார்கள். இந்திய ஏகாதிபத்தியத் திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று ஒவ்வொரு தேசிய இனமும் ஏங்கிக் கொண்டிருக்கும்போது, தமிழ்த் தேசிய இனமும் நீண்ட காலமாக இதற்கான முன்னெடுப்பு களைச் செய்து, பல்வேறு வடிவத்தில் துன்பங்களை அனுபவித்திருக்கும்போது, திடீரென்று இந்த மடாதிபதிகள் தில்லிக்கு ஓடிச்சென்று தமிழினத்தின் வரலாற்றுவழிப் பகைவர்களான ஆரியத்தின் முகவர்களிடம் செங்கோல் கொடுக்கிறார்கள் என்றால் அதன் பொருள் என்ன?

அதன் பொருள் இதுதான் : "இந்தியப் பார்ப்பனியமே எங்களை என்றென்றும் ஆளவேண்டும். தமிழகத்தின் சார்பாக எங்களின் ஒப்புதலைத் தெரிவிக்கிறோம். நாங்கள் உங்களுக்கு என்றென்றும் கட்டுப்பட்ட அடிமைகள்" என்பது தான். தமிழ்நாட்டின் மதிப்பிற்குரிய ஆன்மிகத் தலைவர்கள் ஓர் அதிகாரக் குறியீடாக செங்கோலை அளிப்பது என்பது, தமிழ்நாட்டின் இறையாண்மையை இந்திய ஏகாதிபத்தி யத்திற்கு சமர்ப்பிப்பது என்று பொருள்படும் (surrendering the sovereignty of Tamilnadu to the Indian Imperialism). தமிழ்நாட்டின் அடிமைத்தனம் தொடரும், தொடர வேண்டும் என்பதற்கான ஒப்புதல் வாக்குமூலமே ஆதீனகர்த்தர்கள் அளித்திருக்கும் செங்கோல்.

தமிழை, தமிழ் மக்களை, தமிழ் நாட்டை, தமிழ்த் தேசிய இறையாண்மையை நேசிக்கின்ற எந்த மனிதனும், தமிழ்த் தேசியக் கருத்தியலை உயர்த்திப் பிடிக்கின்ற எந்த தமிழ் மகனும் மடாதிபதிகளின் இச்செயலை ஏற்க முடியாது.

## கருத்துக் குருடர்கள் பாய்கிறார்கள்!

ஒரு செங்கோலை நிறுவுவது என்றால் என்ன பொருள்?

மடாதிபதிகளின் "செங்கோல் கேலிக்கூத்து" பற்றி இரண்டு வரி பதிவிட்டவுடன், ஆத்திரத்துடன் பாய்ந்து வருகிறார்கள். வரலாற்று ரீதியாகவும், நாடாளுமன்ற அதிகாரத்தின் படிநிலை வளர்ச்சியையும், சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்ற முப்பெரும் அதிகாரப் பிரிவினையின் தனித்தன்மை மற்றும் அவற்றின் இறை யாண்மை குறித்தும், ஒரு நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கு இணையாக அல்லது அவருக்கும் மேலான தகுதியுடன் ஒரு செங்கோலை நிறுவமுடியாது, அது ஜனநாயக விரோதமானது, நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கேலிக்குரியதாக்கும் என்ற அடிப்படை அறிவையும் பெறாதவர்கள், செங்கோல் கொடுத்தால் என்ன தப்பு என்கிறார்கள். இந்த நாட்டில் 'தாலி' என்பதற்கு ஒரு பொருள் இருக்கிறது. தாலி என்பது முழம் நீளமுள்ள கயிறுதானே, அதை ஏதோ சாலையில் போய்க்

கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் கழுத்தில் கட்டினால் என்ன தப்பு என்று கேட்பவருக்கு, தாலி பற்றி ஏதும் தெரியாது என்பதுபோன்றே, நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நாடாளு மன்றத்தின் இறையாண்மை குறித்து அறியாதவர்கள், நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கு அருகில் ஒரு செங்கோலை நிறுவினால் என்ன தப்பு என்று கேட்கிறார்கள். நாடாளு மன்ற ஜனநாயக (Parliamentary Democracy) வரலாறையும், அதன் தனித்துவத்தையும், இவர்களுக்குப் பாடம் நடத்தி புரிய வைத்துவிட்டு, விவாதிப்பது என்பது அயர்ச்சி தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

ஆன்மிகவாதியாக இருந்தால் அதற்காக அடுக்கடுக்கான பிழையான கருத்துக்களை ஆதரிப்பது சரியாகுமா?

அரசியல் சட்டம் என்ன கூறுகிறது? வரலாற்றில் என்ன நிகழ்ந்தது? இங்கிலாந்தில் இருந்து நாம் பெற்ற நாடாளு மன்ற ஜனநாயக முறைமை (Parliamentary Democracy), இறையாண்மை மிக்க பாராளுமன்றம், அதில் சபாநாயகரின் நிலை ஆகிய அரசியல் சட்டக் கூறுகளை கவனத்தில் கொண்டு அங்கே ஒரு செங்கோலையின் நிறுவமுடியுமா? நிறுவ அனுமதிக்கலாமா? அப்படி நிறுவினால் அதற்கு பொருள் என்ன? என்பதையெல்லாம் பலரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

1947-இல் இருந்த நிலை வேறு. அன்று இந்தியக் குடியரசு அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வராத காலகட்டம். 1950இல் குடியரசு வகைப்பட்ட அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, ஒரு செங்கோலை அளிப்பதும் அதை ஒரு பிரதமர் பெற்றுக் கொண்டு நாடாளுமன்றத் துக்குள் நிறுவுவதும் எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனம்! மன்னர் காலத்தில் இருந்தது போல, ராஜகுரு கொண்டு வந்து மணி முடியையும் செங்கோலையும் அளிப்பதை காலில் விழுந்து வணங்கி, காலை முத்தமிட்டு மன்னர்கள் தலையில் ஏந்துவதைப் போல கற்பனை செய்து கொண்டு, சமய சார்பற்ற ஒரு அரசியலமைப்பு நிலவும் நாட்டில், அதுவும் குடியாட்சி நிலவும் நாட்டில், செய்ய முற்படுவது மிகப்பெரிய கொடூரம்! முட்டாள்தனத்தின் உச்சகட்டம்! அது ஒரு கேலிக்கூத்து!

**ஒளிந்திருக்கும் அரசியல் நோக்கம்!**

செங்கோல் அளித்தபோது ஒரு மணி நேரம் பூஜை நடைபெற்றது. நரேந்திர மோடி செங்கோல் முன்பாக விழுந்து கும்பிட்டார். இந்த கும்பிடுக்கு பின்னாலே ஒரு அரசியல் நோக்கம் இருக்கிறது. இந்துத்துவவாதிகளுக்கு தமிழ்நாட்டில் கால் ஊன்றியாக வேண்டும். தமிழிசை சௌந்தரராஜன் இப்படிக் கூறுகிறார் :

“நம் நாடாளுமன்றத்தில் நம் மனதை ஆளும் தமிழ் ஒலித்தபடியே நம் தமிழ் அரசர்கள் பயன்படுத்திய செங்கோல் நிறுவப்பட்டுள்ளது, இந்த வரலாற்று நிகழ்வு தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் வரலாற்றுப் புகழை சேர்த்திருக்கிறது. இதைப் புறக்கணித்தவர்கள் தமிழுக்கும், தமிழ் கலாச்சாரத் திற்கும் துரோகம் செய்து மிகப்பெரிய வரலாற்றுப் பிழையை ஆற்றியுள்ளார்கள்” என்கிறார்.

தமிழர்கள் தமிழ் மொழியை உயிருக்கு நிகராகக் கருதுகிறவர்கள் என்பதால், தமிழின் பேரால் அரசியல் ஆதாயம் தேடுகிறார். உயிரற்ற தங்கத்தால் ஆன ஒரு கோலுக்குக் கொடுக்கும் மரியாதையை, தமிழக மக்களின் உணர்வுக்கு நரேந்திர மோடி கொடுத்திருக்கலாம். நீட் தேர்வு காரணமாக எத்தனை உயிர்களை இழந்து இருக்கிறோம்! நீட் தேர்வு வேண்டாம் என்று மசோதாவை நிறைவேற்றி விட்டு, எவ்வளவு காலமாக தமிழர்கள் ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறார்கள்! தமிழர்கள் மீது என்ன மரியாதை இவர்கள் வைத்திருக்கிறார்கள்?

புதிய நாடாளுமன்றத்தில் கல்வெட்டுகளைத் திறந்திருக் கிறார்கள்; அவை சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய வற்றில் உள்ளன. தமிழுக்கு அங்கு இடமில்லை. இந்நிலை யில், தமிழ் ஒலித்தது; நம் தமிழரசர்கள் பயன்படுத்திய செங்கோல் நிறுவப்பட்டுள்ளது என்று கூவுகிறார் தமிழிசை சௌந்தரராஜன்.

நிறுவப்பட்டு உள்ள செங்கோலுக்கும் தமிழ் மன்னர் களுக்கும் என்ன தொடர்பு? அது சென்னை உம்மிடி பங்காரு செட்டியார் நிறுவனம் தயாரித்தது. திறக்கப்பட்ட கல்வெட்டில் கூட தமிழ் இல்லை. மோடி உரையாற்றும் போது, இந்த செங்கோல் சோழ வம்சத்தில் நீதி மற்றும் நல்லாட்சியின் அடையாளமாக இருந்தது என்கிறார். சோழர்களுக்கும் உம்மிடி பங்காரு செட்டியார் தயாரித்த செங்கோலுக்கும் என்ன தொடர்பு? - “இப்படிப்பட்ட புனிதமான செங்கோலின் பெருமையை மீட்டெடுக்க முடிந்தது நம்முடைய அதிர்ஷ்டம்” என்கிறார் மோடி.

தமிழ்நாட்டில் கால் ஊன்றுவதற்காக எவ்வளவு புளுகுகளை இவர்கள் அவிழ்த்து விடுகிறார்கள். கூடுதலாக ஒட்டுமொத்த இந்திய மக்களையும் முட்டாளாகக் கருதுகிறார் நரேந்திர மோடி. “இந்தியா ஒரு ஜனநாயக நாடு மட்டு மல்லாது, ஜனநாயகத்தின் தாயும் கூட” என்கிறார். இந்தியாவில் எந்த காலத்தில் ஜனநாயகம் நிலவியது? என்ன ஜனநாயக நிறுவனங்கள் இங்கே இருந்தன? கிரேக்கத்தை “ஜனநாய கத்தின் தாயகம்” என்று வரலாற்றில் கூறுவோம். இங்கிலாந்தை “நாடாளுமன்றத்தின் தாய்” என்று கூறுவோம். தங்கள் விருப்பம் போல எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று நரேந்திர மோடி போன்றவர்கள் கருதுகிறார்கள். 1950-இல் புரட்சியாளர் அம்பேத்கர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் இந்தியாவுக்கு அளித்த இந்தியாவின் ஜனநாயக முகத்தையும் செங்கோல் நிறுவுதல் சிதைத்து இருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் இந்தியாவை மதச்சார்பற்ற நாடு என்கிறது. ஆனால் சைவ சமய அடையாளங்களுடன் கூடிய செங்கோலை நாடாளுமன்றத்தில் நிறுவியதன் மூலமாக, மதச்சார்பற்ற இந்தியா இப்போது மதச்சார்பு இந்தியாவாக மாறி இருக்கிறது.

**சூத்திர சாதிகளைத் திரட்டும் உத்தி!**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பிராமண மடங்களின் ஆதரவைப் பெற்று பயனில்லை என்பதால், பார்ப்பனர் அல்லாத மதத் தலைவர்களின் ஆதரவை இந்துத்துவ வாதிகள் திரட்டுகிறார்கள். அனைத்துச் சாதிகளின் ஆதரவைப் பெற்ற பிரதிநிதியாக மடாதிபதிகளை பாஜக கருதுகிறது. சாதிய கட்சிகளின் ஆதரவையும், சாதிய அமைப்புகளின் ஆதர வையும், சனாதனிகளின் ஆதரவையும், சைவ மடங்களின் ஆதரவையும் தமிழ்நாட்டில் திரட்டுவதன் மூலமாக தமிழ் நாட்டில் பாஜக நிலைகொள்ள முடியும் என்று நம்புகிறார்கள்.

செங்கோல் என்பது மன்னர் ஆட்சி காலக் குறியீடு, மக்களாட்சிக் காலத்தில் அது ஏன்? இப்போது இவர்கள் நடத்தும் செங்கோல் நிறுவும் நாடகம் இன்னும் 50 ஆண்டுகள் கழித்து வரலாறாக நம்பப்படும். பாஜக தன்னுடைய இந்துராஷ்டிரப் படைப்புக்கான செயல்பாட்டில் இப்போது ஒரு செயல்திட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அதில் செங்கோல் காட்சி அரங்கேறி இருக்கிறது. பாரதிய ஜனதா கட்சி சாதி உணர்வைக் கிளறி விடுவதையும், மக்கள் தங்களை சாதிகளாக உணரச் செய்வதையும், தன்னுடைய செயல் திட்டத்தின் முக்கியக் கூறாகக் கருதுகிறது. சாதிய அடையாளத்தை உயர்த்திப் பிடிக்கும் கூட்டாளிகளைக் கண்டுபிடிப்பதை ஒரு பெரிய அரசியல் திட்டமாக வைத் திருக்கிறது. அதனுடைய பார்வையில் ஆதீனங்கள் என்பவை செல்வாக்குமிக்க, தெளிவான, துணிச்சலான, வெளிப்படை யான, மக்களின் ஆதரவையும் பெற்றிருக்கக் கூடிய இந்து ராஷ்டிர ஆதரவாளர்கள்.

2024ஆம் ஆண்டு தேர்தலுக்குள் மேலும் பல மாற்றங்களைக் கொண்டு வர ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டு இருக்கிறது. ஆரியத்தின் அரசியல் பீடத்திடம் செங்கோல் அளித்து, தமிழர்களின் சூத்திர விசுவாசத்தை, தமிழர்களின் தன்மானத்தை, அவர்கள் காலடியில் சமர்ப்பித்து விட்டு வந்திருக்கிறார்கள். வரலாறு முழுவதும் ஆரியத்தை எதிர்த்துப் போரிட்ட தமிழினத்தின் தன்மானத்தை மடாதிபதிகள் இப்போது கொலை செய்திருக்கிறார்கள்! ●

## பொற்செல்வி
## முதலாம் ஆண்டு நினைவேந்தல்



தமிழ் மறவர் வை.பொன்னம்பல னார் அவர்களின் முதல் பெயர்த்தியும் வே.திருஞானம் பொன்முடியார் அவர் களின் மூத்த மகளும் பேராசிரியர் ஆ.அருள் அவர்களின் துணைவியாரு மான திருமதி. பொற்செல்வி தலைமை ஆசிரியர் பொய்யாநல்லூர் அவர் கள் 21.06.2022 அன்று மறைந்து விட்டார். அவரது முதலாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு புதிய சிந்தனையாளன் இதழ் வளர்ச்சி நிதியாக ரூ.ஆயிரம் அளிக்கப்படுகிறது.

செய்தி : **இரா.சிவப்பிரகாசம்**

# வேலூரில் மே நாள் பொதுக்கூட்டம்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் வேலூரில் 01.05.2023 அன்று மாலை 6 மணிக்கு நடந்த மே நாள் பொதுக் கூட்டத்திற்கு மா.பெ. பொ.க. வேலூர் மா.செ. மோ.சி. சங்கர் தலைமை ஏற்றார். வேலூர் மாநகரச் செயலாளர் மீ. டில்லிபாபு வரவேற்புரை யாற்றினார். தொடக்கத்தில் தோழர் வே.ஆனைமுத்து எழுதிய “பெரியாரும் நூற்றாண்டு காணும் வைக்கம் கிளர்ச்சியும்” நூலினை தோழர் தியாகு வெளியிட்டார்.

இந்தியத் துணைக்கண்டத்தில் பொதுவுடமைக் கொள்கை முன்னோடி சிந்தனைச் சிற்பி ம. சிங்கரவேலர் தலைமையில் மே நாள் கொண்டாடிய நூற்றாண்டு நிறைவைப் பற்றியும் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் பற்றியும் அவற்றைப் பெற்றிட - காத்திட செய்யத் தக்கன பற்றியும் ஒன்றரை மணி நேரம் தோழர் தியாகு தெளிவான விளக்கவுரை ஆற்றினார்.

முன்னதாக சா. குப்பன் (மா.பெ.பொ.க.), செந்தமிழ் முருகன் (புரட்சிகர இளைஞர் முன்னணி), சீ.அ.சிம்புதேவன் (ஏ.ஐ.சி.சி.டி.யு.), ச.ந.ச.மார்த்தாண்டன் (பாலாறு பாது காப்பு சமூக விழிப்புணர்வு இயக்கம்), ப. சந்திரசேகரன் (வழக்குரைஞர்), செவ்வேள் (மக்கள் தமிழகம் கட்சி), சி. நடராசன் (மா.பெ.பொ.க.), நா.மதனகவி (மா.பெ.பொ.க.), ஆகியோர் உரையாற்றினர்.

மா.பெ.பொ.க. வேலூர் மா.து.செ. லோ. இரத்தினகுமார் நன்றி கூறினார். பொதுக்கூட்டத்தில் தோழமை இயக்கத்தினர் பங்கேற்று சிறப்பித்தனர்.

## தமிழக மக்கள் முன்னணி நடத்திய அரசியல் பயிலரங்கம்

09.04.2023 அன்று சென்னை மயிலாப்பூர் சி.எஸ்.ஐ. பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. தோழர்கள் பொழிலன், த.செயராமன், வாலாசா வல்லவன் ஆகியோர் தமிழக வரலாறு, தமிழ் தேசிய அரசியல் எழுச்சி, இந்துத்துவாவினை எதிர்கொள்வது குறித்து பயிற்று வித்தனர்.

# நீதிக்காகப் போராடும் மற்போர் வீரர்கள்



- நா. மதனகவி

இந்திய மற்போர் வீரர்களான சாக்சி மாலிக், வினேசு போகப், பஜ்ரங் புனியா உள்ளிட்ட வீரர்கள் இந்திய மற்போர் கூட்டமைப்பின் தலைவரும் பா.ச.க. வின் உத்தரப்பிரதேசம் கைசர் கஞ்ச் தொகுதியின் நாடாளு மன்ற உறுப்பினருமான பிரிச் பூசன் சரன்சிங் மீது பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டை முன் வைத்து போராடி வருகின்றனர்.

காமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் என இரண்டிலும் தங்கம் வென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்றவர் மற்போர் வீராங்கனை வினேசு போகப். இவர் பல ஆண்டுகளாக பெண் மற்போர் வீராங்கனைகளைப் பயிற்சியாளர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கிய தாக வெளிப்படையாக குற்றச்சாட்டை முன்வைத் துள்ளார். இந்திய மற்போர் கூட்டமைப்பின் தலைவரான பிரிஜ் பூசனால் மற்போர் வீரர்கள் பாலியல் துன்புறுத் தலுக்கு ஆளாகியதாக 10 புகார்கள் வந்துள்ளன. இவர்களுக்கு ஆதரவாக 30-க்கும் மேற்பட்ட வீரர்கள் போராடத் தொடங்கினர்.

மற்போர் வீரர்களின் போராட்டத்தை கண்டுகொள் ளாத தில்லி காவல் துறை அவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று கூறியது. நீதிமன்றம் எழுப்பிய கடுமையான கேள்விகளுக்குப் பிறகு வழக்கு பதிந்தது காவல்துறை. குற்றம் சாட்டப்பட்ட வீரர்களில் ஒருவர் சிறுமி என்பதால் போக்சோ சட்டத்தின் கீழும் வழக்கு பதியப்பட்டது. ஆனால் அதற்கு மேல் நடவடிக்கை எடுக்கவில்லை.

போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்டவர் குற்றவாளியின் பெயரை சொன்னாலே அவரைக் கைது செய்து விசாரிக்கலாம் என்கின்றன நீதிமன்றங்கள். ஆனால் பிரிஜ் பூசனுக்கு மட்டும் தில்லி காவல் துறையும் மோதியின் ஒன்றிய அரசும் கைது செய்யாமல் குற்றவாளிக்குத் துணை செல்கிறது. பிரிஜ் பூசனோ போக்சோ சட்டம் சரியில்லை; அதை மாற்றச் சொல்லி அரசுக்கு அழுத்தம் கொடுப்பேன் என்கிறார்.

குத்துச்சண்டை வீரர் மேரி கோம் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை ஒன்றிய அரசின் அழுத்தம் காரணமாக இன்னும் வெளியிடப்படாமல் உள்ளது. இதனால் கோபமடைந்த வீரர்கள் மீண்டும் தில்லி ஜந்தர் மந்தரில் போராடத் தொடங்கினர்.



ஒரு மாதத்திற்கும் மேலாகத் தொடர்ந்து போராடி வரும் வீரர்களின் குற்றச்சாட்டை செவிகொடுக்க மறுக்கும் மோதியின் தலைமையிலான அரசு, வீரர்களின் போராட்டத்தை அடக்கி ஒடுக்குகிறது. இந்தியாவிற்காக விளையாடி பதக்கங்களை வென்று பெருமை சேர்த்த வீரர்களுக்கு எதிராகச் செயல்படும் இந்திய ஒன்றிய அரசின் கொடுஞ்செயலைப் பன்னாட்டு மற்போர் கூட்டமைப்பு கண்டித்துள்ளது.

எனது நாடாளுமன்றம் எனது பெருமை என்ற வெற்று முழக்கத்தோடு இந்துத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படும் சாவர்க்கரின் பிறந்த நாளான மே 28 அன்று புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை திறந்து வைத்தார் மோதி. விழாவில் பேசிய மோதி, அந்நிய ஆட்சியின் சின்னத்தி லிருந்து விடுபட்டு புதிய இந்தியாவில் அடியெடுத்து வைக்கின்றோம்; செங்கோல் நாடாளு மன்றத்தில் இன்று நிறுத்தி யுள்ளோம்; சோழர் ஆட்சியில் இந்த செங்கோல் நீதி, நேர்மை, நல்ல நிர்வாகம் ஆகியவற்றை அடையா ளப்படுத்துகின்ற ஒன்றாக விளங்கியுள்ளது. உலகில் வேறெங்கும் இல்லாத மக்கள் நாயகப் பண்பை இந்தியா கட்டிக்காக்கிறது என்று முழங்கினார்.

அதே நாளில்தான் மற்போர் வீரர்கள் புதிய நாடாளு மன்றத்தை நோக்கிப் பேரணியாகச் செல்ல திட்டமிட்டி ருந்தனர். இப்பேரணியில் பங்கேற்க விவசாய சங்கங் களும் ஆதரவு தெரிவித்திருந்தது. ஆனால் போராட்டக் களத்திலிருந்து வெளியேறும் அனைத்து வழிகளையும்

அடைத்த தில்லி காவல்துறையின் தடையை மீறிச் செல்ல முயன்றவர்களை அடித்து, துன்புறுத்தி, கைது செய்த தில்லி காவல்துறையும் அதிவிரைவுப் படையும், போராட்டக் களத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டகைகளையும் உடைமைகளையும் அடித்து நொறுக்கியது. நேர்மை, நல்ல நிர்வாகம், மக்கள் நாயகம் என்று புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை திறந்து வைத்து பிரதமர் மோதி முழக்கமிட்டுக் கொண்டிருந்த நேரத்தில்தான் அந்த இடத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் இந்தியாவின் தலைநகரில் இந்தியாவின் மகள்களான மற்போர் வீரர்களின் போராட்டத்தை ஒடுக்கியது.

ஒன்றிய அரசின் இந்தக் கொடுஞ்செயலால் மனமுடைந்த வீரர்கள் தாங்கள் வென்ற பதக்கங்களை அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், கங்கையில் வீசப்போவதாக அறிவித்தனர். அதன்படி உத்தரகண்டு மாநிலம் அரித்துவாருக்குச் சென்ற அவர்களைப் பாரதிய கிசான் யூனியன் தலைவர் நரேசு திகாயத் தடுத்து நிறுத்தினார். உங்களின் போராட்டத்திற்கு நாங்கள் துணையாக நிற்கிறோம். பதக்கத்தை கங்கையில் வீசும் முடிவைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டார். அதோடு 5 நாள்களில் இந்தச் சிக்கலுக்குத் தீர்வுகாண ஒன்றிய அரசுக்குக் கெடு விடுத்தனர். இதை ஏற்று வீரர்கள் தங்களின் முடிவை நிறுத்தி வைத்தனர். சூன் 15ஆம் தேதிக்குள் விசாரணை முடிக்கப்படும் என்று ஒன்றிய அரசு உறுதியளித்துள்ள நிலையில் தற்காலிகமாகப் போராட்டத்தை நிறுத்தி வைத்துள்ளனர். வீரர்களுக்கு ஆதரவாக காங்கிரசின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி நேரில் சென்று ஆதரவைத் தெரிவித்தார். பஞ்சாப் விவசாயிகள் சங்கம் நேரில் சென்று வீரர்களோடு போராடினார்கள். அனைத்து எதிர்க்கட்சிகளும் வீரர்களுக்கு ஆதரவாக ஒன்றிய பா.ச.க. அரசைக் கண்டித்துள்ளனர். இவ்வளவு போராட்டம், எதிர்ப்பிற்குப் பிறகும் மோதி அரசு பிரிச்சு பூசனை கைது செய்யாமல் காப்பாற்றுகிறது.

2004ஆம் ஆண்டு பிரிஜ் பூசனின் மூத்த மகன் சக்தி சரண், தன் தந்தை உரிமம் பெற்று வைத்திருந்த துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக் கொண்டார். சுட்டுக் கொள்வதற்கு முன் சக்தி சரண் எழுதியிருந்த கடிதத்தில், நீங்கள் நல்ல தந்தையாக நடந்துகொள்ளவில்லை; எங்களை நீங்கள் பொறுப்புடன் கவனிக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். பிரிஜ்பூசன் பல ஆண்டுகள் ஒரு 'தாதா' போல் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார். இதுதான் பிரிஜ் பூசனின் கடந்தகால வரலாறு. எனவே இவர் மற்போர் வீரர்களிடம் எவ்வாறு நடந்துகொண்டிருப்பார் என்பதை நாம் அறியமுடியும்.

**செவிசாய்க்காத மோதி**

இந்த நாட்டில் எது நடந்தாலும், எந்தக் குற்றச்சாட்டுக்கும் மக்கள் எவ்வளவு துன்பப்பட்டாலும் எதற்கும் பதில் சொல்வதில்லை என்ற ஆணவத்தில் பாசிசத்தின் முகமாக இருக்கும் பிரதமர் நரேந்திர மோதி, தன் தலைமையிலான அரசும் தன் கட்சிக்காரர்களும் செய்யும் எந்தத் தவறையும் உணர மறுப்பவராக இருப்பது தான். பிரிஜ் பூசன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு காரணம்.



இதுபோல், தனி மனித உரிமைகளுக்காகவும் கருத்துரிமைக்காகவும் சமூக நீதிக்காகவும் அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் இந்தியா முழுவதும் நடத்தப்படும் எண்ணற்றப் போராட்டங்களை பாசிச மோதி ஆட்சி கொடுமையான முறையில் ஒடுக்கி வருகிறது.

பா.ச.க. அரசின் செயல்பாட்டையும் மோடியையும் எதிர்ப்பவர்கள் இந்த நாட்டிற்கு எதிரானவர்கள் என்றும் இந்து, இந்தி, சமற்கிருதம், தேசபக்தி என்று இந்துத்துவ மயமாக்கி சனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கும் பாசிச பா.ச.க. மோடி ஆட்சியை ஒழித்து, சமத்துவத்தையும் சமூக நீதியையும் சனநாயகத்தையும் கூட்டாட்சிக் கோட்பாட்டையும் நிலைபெறச் செய்ய வேண்டியது முற்போக்குச் சிந்தனை கொண்ட அனைத்துக் கட்சிகள், இயக்கங்கள், குடிமை அமைப்புகள் முதலானவற்றின் முதன்மையான கடமையாகும். இது காலத்தின் அவசரத் தேவை. ●


## தமிழ்நாட்டுக்கு தனித்த கல்விக் கொள்கை கருத்தரங்கம்




27.05.2023 அன்று மேடவாக்கம் தமிழ்க்களத்தில் தோழர் திருமலை தமிழரசன் தலைமை தாங்கிட, முனைவர் கி குணத்தொகை தொடக்க உரையாற்றினார். தோழர் ஒப்புரவாளன் ஒருங்கிணைப்புரையில், பேராசிரியர் தோழர் ப. சிவகுமார், தோழர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, தோழர் வாலாசா வல்லவன், தோழர் பொழிலன் ஆகியோர் உரையாற்றினர். தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் ஒருங்கிணைத்திருந்தது.

# கோகுல்ராஜ் சாதி ஆணவப் படுகொலை வழக்கு – வரவேற்புக்குரிய உயர்நீதிமன்றத் தீர்ப்பு

## தேவை சாதி ஆணவக் கொலைத் தடுப்புச் சட்டம்



- சா.குப்பன்

கோகுல்ராஜ் சாதி ஆணவப் படுகொலை வழக்கின் மேல்முறையீட்டில் சென்னை உயர்நீதிமன்றம் 02.06.2023 அன்று பாராட்டுதலுக்குரிய தீர்ப்புரை அளித்துள்ளது. வழக்கை மிகவும் அக்கறை யுடனும், ஆழமாகவும் விசாரணை நடத்தி அரியத் தீர்ப்பளித்துள்ள நீதிபதிகள் எம்.எஸ். இரமேஷ், என். ஆனந்த் வெங்கடேஷ் இருவருக்கும் நெஞ்சார்ந்த பாராட்டுதலை உரித்தாக்குகிறோம். வழக்கில் ஊன்றி, மிகத் திறமையாகத் தமிழ்நாட்டரசின் சார்பில் வழக்கை எடுத்துரைத்த செம்மல் கள் தோழர் ப.பா. மோகன், திரு. டி.லஜ பதிராய் மற்றும் திரு. எ. திருவடிகுமார் ஆகியோருக்கு நம் பாராட்டுதலைத் தெரி விக்கின்றோம்.



வி.கோகுல்ராஜ்

சேலம் மாவட்டம், ஓமலூரைச் சேர்ந்த பட்டியல் சாதி பொறியியல் பட்டதாரி வி.கோகுல்ராஜும் அவருடன் படித்த கொங்கு வேளாளர் சாதியைச் சேர்ந்த சுவாதியும் காதலித்துத் திருமணம் செய்து கொள்ள இருந்தனர். இருவரும் 23.06.2015 அன்று நாமக்கல் மாவட்டம், திருச்செங் கோட்டில் உள்ள அர்த்தநாரீசுவரர் கோவிலுக்குச் சென்றிருந்தனர். இதையறிந்த சாதி மறுப்புத் திருமணத் திற்கு எதிரான சாதி வெறி பிடித்தவனும் மாவீரன் தீரன் சின்னமலை கவுண்டர் பேரவையின் நிறுவனனும் தலைவனுமான சேலம் மாவட்டம், சங்ககிரியைச் சார்ந்த எஸ். யுவராஜும் அவனது கூட்டாளிகளும் சேர்ந்து கோகுல்ராஜை கோவிலில் இருந்து கடத்திச் சென்று, தற்கொலைச் செய்து கொள்ளப் போவதாக எழுதி, கோகுல்ராஜை கையொப்பமிடச் செய்துள்ளனர். கோகுல்ராஜ் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகப் பேசிடச் செய்து காணொளிப் பதிவு செய்து கொண்டு, தலையைத் துண்டித்து பள்ளிப்பாளையம் தொடர் வண்டிப் பாதையில் கிடத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தக் கொலை வழக்கைப் புலனாய்வு செய்த காவல் துறையினரிடம் சிக்காமல் யுவராஜ் 100 நாள் களுக்கு மேல் தலைமறைவாக இருந்து, பின் நாமக்கல் நீதிமன்றத்தில் சரணடைந்தான். நாமக்கல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் விசாரணையின் போது நீதிபதி கே.எச். இளவழகன் அவர்களை அவதூறாகப் பேசினான். அதன்பின் இந்த வழக்கு 2019-இல் மதுரை வன் கொடுமைத் தடுப்புச் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. அங்கு விசாரணை முடிந்து 08.03.2022 அன்று அளித்தத் தீர்ப்பில் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்டத் தண்டனை விவரம்:

1. எஸ். யுவராஜ், 2. பி. அருண் (யுவராஜின் மகிழுந்து ஓட்டுநர்) ஆகிய இவ்விருவருக்கும் மூன்று - வாழ்நாள் சிறைத் தண்டனை; 3.குமார் (எ) வி. சிவகுமார், 4. ஆர். சதீஷ்குமார், 5. இரகு (எ) டி.சிறீதர், 6.டி.இரஞ்சித், 7.டி. செல்வ ராஜ் ஆகிய அய்ந்து பேருக்கு இரட்டை வாழ்நாள் சிறைத் தண்டனை; 8. எஸ். சந்திரசேகரன், 9.எம். பிரபு, 10.பி. கிரிதர் ஆகிய மூவருக்கும் வாழ்நாள் சிறைத் தண்டனை.

குற்றவாளிகள் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இந்த மேல் முறையீட்டை எம்.எஸ். இரமேஷ், என். ஆனந்த் வெங்கடேஷ் ஆகிய இரு நீதிபதிகள் வழக்கை விசாரித்து 02.06.2023 அன்று மேல் முறையீட்டைத் தள்ளுபடி செய்து எஸ்.யுவராஜ் உள்ளிட்ட முதல் எட்டு பேர் தண்டனைகளை உறுதி செய்தனர். எம். பிரபு, பி. கிரிதர் ஆகிய இருவர் வாழ்நாள் சிறைத் தண்டனையை 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையாகக் குறைத்து தீர்ப்புரை அளித்தனர்.

### உயர்நீதிமன்றத் தீர்ப்புரையின் சிறப்பு

தீர்ப்புரையின் முகப்புரையில் ''மனித நடத்தையின் இருண்ட பகுதியின் கொடிய முகங்களை வெளிப்படுத்து கின்ற ஒரு வழக்கு'' என்றும், ''சாதியத்தால் கட்ட மைக்கப்பட்ட நமது சமுதாயத்தில் உள்ள சாதி வெறி, விளிம்பு நிலையில் உள்ள மக்களை மனிதத்தன்மை யற்ற வகையில் நடத்துதல்'' பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். ''இந்த வழக்கில் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, சூழ்ச்சித் திறத்துடன் வினையாற்றி, கூச்சமின்றி அரசுத் தரப்புச் சான்றினரை பிறழ்வுச் சான்றினராகப் பொய்ச்சான்று பகர வைத்து குற்ற வழக்கு விசார ணையை தடம்புரளச் செய்வதிலும் திசைதிருப்பச் செய்வதிலும் ஈடுபட்டு அதில் வெற்றி பெறவும் முயல் கிறார்கள் என்பதற்கு இதுபோன்ற வழக்குகள் பாடநூல்



ப.பா.மோகன்

களாக இடம்பெறச் செய்ய வேண்டிய எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன” எனவும் கூறப்பட்டுள்ளது.

செல்வாக்குப் படைத்த மனிதர்கள் மீது குற்ற வழக்கு விசாரரைண நடக்கும் போது இது மிக இயல்பாக நடைபெறும் நிகழ்வாகிவிட்டது. நெருக்கடிகள் பலவற்றை மீறி நீதி வழங்கப்பட்டுள்ளது. இந்த மின்னணு காலத்தில் கோவிலில் 8 இடங்களில் வைக்கப்பட்டிருந்த கண் காணிப்புக் காமிராக்கள் மூலம் பதிவான காட்சிகள் நல்ல சான்றாக அமைந்தன. மாதொரு பாகன் நூல் தொடர்பாக எழுத்தாளர் பெருமாள் முருகன் மீது குற்றம் சாட்டியதில் எம்.யுவராஜால் தொடங்கப்பட்ட மாவீரன் தீரன் சின்னமலை பேரவை முக்கியப் பங்கு என்பதையும் பெருமாள் முருகனை (11.01.2015) மன்னிப்புக் கேட்க வைத்ததையும் தங்கள் 234 பக்கத் தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

### தேவை சாதி ஆவணக்கொலைத் தடுப்புச் சட்டம்

இளைஞர்களான பெண்ணும் ஆணும் தங்கள் இல்வாழ்க்கை இணையரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள சுதந்திரம் இல்லை என்றால், மறுக்கப்பட்டால் நாம் என்ன நாகரிக மக்கள் சமுதாயம்? இது பெரியார் மண் என்று பீற்றிக்கொள்கிறோமே, சரியா? ஒவ்வொரு மனிதரும் வெட்கப்பட வேண்டாமா? அவமானமாகக் கருத வேண்டாமா?

இதுபோன்ற கொடியக் குற்றங்கள் மேலும் நிகழ்வதற்கு முன் அவற்றைத் தடுப்பதற்கும் சாதி மறுப்புத் திருமணம் புரிவோரைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் முற்போக்காளர்களுக்கும் அரசுக்கும் பொறுப்பு உள்ளது. சாதி ஆணவக் கொலைத் தடுப்புச் சட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு நிறைவேற்றிட நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்துக் கொண்டுள்ளோம்.

பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்க ‘போக்சோ’ (POCSO) சட்டம் 2012-இல் கொண்டுவந்தது போல் சாதி மறுப்புத் திருமணம் புரிந்து கொள்வோரை ஆணவக் கொலையிலிருந்து பாதுகாக்க தமிழ்நாடு அரசு உடனடியாக சட்டம் இயற்றிடுமாறு வேண்டுகிறோம். ●

# முட்டாள்கள் மதமுகடு!



**பேராசிரியர்**
**இரா. சோதிவாணன்**

தூங்கிவிட்ட வெம்புலிகாள்! போதுமுங்கள் பெருந்தூக்கம்
தேங்கிவிட்ட நிலையறிந்தும் தாங்குவீர்கள் நெடுஞ்சோம்பல்
ஓங்கிவிட்ட ‘ஆரியத்தின் ஒவ்வாமை’ப் பொறுப்பீரோ?
தாங்கிவிட்ட தமிழ்மூச்சால் தரைநடுங்க விழிப்பீரே!

ஆரியத்தின் சிறைபட்டும் ஆயுளுக்கும் தண்டனையா!
நேரியத்தின் பெரியாரை உன்முன்பு கண்டனையா?
பார்இயத்தின் உயிரியக்கம் மானுடமே என்றனையா?
வேர்இயத்தின் சுவைப்பலவின் பகுத்தறிவை உண்டனையா?


அடைப்பட்ட காற்றுமது அழிபுயலாய் ஆர்த்தெழுமே!
தடைப்பட்ட தொழிலாளர், மேநாளும் பூத்தெழுமே!
மடைப்பட்ட நீர்வெள்ளம்; வயலெல்லாம் செழித்தெழுமே!
விடைக்கண்ட நீ விழித்தால் வையகமே விழித்தெழுமே!

வேங்கைவயல் குடிநீரில் மலம்பெய்தோர் மானிடரோ?
ஓங்கிவந்து சாதிபெய்த ஆரியந்தான் பேரிடரே!
ஏங்குமேழை வயிறெரிய ஏய்த்தவர் இரு பிறப்பாளர்!
வீங்குமூடக் களைபறித்த பெரியார் ஒரே-ஒரு சிறப்பாளர்!

கருவறையில் பெண்புணர்ச்சி செய்த கீழோன் மேலோனாம்
மரக்கிளையில் தொங்கி நோற்றுத்தலை இழந்தோன் (சம்புகன்) கீழோனாம்
குடியரசுத் தலைவர் (கீழ்ச்சாதி) வருங்கோயில் தீட்டாகும்
முடியரசாம் மேல்சாதிக் ‘குடியரசை’ வேட்டையாடும்

கொட்டடாநீ பெரும் பறையைத் திசைச் செவிகள் கிழிந்திடவே!
தட்டடாநீ கடும்ஒட்டடைப் புதுப்பொலிவுப் பொழிந்திடவே!
முட்டடாநீ மனத்தின்கண் பெரியாரை வைத்தவாறே!
முட்டாள்கள் மதமுகடுப் பொடிப்பொடியாய்ச் சிதறிடவே! ●

# மே 5 காரல்மார்க்சு பிறந்தநாள்
# மார்க்சை அறிவோம்! மார்க்சியம் கற்போம்!!



க. முகிலன்

காரல் மார்க்சு 1818ஆம் ஆண்டு மே 5ஆம் நாள் செருமனி (பிரஷ்யா) நாட்டில் டிரியர் எனும் சிறிய நகரத்தில் பிறந்தார்.

காரல் மார்க்சு தன் பள்ளிப்படிப்பின் இறுதித் தேர்வில், எதிர்காலப் பணியைத் தேர்வு செய்வது குறித்து ஒரு இளைஞனின் சிந்தனைகள் எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில், மனித குலத்தின் பெருமைக்காகப் பாடுபடக் கூடிய ஒரு வேலையைத் தீர்மானித்துக் கொண்டால், எவ்வளவு சுமைகளும் நம்மை வளைத்துவிடாது. ஏனெனில் அவையெல்லாம் அனைவருக்குமான தியாகங்கள். நமக்குக் கிடைக்கப் போகிற மகிழ்ச்சியோ எல்லையற்றது; கஞ்சத் தனமில்லாதது; அகங்காரமற்றது. நமது மகிழ்ச்சி கோடானு கோடி மக்களுக்குச் சொந்தமானது. நமது சாதனைகள் நீடித்து நிற்கும்; என்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும். உன்னதமான மனிதர்கள் வடிக்கும் கண்ணீரால் நமது சாம்பல் கழுவப்படும் என்று எழுதினார். ஆழ்ந்த கருத்து களைக் கவிதை நடையில் எழுதும் ஆற்றல் காரல் மார்க்சுக்குப் பள்ளிப் பருவத்திலேயே அமைந்துவிட்டது.

மார்க்சு எழுதிய இக்கட்டுரையும் மற்றும் ஆறு கட்டுரை களும் இன்றும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

டெமாக்ரிடஸ் மற்றும் எபிகூரசு ஆகியோரின் இயற்கை பற்றிய தத்துவத்தில் வேறுபாடு எனும் தலைப்பில், மார்க்சு தன் முனைவர் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையை எழுதினார். டெமாக்ரிடஸ், எபிகூரசு இருவருமே நாத்திகர்கள். ஆயினும் டெமாக்ரிடசைவிட எபிகூரசின் ஆய்வும், தத்துவமும் உயர்ந்தவை என்பது மார்க்சின் மதிப்பீடாகும். இக்கட்டுரையில் எபிகூரசை, கீழ்க்குறித்துள்ள லுக்ரிடசின் புகழ் மொழிகளை மேற்கோள்காட்டி மார்க்சு பாராட்டியுள்ளார்.

பிணம் போல் கனத்த மதத்தின் சுமை தாங்காமல் மனிதக் கண்ணுக்கும் புலப்படாதபடி மனித வாழ்வு முட்டி போட்டு ஊர்ந்தது. முரண்டு பிடித்த தனது ஊனக் கண்களைக் கிரேக்கத்தின் ஒரு மனிதன் உயர்த்தினான். முதலில் முதுகெலும்பை நிமிர்த்தினான். துணிவோடு எதிர்கொண்டான். கடவுள்கள் பற்றிய கதைகள் அவனை நொறுக்கவில்லை. வானத்தின் மின்னல் ஒளியும் இடியும் அவனை அசைக்க வில்லை. அவனது காலடியில் மதம் வீழ்ந்து நசுங்கியது. அவனது வெற்றியால் நாமெல்லாம் வானமளவுக்கு உயர்ந்தோம்.

1841 ஏப்பிரல் 15 அன்று ஜெனா பல்கலைக்கழகம் காரல் மார்க்சுக்கு முனைவர் பட்டம் வழங்கியது. அப்போது மார்க்சுக்கு அகவை 23.


ரைன்லாந்து பகுதியின் தலைநகரான கொலோனில் 1842இல் ரைனிஷி ஷெய்டுங் என்ற நாளேடு தொடங்கப் பட்டது. 1842 மே மாதம் அதில் பத்திரிகைச் சுதந்தரம் பற்றி மார்க்சு நீண்ட கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில், வாழ்வதற்கும் எழுதுவதற்கும் மனிதன் சம்பாதிக்க வேண்டும் என்பது உண்மையே. ஆனால் சம்பாதிப்பதற்காகவே அவன் வாழவோ, எழுதவோ கூடாது. எழுத்தாளனுக்கு அவனது எழுத்து ஒரு கருவி அல்ல. அது தன்னளவிலே முடிந்த ஒரு இலக்கு. தேவைப்பட்டால், எழுத்து உயிர்த்திருப்பதற்காகத் தனது உயிரையும் தியாகம் செய்வான் என்று எழுதினார். அதன்படியே தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார்.

1842இல் அந்நாளேட்டின் ஆசிரியரானார். பிரடெரிக் எங்கெல்சு இங்கிலாந்தில் இந்நாளேட்டின் நிருபராக இருந்து செய்திகளையும் கட்டுரைகளையும் அனுப்பி வந்தார். மார்க்சும், எங்கெல்சும் நேரில் சந்திப்பதற்கு முன்பே, இந்த நாளேட்டின் மூலம் இருவரும் அறிமுக மாகியிருந்தனர். ரைனிஷி ஷெய்டுங் நாளேட்டிற்கு நான்கு மாதங்களே மார்க்சு ஆசிரியராக இருந்தார். அரசின் செயல்பாடுகளைக் கடுமையாகத் திறனாய்வு செய்ததால், அரசு இந்நாளேட்டை வெளியிடுவதற்குத் தடைவிதித்துவிட்டது.

1843 சூன் 19 அன்று காரல்மார்க்சும் ஜென்னியும் திருமணம் செய்து கொண்டனர். ஏழு ஆண்டுகளுக்கு மேலான இவர்களின் காதல் திருமணத்தில் முடிந்தது. அப்போது மார்க்சின் அகவை 25. ஜென்னியின் அகவை 29.

பிரஷ்யாவில் (செருமனி) இருந்து கொண்டு பத்திரிகை நடத்த முடியாது என்பதால், பாரிசு நகரிலிருந்து அர்னால்டு ரூகே என்பவருடன் இணைந்து புதிய பத்திரிகை நடத்துவ தற்காக, மார்க்சும் ஜென்னியும் 1843 அக்டோபரில் பாரிசில் குடியேறினர். 1844 சனவரியில் ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்திர ஏடு என்ற பெயரில் இரட்டை இதழாக வெளிவந்தது. இதன் ஆசிரியர்கள் அர்னால்டு ரூகே-காரல் மார்க்சு என அட்டையில் குறிக்கப்பட்டிருந்தது. இம்முதல் இதழே இறுதி இதழாகவும் அமைந்துவிட்டது. பிரஷ்ய அரசு (ஜெர்மன்) தனது நாட்டுக்குள் இப்பத்திரிகை நுழையத் தடை விதித்தது. மேலும் மார்க்சு தன் சொந்த நாடான பிரஷ்யாவுக்குள் நுழைந்தால் கைது செய்ய ஆணை பிறப்பித்தது.

ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்திர ஏடு இதழில் மார்க்சு, ஹெகலின் உரிமையின் தத்துவம் பற்றிய விமர்சனத்திற்குப் பங்களிப்பு: ஓர் அறிமுகம் என்ற கட்டுரையை எழுதியிருந் தார். 13 பக்கங்கள் கொண்ட அக்கட்டுரையில் தான் மார்க்சின் புகழ்பெற்ற - மதம் மக்களுக்கு அபின் எனும் சொற்கோவை இடம்பெற்றுள்ளது. அதன் முழுமையான பத்தி கீழே தரப்பட்டுள்ளது.



மதத்திற்கு எதிரான போராட்டம் என்பது அந்த மதம் எனும் ஆன்மிக வாசனையைக் கொண்டுள்ள உலகத்திற்கு எதிரான மறை முகப் போராட்டமே! மத ரீதியான துன்பம் என்பது உண்மையான துன்பத்தின் வெளிப்பாடே - உண்மையான துன்பத்துக்கு எதிரான கண்டனமே. மதம் என்பது ஒடுக்கப்பட்ட சீவனின் பெருமூச்சு; இதயமற்ற உலகின் இதயம்; ஆன்மநேயமற்ற சூழல்களின் ஆன்ம நேயம். அது மக்களின் அபின். மக்களின் கற்பிதமான இன்பம் என்கிற மதத்தை ஒழிக்க உண்மையான இன்பத் தைக் கொண்டுவர வேண்டியுள்ளது. நடப்புச் சூழல்கள் பற்றிய மாயைகளைக் கைவிடச் செய்ய, அந்த மாயை களைத் தாங்கி நிற்கும் சூழல்களைக் கைவிடச் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே மதம் மீதான விமர்சனம் என்பது மதம் எனும் ஒளி வட்டத்தைக் கொண்ட கண்ணீர் வாழ்வு பற்றிய முதல் விமர்சனமாகும்.

மதம் நீடித்திருப்பதற்கான அடிப்படைச் சூழலை மாற்றாமல் மதத்தை ஒழிக்க முடியாது என்கிற இம்மாபெரும் கருத்தை, மார்க்சு தன் 26ஆம் அகவையில் கண்டறிந்தார் என்பது பெருவியப்புக்குரியதாகும்.

மேலும், இதே கட்டுரையில் மார்க்சின் மற்றொரு புகழ்பெற்ற மேற்கோளும் இடம்பெற்றுள்ளது: ஒரு பௌதிக சக்தியானது இன்னொரு பௌதிக சக்தியாலேயே தூக்கி எறியப்படும். ஆனால் சித்தாந்தமும்கூட ஒரு பௌதிகச் சக்தியாக மாறும் - எப்போது எனில், அது மக்கள் திரளைக் கவ்விப் பிடிக்கும் போது. தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இடையிலான தொடர்பையும், தத்துவம் மனிதர்களின் வழியாக மாபெரும் பௌதிகச் சக்தியாக மாறும் என்கிற பேருண்மையையும் மார்க்சு இதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்க்சைவிட 14 ஆண்டுகள் மூத்தவரான பாயர் பாக் என்பவர், 1841இல் கிறிஸ்துவத்தின் சாரம் என்கிற நூலை வெளியிட்டார். பொருள் முதல்வாத அடிப்படையில் பாயர்பாக் அந்நூலில் மதத்தை விமர்சனம் செய்திருந்தார். இந்நூலை மார்க்சு வரவேற்றார். ஆயினும் பாயர்பாக் தர்க்க அடிப் படையில்-சிந்தனை அடிப்படையில் மட்டுமே மதத்தை விமர்சனம் செய்திருப்பதை மார்க்சு உணர்ந்தார். பாயர் பாக்கின் தத்துவம் நடைமுறையிலிருந்து விலகி கற்பனை உலகில் நிற்பதால் பயன்படாது என்று எண்ணினார். 1844இல் பாரிசில் இருந்தபோது பாயர் பாக்கின் நூல் பற்றிய தன் கருத்துகளைக் குறிப்பேட்டில் இரத்தினச் சுருக்கமாய் எழுதினார். இதுவே பாயர்பாக் பற்றிய சூத்திரங்கள் எனப்படுகிறது. இதன் 1-ஆம் சூத்திரத்தில் தத்துவ ஞானிகள் பல வகையிலும் உலகை விளக்கி இருக்கிறார்கள். நாம் செய்ய வேண்டியது என்னவோ அதை மாற்றுவதுதான் என்று எழுதி இருந்தார். இக்குறிப்பேட்டை மார்க்சு இறந்த பிறகே எங்கெல்சு கண்டெடுத்தார்; 1888இல் இதை நூலாக வெளியிட்டார். மார்க்சின் கல்லறையில் இந்தச் சொற்றொடர் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

பிரஷ்ய அரசின் நெருக்குதல் காரணமாக 1845ஆம் ஆண்டு மார்க்சு குடும்பம் பாரிசிலிருந்து வெளியேற வேண்டும் என்று பிரான்சு அரசு ஆணையிட்டது. அதனால் மார்க்சு குடும்பம் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸெல்ஸ் நகரில் குடியேறியது. நடப்பு அரசியல் பற்றி மார்க்சு எழுத்து வடிவில் ஏதும் வெளியிடக்கூடாது என்கிற நிபந்தனையின் பேரில்தான் அந்நாட்டில் அவர் தங்க அனுமதிக்கப்பட்டார்.

இவ்வுலகம் கடவுளால் படைக்கப்பட்டது. கடவுளால் படைக்கப்பட்ட பொருள்களும் உயிரினங்களும் அவை தோன்றிய காலம் முதலாக மாறாமல் நிலைபெற்று இருக் கின்றன என்று மதவாதிகளும் கருத்து முதல் வாதிகளும் கூறிவந்தனர். இதை மறுத்து செருமானிய தத்துவ அறிஞரான ஹெகல் (1770-1830) இவ்வுலகிலும் - இப்பேரண்டத்திலும் உள்ள எல்லாப் பொருள்களும் இயங்கிக் கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கின்றன. பொருள்களின் இயக்கத்திற்கு அப்பொருள்களுக்குள் பொதிந்துள்ள எதிரெதிர் ஆற்றல்களே - முரண்பாடே காரணம். உலகில் எந்தவொரு பொருளும் தனித்து இருப்பதில்லை. எல்லாப் பொருள்களும் ஒன்றை யொன்று சார்ந்து நின்று இயங்குகின்றன என்று அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து அறிவித்தார். இந்தக் கோட்பாடுதான் இயக்கவியல் எனப்படுகிறது. இதுவே மார்க்சியத்தின் அடிப்படையாகும். எனவேதான் ஹெகல் இயக்கவியலின் தந்தை எனப்படுகிறார்.

ஹெகலின் கோட்பாட்டை மார்க்சு, எங்கெல்சு உள்ளிட்ட எண்ணற்ற இளைஞர்கள் தீவிரமாக ஆதரித்தனர். இவர்கள் இளம் ஹெகலியர் என அழைக்கப்பட்டனர். ஆனால் மார்க்சின் ஆய்வுநோக்கு விரிவடைந்த பின், உயர்ந்த படைப்புகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருப்பது மனிதனின் சிந்தனையே என்கிற ஹெகலின் முடிவை மார்க்சு எதிர்த்தார். ஹெகல் இயக்கவியலைத் தலைகீழாக நிறுத்தியுள்ளார். அதை நேராக மாற்றுவதே நம் வேலை என்று மார்க்சு கூறினார்.

ஆனால் மற்ற இளம் ஹெகலியர்கள், ஹெகல் கூறியுள்ளதே சரி என்று கூறி, ஹெகலைத் தலைமேல் வைத்துக்

கொண்டாடினர். எனவே இளம் ஹெகலியரின் தத்துவ நிலைபாடுகளுக்கு எதிராக 1845 நவம்பரில் மார்க்சும் எங்கெல்சும் இணைந்து, ஜெர்மானிய சித்தாந்தம் என்ற நூலை எழுதினர். ஆனால் எங்கெல்சின் இறப்புக்குப் பின்னரே, இந்நூலின் சில பகுதிகள் வெளிவந்தன. முழுமை யான வடிவில் நூலாக 1930களில் சோவியத் கம்யூனிஸ்டு கட்சியால் வெளியிடப்பட்டது. இந்த நூலில்தான் மார்க்சியத்தின் பிழிவான வரிகளாகத் திகழும் உணர்வு வாழ்நிலையைத் தீர்மானிப்பதில்லை; வாழ்நிலைதான் உணர்வைத் தீர்மானிக் கிறது எனும் வரிகள் இடம்பெற்றுள்ளன.

இந்திய சமூகத்தில் இந்திய மார்க்சியர்களும், மற்றவர் களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற் காகவே கூறப்பட்டிருப்பது போன்ற - நூற்பா (சூத்திரம்) போன்ற - ஒரு கருத்தை மார்க்சும் எங்கெல்சும், செருமானிய தத்துவம் நூலில் எழுதியுள்ளனர் :

ஆளும் வர்க்கத்தின் சிந்தனைகளே ஒரு யுகத்தை ஆளும் சிந்தனைகளாக உள்ளன. ஆளும் வர்க்கம் என்றால் அது சமுதாயத்தின் பொருளியல் சக்தியை மட்டுமல்லாது அறிவுச் சக்தியையும் ஆளுகிறது. பொருள் உற்பத்திக்கான காரணங்களைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கிற வர்க்கமானது, அதன் காரணமாகவே அறிவு உற்பத்திக்கான காரணங் களையும் தன் கட்டுக்குள் வைத்திருக்கிறது. இந்தச் சாதனங் களைக் கொண்டிராதவர்களின் சிந்தனைகள் இதற்குப் பொதுவாகவே அடங்கிப் போய்விடுகின்றன.

இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அறிவுச் சக்தியை ஆளும் வர்க்கமாகப் பார்ப்பனர்களே இருந்து வந்துள்ளனர். வருணாசிரம-சாதிய அமைப்பின் காரணமாகப் பார்ப்பனர்கள் சமூகத்திலும் மதம் தொடர்பான வற்றிலும் பெற்றிருந்த ஏகபோக உரிமையால் சமூகத்திற்கான கருத்துருவாக்கம் செய்யும் மூலகர்த்தாக்களாக விளங்கினர். உற்பத்திச் சக்திகளிலும் உற்பத்தி உறவுகளிலும் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களால் பார்ப்பனர்களின் ஏகபோக உரிமை களில் பிறப்பால் அறிவிலும் தகுதியிலும் உயர்ந்தவர் என்ற நிலைமையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை. முதலாளிய உற்பத்தி முறை மேலோங்கிய பிறகும், இதே நிலைதான் நீடிக்கிறது.

ஏனெனில் உற்பத்திச் சக்திகளிலும் உற்பத்தி உறவு களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்ற அதே வேகத்தில், அச்சமூகத்தின் சித்தாந்தத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை. இதற்கெனத் தனியாக, தீவிரமான முயற்சிகளை மேற் கொண்டாலன்றி, பழைய சமூகத்தின் சித்தாந்த ஆதிக்கமே தொடர்ந்து நீடிக்கும்.

இந்தியாவில் பாரசிகர், ஹுணர், குஷானர், துருக்கியர், ஆங்கிலேயர் முதலான அயல்நாட்டவர்களின் படையெடுப்பும், ஆட்சிகளும் ஏற்பட்ட பிறகும், இந்தியாவில் பார்ப்பனியச் சித்தாந்தமே சமூகத்தை ஆட்டிப்படைக்கிறது. உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றத்தின் வேகத்திற்கு ஈடான வகையில் சமூகச் சிந்தனையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற குறிக்கோளுடன் சீனாவில் 1965இல் மாசேதுங் கலாச்சாரப் புரட்சியை நடைமுறைப்படுத்தினார்.

செய்தி ஏடுகள், தொலைக்காட்சி, கணினி போன்ற நவீன ஊடகங்கள் வாயிலாக ஆளும் வர்க்கம் தன் இருத்தலுக்கான நியாயத்தை மக்கள் நெஞ்சங்களில் பதியச்செய்து வருகிறது. இந்தியா அரை நிலப்பிரபுத்துவ-அரை முதலாளித்துவ நாடாக இருப்பதால், பார்ப்பனர்கள் ஊடகங்கள் வாயிலாகத் தங்கள் கருத்தியலை சாதி அமைப்பை, தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றனர்.

1847-இல் புருதோன் என்பவர் வறுமையின் தத்துவம் என்ற நூலை எழுதினார். முதலாளித்துவம் பற்றிய பொரு ளாதார விதிகள் என்பவை நிலையானவை; மாற்ற முடியாதவை என்று புருதோன் அந்நூலில் அறுதியிட்டுக் கூறியிருந்தார். அந்நூலின் கருத்தை மறுத்து, மார்க்சு, தத்துவத்தின் வறுமை என்ற நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதினார். ஏனெனில் புருதோன் அவருடைய நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதியிருந்தார்.

பொருளாதார விதிகள் என்பவை வரலாற்று ரீதியாக உருவானவை. மனிதனின் தேவைகளின் பொருட்டே புதிய கண்டுபிடிப்புகளும் உற்பத்திச் சாதனங்களும் தோன்றி வருகின்றன. இந்த வளர்ச்சியின் நிகழ்வுப் போக்கின் ஊடாகச் சமுதாயம் மாறுகிறது. உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளையும் அடிக்கட்டுமானமாகக் கொண்டுள்ள சமுதாயத்தில், அவற்றுக்கு ஏற்ப, மேல்கட்டுமானமாக உள்ள அரசியல், சட்டம், தத்துவங்கள் முதலானவற்றில் மாறுதல்கள் ஏற்படுகின்றன என்று மார்க்சு பதில் அளித்தார்.

இலண்டனில் இருந்த நீதியாளர் கழகம் என்பது 1847 முதல் கம்யூனிஸ்டுக் கழகம் என்ற பெயரில் இயங்கியது. கம்யூனிஸ்டுக் கழகத்தின் வேண்டுகோளை ஏற்று மார்க்சும் எங்கெல்சும் இதில் இணைந்தனர். புதிய பெயருக்கு ஏற்ற தன்மையில் கட்சியின் கோட்பாடுகளை வகுக்கும் பொறுப்பு மார்க்சு, எங்கெல்சு இருவரிடமும் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் உருவாக்கிய 23 பக்க அறிக்கை கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை என்ற பெயரில் 1848 பிப்பிரவரியில் இலண்டனில் வெளியிடப்பட்டது. உலகையே உலுக்கிய இந்த அறிக்கையை எழுதிய போது மார்க்சின் அகவை 30; எங்கெல்சுக்கு 28 அகவை. இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறேயாகும் எனும் வரியுடன் தொடங்கும் கம்யூனிஸ்டு அறிக்கையில், நிலவுடைமை உற்பத்தி முறையிலிருந்து முதலாளிய உற்பத்தி முறைக்கு மாறியுள்ளதால், சமூகத்தில் உற்பத்தி உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், முதலாளித்துவத்தின் இயக்கப் போக்கு மற்றும் அதன் சுரண்டல் வடிவங்கள் குறித்து நெஞ்சைக் கனலாக்கும் நடையில் எழுதப்பட்டுள்ளது.

அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள் - கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று; பாட்டாளிகள் இழப்பதற்கு ஏதுமில்லை

- தங்கள் அடிமைச் சங்கிலிகளைத் தவிர! ஆனால் அவர்கள் வெல்வதற்கோ அனைத்து உலகும் இருக்கிறது.

எனவே உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற அறைகூவலுடன் முடியும் கம்யூனிஸ்டு அறிக்கை உலகம் முழுவதும் உழைக்கும் மக்களிடையே புரட்சிக் கனலை மூட்டியது. முதலாளிகளிடையே பெரும் அச்சத்தை ஊட்டியது.

கம்யூனிஸ்டு அறிக்கையில், தான் புதியதாகக் கூறியுள்ள கோட்பாடு குறித்து மார்க்சு வெய்டெமையருக்கு 1852 மார்க்சு 3ஆம் நாள் எழுதிய மடலில் அவருக்கே உரிய அறிவு நாணயத்துடன் எழுதியுள்ளார்.

என்னைப் பொறுத்தவரை நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் இருக்கின்றன என்பதையோ, அவற்றிற்கு இடையே போராட்டம் நடக்கிறது என்பதையோ கண்டுபிடித்த பெருமை என்னைச் சேராது. எனக்கு வெகுகாலத்திற்கு முன்னரே இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சியை முதலாளித்துவ வரலாற்றாளர்கள் விரிவாகக் கூறியிருக் கிறார்கள். அதேபோன்று இந்த வர்க்கங்களின் பொருளாதார உள்கட்டமைப்பை முதலாளித்துவப் பொருளா தாரவாதிகள் விவரித்துவிட்டார்கள். நான் செய்துள்ள புதிய பங்களிப்பு 1. இந்த வர்க்கங்களின் இருப்பு என்பது உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் இணைக் கப்பட்டுள்ளது என்பதாகும். 2. வர்க்கப் போராட்டமானது அவசியமான வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச்செல்கிறது. 3. அந்தச் சர்வாதிகாரமும் அனைத்து வர்க் கங்களையும் ஒழித்த, ஒரு வர்க்கமற்ற சமுதாயத்திற்கான இடைக்கால ஏற்பாடா கவே இருக்கும்.

கம்யூனிஸ்டு அறிக்கையை செருமனி, பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலி, பிளமிஷ், டேனிஷ் ஆகிய ஆறு மொழிகளில் ஒரே சமயத்தில் வெளியிடத் திட்டமிட்டனர். 1848 பிப்பிரவரியில் செருமன் மொழியில் மட்டுமே வெளியிடப் பட்டது. நாற்பது ஆண்டுகள் கழித்து - மார்க்சு மறைந்த பிறகு, 1888இல் தான் ஆங்கில மொழியில் வெளிவந்தது.

சமதர்ம அறிக்கை என்ற பெயரில் பெரியார் 1931இல் குடிஅரசு ஏட்டில் கம்யூனிஸ்டு அறிக்கையை வெளியிட்டார். அய்ந்து வாரங்கள் ஒரு தொடராக அது வெளிவந்தது. முதலாளிகளும் பட்டாளிகளும் எனும் முதல் அத்தியாயம் மட்டுமே வெளியானது. ப.ஜீவானந்தம் இதை மொழிபெயர்த்தார்.

கம்யூனிஸ்டு அறிக்கையை குடிஅரசில் வெளியிட்ட போது பெரியார் எழுதிய அறிமுக உரையில், உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மையில் எல்லா நாடுகளிலும் பணக்காரன்-ஏழை, முதலாளி- தொழிலாளி என்கிற வேற்றுமை மட்டுமே இருக்கின்றன. ஆனால் இந்தியாவிலோ இவற்றுடன் கூட உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்கிற ஏற்றத்தாழ்வு முதன்மையானதாகவும், இந்தத் தத்துவத்துக்குக் கோட்டையாகவும் இருந்து வருகிறது என்று எழுதினார். சமதர்மம் வருவதற்கு-வர்க்க ஒர்மை ஏற்படுவதற்குத் தடையாக உள்ள வருணாசிரம-சாதி அமைப்பைத் தகர்க்க வேண்டியது முதன்மையான வேலை என்று பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார்.

1849 ஆகஸ்டு மாதம் மார்க்சு இலண்டனில் குடியேறினார். அதன்பின், இறுதி வரை இலண்டனி லேயே வாழ்ந்தார். 1851 முதல் இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் படித்தார். 1853இல் அமெரிக்காவின் நியூயார்க் டெய்லி டிரிபியூன் ஏட்டிற்கு மார்க்சு இந்தியாவைப் பற்றி 11 கட்டுரைகள் எழுதினார். இலண்டனில் படித்த வற்றின் அடிப்படையில் இந்தியாவின் நிலையை மார்க்சு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இதோ, ஓர் எடுத்துக்காட்டு :

இந்துஸ்தானத்தில் கொலையே ஒரு தெய்வச் சடங்கா யிற்று. இதை நாம் மறக்கக் கூடாது. இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமை முறையாலும் களங்க மடைந்திருந்தன. மனிதனைச் சூழ்நிலைக்கு எசமானன் ஆக்குவதற்குப் பதிலாக, அவனை அதற்கு அடிமைப்படுத்தின. சமூக நிலையை ஒருபொழுதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் மிருகத்தனமான நிலைமை ஏற்படுத்தப்பட்டது. இயற்கையின் எசமானனாகிய மனிதன் குரங்காகிய அனுமன் முன்பும் பசு மாட்டின் முன்பும் தெண்டனிட்டு வணங்கியதில் இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றை நாம் மறக்கக் கூடாது என்பதே அது.

1857 மற்றும் 1858இல் நியூயார்க் டெய்லி டிரிபியூன் ஏட்டிற்கு சிப்பாய்க் கலகத்தை மய்யப்படுத்தி மார்க்சு 18 கட்டுரைகளும், எங்கெல்சு 10 கட்டுரைகளும் எழுதினர். மார்க்சு எழுதிய முதல் கட்டுரையில், ரோமாபுரியின் பிரித்தாளும் கொள்கை எனும் சக்திவாய்ந்த ஆயுதத்தைக் கடைப்பிடித்தே பிரிட்டன் ஏறக்குறைய 150 ஆண்டுகாலமாக இந்திய சாம்ராஜ்ஜியத்தைத் தந்திரமாகத் தனது பிடியில் வைத்திருக்கிறது. பகைமைகள் நிறைந்த பல்வேறு இனங்கள், குலங்கள், சாதிகள், சமயங்கள், அரசுகள் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து உருவாக்கப்பட்டிருக்கின்ற பூகோள ஒற்றுமையைத் தான் இந்தியா என்று அழைக்கின்றோம் என்று எழுதியுள்ளார்.

1858இல் மார்க்சு அரசியல் பொருளாதார விமர் சனத்திற்கு ஒரு பங்களிப்பு என்ற நூலை எழுதினார். இந்நூலுக்கு 1859இல் மார்க்சு ஒரு முன்னுரை எழுதினார். இந்நூலை விட இந்த முன்னுரை புகழ்பெற்றதாகிவிட்டது. அந்த முன்னுரையில் மார்க்சியத்தின் சாறாக உள்ள ஒரு மேற் கோளைப் படியுங்கள் :

மனிதர்கள் தங்களது சமூக வாழ்வை நடத்திச் செல்லும் பொழுது சக மனிதர்களுடன் சில திட்டவட்ட மான உற்பத்தி உறவுகளை மேற்கொள்கிறார்கள். அந்த உறவுகள் தவிர்க்க முடியாதவை. இவர்களின் ஆணைக்கு அடங்காதவை. அந்த உற்பத்தி உறவுகளின் கூட்டு மொத்தமே சமுதாயத்தின் பொருளா தாரக் கட்டமைப்பாக - உண்மையான அடித்தளமாக அமைகிறது. இந்த அடித்தளத்தின் மீதே ஒரு சட்டபூர்வ மற்றும் அரசியல் மேற்கட்டுமானம் எழுகிறது. அதற்கேற்ற

திட்டவட்டமான சமூக உணர்வுகளும் தோன்றுகின்றன. பொருள் உற்பத்தி வாழ்வு முறையே பொதுவாக சமூக, அரசியல், அறிவுபூர்வ வாழ்வு முறையினை நெறிப்படுத்து கிறது. மனிதனின் உணர்வு நிலை மனிதனின் வாழ்நிலை யைத் தீர்மானிக்கவில்லை. மனிதனின் வாழ்வு நிலையே மனிதனின் உணர்வு நிலையைத் தீர்மானிக்கிறது.

மனிதகுல வரலாற்றைப் பொருள் முதல்வாத அடிப்படையில் விளக்கும் மார்க்சின் இந்நூல் வெளி வந்த 1859ஆம் ஆண்டில், சார்லஸ் டார்வின் எழுதிய இயற்கைத் தேர்வின் மூலமாக உயிரினிங்களின் தோற்றம் எனும் நூலும் வெளிவந்தது. மார்க்சின் வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கோட்பாட்டுக்கு டார்வினின் நூல் அரண்சேர்ப்ப தாக அமைந்தது.

1867 செப்டம்பர் 14 அன்று மார்க்சின் பேருழைப்பால் உருவாக்கப்பட்ட மூலதனம் நூலின் முதல் பகுதி வெளியிடப் பட்டது. முதலாளிய உற்பத்தி முறையில் மூலதனத்தை உருவாக்குவதிலும் பெருக்குவதிலும் அச்சாணியாகச் செயல் படும் உபரி மதிப்பை ஆய்ந்தறிந்து கூறியதே மார்க்சின் இரண்டாவது மாபெரும் பங்களிப்பாகும்.

அய்ரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலை மைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மூலதனத்தின் முதல் பாகத்தை மார்க்சு எழுதினார். தன் சிந்தனையை மேலும் விரிவுபடுத்துவதற்காக அமெரிக்காவின், இரஷ்யாவின் பொருளாதாரம் குறித்த எண்ணற்ற நூல்களைப் படித்தார். விரிவான குறிப்புகளை எழுதினார். ஆனால் இவற்றை நூல் வடிவில் எழுதுவதற்குள் 1883 மார்ச்சு 14 அன்று அவர் மறைந்தார். மனிதகுலத்தின் ஒரு தலை குறைந்தது. ஆனால் நம் தலைமுறையின் மிகச்சிறந்த தலை அது என்று எங்கெல்சு கூறினார்.

மூலதனத்தின் இரண்டாம் பாகம் என்று எழுத மார்க்சு திட்டமிட்டிருந்ததை, எங்கெல்சு இரு பகுதிகளாகப் பிரித்து இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் என்று வெளியிட்டார். இரண்டாம் பாகம் 1885ஆம் ஆண்டிலும், மூன்றாம் பாகம் 1894ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. உண்மையில் இரண்டாம், மூன்றாம் பாகங்களை மார்க்சும் எங்கெல்சும் இணைந்து எழுதினார்கள் என்றே கருத வேண்டும்.

வெவ்வேறு நாடுகளில் நிலவும் சமூகச் சூழல்களுக்கு ஏற்பவே மார்க்சியத்தைக் கட்டமைக்க வேண்டும் என்பதை மார்க்சியத்தின் மூலவர்களான மார்க்சும் எங்கெல்சும் வலியுறுத்தியுள்ளனர். இலெனினும் மாவோவும் இக்கருத்துக்கு மேலும் செழுமை சேர்த்துள்ளனர். இந்தியாவின் சமூக உற்பத்தியிலும் உறவிலும் சாதி அமைப்பு திட்ட வட்டமான முறையில் செயல்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, இன்றைய ஏகாதிபத்தியச் சூழலில் மார்க்சியத்தை மறுகட்ட மைப்புச் செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமை நம்முன் உள்ளது.

● - **சிந்தனையாளன் மே 2019 இதழ்**

## கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்குக் கடற்கரையிலிருந்து தனியே பாலம் அமைத்திட கூட்டறிக்கை




கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைக்குக் கடற் கரையிலிருந்து தனியே பாலம் அமைத்திட வலியுறுத்தித் திருக்குறள் ஆர்வலர்கள், தமிழறிஞர்களால் வெளியிடப் பட்ட கூட்டறிக்கையைத் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் முத்தரசன் மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் கே.பாலகிருட்டிணன் ஆகியோரிடம் திருக்குறள் பேரவை யின் சார்பில் தென்மொழி ஆசிரியர் முனைவர் மா. பூங்குன்றன், கல்லக்குறிச்சி புலவர் மோகன், தமிழியக்கம் செயலாளர் மு.சுகுமார், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் வாலாசா வல்லவன், தமிழ்த்தேச நடுவத் தோழர் பாவேந்தன் தமிழக மக்கள் முன்னணி சார்பில் பொழிலன் ஆகியோர் 2.06.2023 அன்று குழுவாகச் சென்று அறிக்கையை அளித்து, இதை நிறைவேற்றுமாறு வலியுறுத்தினர்.

## சோளிங்கபுரத்தில் அரசியல் பயிலரங்கம்



தமிழக மக்கள் முன்னணி, மக்கள் தமிழகம் கட்சி 30.04.2023 ஞாயிறு அன்று முழுநாள் அரசியல் பயிலரங்கம் சோளிங்கபுரம் குட்லைட் உயர்நிலைப் பள்ளியில் நடத்தின. தோழர்கள் வாலாசா வல்லவன், பொழிலன் ஆகியோர் தமிழக வரலாறு, தமிழ்த்தேசிய இன விடுதலை இந்துத்துவத்தை எதிர்கொள்வது குறித்து பயிற்றுவித்தனர். தோழர் க.முகிலன் வாழ்த்துரை வழங்கினார். தோழர் விசுவநாதன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். 40 தோழர்கள் கலந்து கொண்டனர்.

# தில்லி தேசியத் தலைநகர் பிரதேசம்: மாநிலமா? ஒன்றிய ஆட்சிப் பகுதியா?



- பேரா. ராஜன்குறை

சென்ற வாரம் கலைஞர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை தமிழ் நாட்டு அரசு அறிவித்தது. ஆனால் அவர் பிறந்த நாளன்று நிகழ இருந்த அரசு விழாக்கள் அனைத்தும் ஒரிசாவில் நடந்த கோர இரயில் விபத்தினால் தள்ளிப்போடப்பட்டன. இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் முன்னால் இன்னொரு அபூர்வமான நிகழ்வு நடந்தது.

அது என்னவென்றால் ஆம் ஆத்மி கட்சியின் தலைவரும், தில்லி முதல்வருமான அர்விந்த் கேஜ்ரிவால், அதே கட்சியின் பஞ்சாப் முதல்வர் பக்வந்த் மான், தில்லி அமைச்சரவையில் முக்கிய பங்குவகிக்கும் ஆடிஷி உள்ளிட்டோர் அடங்கிய குழு முதல்வர் ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து ஒன்றிய அரசின் அவசரச் சட்டம் ஒன்றுக்கு எதிராக ஆதரவு கேட்டனர்.

இதற்கு முன்பு அர்விந்த் கேஜ்ரிவால் பல்வேறு மாநில முதல்வர்களையும் சந்தித்து ஆதரவு கேட்டிருந்தார். ஏனெனில் அவசரச் சட்டம் மாநிலங்கள் அவையில் நிறைவேற்றப்படாமல் தடுக்க அனைத்து மாநிலக் கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை.

இந்த அவசரச் சட்டம், உச்சநீதிமன்றம் கடந்த மாதம் அளித்த முக்கியத் தீர்ப்பினை செயலிழக்கச் செய்யும் பொருட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. அது என்ன தீர்ப்பு என்றால், தில்லி அரசாங்கத்தில் பணியாற்றும் இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகளை அந்த அரசின் எல்லைக் குட்பட்டு பணி மாற்றம் செய்தல், அவர்கள் பணிகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பானது.

இந்தப் பிரச்சினையில், தில்லியின் துணைநிலை ஆளுநர் தனக்குத்தான் அதிகாரிகளின் பணி மாற்றப் பிரச்சினைகளில் அதிகாரம் இருக்கிறது என்று கூறி வருகிறார். ஒன்றிய அரசின் பிரதிநிதியாக விளங்கும் அவர்தான் அதிகாரிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பதே ஒன்றிய அரசின் நிலைப்பாடாக உள்ளது.

இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வாகும் அதிகாரிகளுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்ட பின், அவர்கள் பல்வேறு மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவார்கள். ஓர் அதிகாரி தமிழ்நாடு கேடர் என்று நியமிக்கப்பட்டுவிட்டால், அவரை எங்கே பணியில் அமர்த்துவது, மாற்றுவது, அவர் பணியினை மேற்பார்வையிடுவது, தேவைப்பட்டால் அவர் மேல் நடவடிக்கை எடுப்பது ஆகிய எல்லா உரிமைகளும் தமிழ்நாடு அரசுக்கு வந்துவிடும்.

ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அதிகாரிகளில் சிலரை ஒன்றிய அரசு மீண்டும் கோரிப் பெறலாம். மாநில அரசின் விருப்பம், அந்தக் குறிப்பிட்ட அதிகாரியின் விருப்பம் ஆகியவற்றையும் கணக்கில் கொண்டுதான் அவ்விதமான பணி மாற்றத்தைச் செய்வார்கள். மற்றபடி அந்த அதிகாரிகளின் பணி முழுக்கவும் மாநில அரசுக்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கும்.

ஆனால், தில்லியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசும், முதல்வரும் இருந்தாலும் அந்த அரசால்- முதல்வரால் அதிகாரிகளின் பணிகளைக் கட்டுப்படுத்த முடியாது. அவர்களைப் பணி மாற்றம் செய்ய முடியாது. இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள்தான் அரசு இயந்திரத்தைக் கட்டுப்படுத்துபவர்கள். இவர்களே மக்கள் பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டால் அரசு எந்திரத்தை எப்படி இயக்க முடியும், எப்படி மக்களாட்சி நடைபெறும் என்பதே கேள்வி.

தில்லி அரசினைப் பொறுத்தவரை ஒரு பெரிய சிக்கல் என்னவென்றால் அது ஒரு மாநிலமா அல்லது ஒன்றியப் பிரதேசமா என்பதுதான். இந்தியாவில் இப்போது 29 மாநிலங்களும், 9 ஒன்றியப் பிரதேசங்களும் உள்ளன. அண்மையில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் இரண்டு ஒன்றியப் பிரதேசங்களாக மாற்றப்பட்டன.

அவற்றையும், தில்லியையும் தவிர பிற ஒன்றியப் பிரதேசங்கள் மிகவும் சிறியவை. புதுச்சேரியிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் இருந்தாலும், அது பன்னிரண்டு இலட்சம் குடிமக்களை மட்டுமே கொண்ட சிறிய பிரதேசமாகும்.

ஆனால், தில்லியின் பரிமாணங்கள் முற்றிலும் வேறுபட்டவை. தில்லியின் மக்கள் தொகை ஒரு கோடியே அறுபத்தி மூன்று இலட்சமாகும். இமாசல பிரதேசம், உத்தரகண்ட் உள்ளிட்ட இந்திய மாநிலங்கள் பலவற்றின் மக்கள் தொகை இதைவிட குறைவானது.

ஐக்கிய நாடுகள் அவையில் உறுப்பினர்களாக உள்ள 120 சுதந்திர நாடுகளின் மக்கள் தொகை இதைவிட குறைவானது. இவ்வளவு பெரிய மக்கள் தொகுதியின் சுயாட்சி வடிவம் எப்படியிருக்க வேண்டும் என்பதே முக்கிய பிரச்சினையாக எழுந்துள்ளது.

தில்லியின் வரலாறு : தில்லி தொன்றுதொட்டு பல்வேறு அரசர்களின் தலைநகரமாக விளங்கியதாகக் கருதப்பட்டாலும், பதிமூன்றாம் நூற்றாண்டில் சுல்தான்களின் தலைநகரமாக மாறியதிலிருந்துதான் அதன் நவீன அடையாளம் தொடங்குகிறது. அதற்கு சான்றாக குதுப்மினார் போன்ற நினைவுச் சின்னங்கள் அமைந்துள்ளன. அதனைத் தொடர்ந்து மொகலாயப் பேரரசின் தலைநகரமாகவும் இது விளங்கியது.

ஆங்கிலேயர்கள் தங்கள் தலைமையகத்தை கல்கத்தாவிலே கொண்டிருந்தாலும், 1911ஆம் ஆண்டு தில்லியைத் தலைநகராக மாற்றிக்கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து சுதந்திர இந்தியாவின் தலைநகராகவும் தில்லி விளங்கி வருகிறது.

சுதந்திரத்திற்கு பிறகு இந்தியாவில் நான்கு வகையான மாநிலங்கள் அறிவிக்கப்பட்டன. அதில் ஒன்றிய அரசின் மேற்பார்வைக்கு உட்பட்ட 'சி' பிரிவு மாநிலமாக தில்லி அறிவிக்கப்பட்டது. காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பிரம்ம பிரகாஷ் என்பவரும் குர்முக் நிகால் சிங் என்பவரும் 1952 முதல் 1955 வரை முதல்வர்களாக இருந்தார்கள். அதன் பின் 1956இல் இந்திய மாநிலங்கள் மறுவரை செய்யப்பட்ட போது மாநிலங்கள் அல்லது ஒன்றிய பிரதேசங்கள் என்ற இரண்டு வரையறைகள் மட்டுமே உருவானது.

தில்லி ஒன்றியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டதால் முதல்வர் பதவி ஒழிக்கப்பட்டது. சட்டமன்றமும் கிடையாது, முதல்வரும் கிடையாது. ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் துணைநிலை ஆளுநரே மாநகரை ஆட்சி செய்தார். அவருக்கு உதவி புரிய ஒரு கவுன்சில் இருந்தது. ஆனால் அதன் உறுப்பினர்களுக்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் கிடையாது. ஆலோசனைகள் மட்டுமே வழங்கலாம். அதனைத் தவிர தில்லி மாநகராட்சி என்ற உள்ளூர் நிர்வாக அமைப்பு இருந்தது.

**மீண்டும் பிறந்த தேசிய தலைநகர் பிரதேச அரசு**

புதிய மாநிலங்கள் வரையறையில் தில்லி ஒன்றியப் பிரதேசமாக வரையறுக்கப்பட்ட 1956ஆம் ஆண்டுக்குப் பிறகு, தில்லி மாநகரம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்தது. அதன் மக்கள் தொகையும் பெருகியது. உலகின் பெரிய நகரங்களில் ஒன்றாக தில்லி மாறியது. அப்போதுதான் மீண்டும் இவ்வளவு பெரிய மக்கள் தொகுதிக்கு ஒரு சுயாட்சி அரசு வேண்டாமா, தனிப்பட்ட நிர்வாகம் வேண்டாமா என்ற கேள்வி எழுந்தது. இது தொடர்பாக அமைக்கப்பட்ட குழுக் களின் பரிந்துரைகளின் அடிப்படையில், 1991ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் 69ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அது தில்லியை "தேசியத் தலைநகர் பிரதேச அரசு" என்ற பெயரில் வரையறுத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமும், அமைச்சரவையும், முதலமைச்சரும் உருவாக வகை செய்தது. ஆனால் மற்ற மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களில் மூன்று தில்லி அரசுக்குக் கிடையாது என்றும் விதிவிலக்கு அளித்தது.

அந்த மூன்று: மாநிலங்களின் அதிகாரங்கள் பட்டியல் ஒன்று, இரண்டு, பதினெட்டு ஆகிய எண்கள் கொண்ட மூன்று அம்சங்கள். ஒன்று, பொது ஒழுங்கு. இரண்டு, காவல்துறை. மூன்று நிலத்தின் மீதான உரிமை. இதன் பொருள் என்னவென்றால் சட்டம் ஒழுங்கும், காவல்துறையும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். நிலத்தின் மீதான உரிமையும் ஒன்றிய அரசுக்கே உண்டு. ஏனெனில் இது ஒன்றியப் பிரதேசம் என்பதால்.

இப்படியாக மாநில அரசாகவும் முழுமையாக இல்லாமல், ஒன்றியப் பிரதேசமாகவும் இல்லாமல் இரண்டும் கெட்டானாக தில்லியில் மக்களாட்சி அரசு அமைந்தது எனலாம். இந்த அரசுக்கும், மாநகராட்சிக்கும் என்ன வித்தியாசம் என்பதும் கூட ஒரு கேள்விதான். கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் மாநகராட்சியைவிட கூடுதல் அதிகாரங்கள் உள்ளன என்று கூறலாம். ஆனால் சட்டம் ஒழுங்கும், காவல் துறையும் தன் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு மக்களாட்சி அரசு எப்படி ஆட்சி புரியும் என்பதே குழப்பம்தான்.

தில்லியில் அமைந்த ஆட்சிகள். இந்த புதிய தேசிய தலைநகர் பிரதேச அரசு உருவானவுடன் நடந்த தேர்தலில் 1993ஆம் ஆண்டு பாரதீய ஜனதா கட்சியே வெற்றி பெற்றது. அப்போது ஒன்றிய அரசில் நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. 1993-1998 இடையிலான ஐந்து ஆண்டுகளில் மதன்லால் குரானா, சாஹிப் சிங் வர்மா, சுஷ்மா சுவராஜ் ஆகிய மூன்று பாஜக முதல்வர்கள் ஆட்சி செய்தனர்.

அதன் பிறகு 1998ஆம் ஆண்டு நிகழ்ந்த தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்றது. ஷீலா தீட்சித் முதல்வரானார். இவர் தொடர்ந்து மூன்று தேர்தல்களில் வென்று பதினைந்து ஆண்டுக் காலம் தில்லியின் முதல்வராக விளங்கினார். இந்தக் காலகட்டத்தில் தில்லி பெரும் வளர்ச்சி கண்டது. ஆனால் ஆட்சியின் இறுதிப் பகுதியில் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளும், அதிருப்தியும் பெருகியது.

தில்லியில் 2011ஆம் ஆண்டு பொது வாழ்க்கையில் ஊழலுக்கு எதிராக அன்னா அசாரே என்பவர் ஒரு சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கினார். ஊழல் செய்பவர்களை விசாரித்து தண்டிக்க லோக் ஆயுக்தா என்ற அமைப்பும், புதிய சட்டமும் உருவாக்கப்பட வேண்டும் என்று கோரினார். அவருக்கு ஊடகங்களின் ஆதரவும், பொது மக்களின் ஆதரவும் பெருகியது.

அந்தப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த அர்விந்த் கேஜ்ரிவால், பிரசாந்த் பூஷண், மனிஷ் சிசோடியா, யோகேந்திர யாதவ் ஆகியோர் பின்னாளில் ஆம் ஆத்மி கட்சியைத் தொடங்கினர். ஆம் ஆத்மி கட்சி நடுத்தர வர்க்கத்தினரின் கட்சியாக இருந்தாலும், 2013 தேர்தலில் அடித்தட்டு மக்களின் ஆதரவைப் பெற்றது; ஆட்சியமைத்தது.

அந்த ஆட்சி கலைக்கப்பட்டாலும், அதைத் தொடர்ந்து 2015, 2020 ஆகிய ஆண்டுகளிலும் மோடி அலையை எதிர்த்து ஆம் ஆத்மி பெரும் வெற்றி பெற்றது. பாஜக 2014, 2019 ஆண்டுகளில் நாடாளுமன்றத் தேர்தல்களில் வென்று

ஆட்சியமைத்தாலும் தில்லியில் அதனால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை.

இது போதாதென்று, ஆம் ஆத்மி கட்சி பஞ்சாப் மாநிலத்திலும் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்துள்ளது. குசராத் தேர்தலிலும் பாரதீய ஜனதா கட்சிக்கு நெருக்கடி கொடுத்தது. நடுத்தர வர்க்க அரசியல் நோக்குக்கு அனுசர ணையான ஆம் ஆத்மி கட்சி பாஜகவுக்கு வேறுவிதமான மாற்றாக தன்னை முன்னிறுத்திக் கொள்வதால் பாஜகவின் கடும் சினத்தை எதிர்கொள்ள நேர்கிறது. ஆம் ஆத்மி அமைச்சர்கள் மீது பல்வேறு வழக்குகளைப் போட்டு சிறையில் அடைத்துள்ளது ஒன்றிய பாஜக அரசு.

தொடர்ந்து அர்விந்த் கேஜ்ரிவால் அரசுக்கு மாநில ஆளுநரின் மூலம் பல்வேறு முட்டுக்கட்டைகள் போட்டு வந்தது. பல்வேறு அம்சங்களில் தில்லி மாநில அரசின் உரிமைகள் என்ன, அதிகாரங்கள் என்ன என்பதும், ஒன்றிய அரசின் பிரதிநிதியான ஆளுநரின் அதிகாரங்கள் என்ன என்பதிலும் தெளிவான வரையறை இல்லாததால் ஏராளமான பிரச்சினைகள் நாள்தோறும் வெடித்தன. அதில் முக்கிய மானது இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் நியமனம் குறித்தது. அதிகாரிகள் மாநில அரசுக்கு எதிராகத் தூண்டி விடப்பட்டனர்.

சட்டப் போராட்டம் : இந்த நிலையில்தான் தில்லி ஆம் ஆத்மி அரசு தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் தங்கள் ஆட்சி உரிமைகளுக்கான சட்டப் போராட்டத்தை நடத்தி வந்தது. பல்வேறு நிலைகளைக் கடந்து இறுதியாக ஐந்து நீதிபதி களைக் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு சென்ற மாதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியது.

தில்லி அரசென்பது பிற மாநில அரசுகளிலிருந்து பொது ஒழுங்கு, காவல்துறை, நில உரிமை ஆகியவற்றில் வேறு பட்டிருந்தாலும் மற்ற எல்லா அம்சங்களிலும் மாநில அரசுக்கான உரிமைகளைக் கொண்டது என்பதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. அப்படியானால் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அந்த அரசுக்கு அதிகாரிகளைக் கட்டுப்படுத்தும் உரிமை இருந்தால்தான் அதனால் தன் பணியைச் செய்ய முடியும் என்பதை தெளிவுபடுத்தி, இந்த மூன்று அம்சங் களைத் தவிர்த்த பிற எல்லா துறைகளிலும் அதிகாரிகளை தில்லி அரசே கட்டுப்படுத்தும் எனத் தீர்ப்பளித்தது.

ஒன்றிய அரசு உடனே ஓர் அவசரச் சட்டம் இயற்றியுள்ளது. அதில் அதிகாரிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மாநில அரசிடமிருந்து பறிக்கும் விதமாக, ஆளுநருக்கே அந்த அதிகாரத்தை வழங்கும் படியாக விதிகளை வகுத்துள்ளது. உச்சநீதிமன்றத் தீர்ப்பினை முறியடிக்கும் நோக்கத்திலேயே இதைச் செய்துள்ளது.

இன்றைக்கு இது தில்லி என்ற வித்தியாசமான மாநிலத்தின் பிரச்சினையாக இருந்தாலும், ஒன்றிய அரசு ஏற்கனவே பல மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் தலை யீடுகளை நிகழ்த்தி வருவதைப் பார்க்கும்போது இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்திற்கு விடப்பட்ட சவாலாகவே இந்த அவசரச் சட்டத்தை பார்க்க வேண்டியுள்ளது.

அதன் காரணமாக சரத் பவார், மம்தா பானர்ஜி, சந்திர சேகர ராவ் உள்ளிட்ட பல மாநில முதல்வர்கள் அர்விந்த் கேஜ்ரிவாலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டு முதல்வர் ஸ்டாலினும் அர்விந்த் கேஜ்ரிவாலின் போராட்டத் துக்கு முழு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை அரவிந்த் கேஜ்ரிவாலின், ஆம் ஆத்மி கட்சியின் பிரச்சினை மட்டுமல்ல. அதற்கு வாக்களித்த ஒன்றரை கோடி தில்லி மக்களின் சுயாட்சி உரிமை சார்ந்த பிரச்சினையாகும். இந்தியாவில் மாநில சுயாட்சி போராட் டத்தின் மற்றொரு முக்கிய அத்தியாயமே தில்லி மாநிலத்தின் சுயாட்சி உரிமைக்கான போராட்டம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(கட்டுரையாளர்-ராஜன் குறை கிருஷ்ணன், புதுதில்லி அம்பேத்கர் பல்கலைக்கழகப் பேராசிரியர். இவரைத் தொடர்பு கொள்ள : rajankurai@gmail.com)


**(முகநூல் பதிவிலிருந்து)**

## வே. ஆனைமுத்துவின் "ஆபத்தில் கூட்டாட்சி" நூல் வெளியீட்டு விழா



தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் எழுதிய Federalism in Peril நூலின் தமிழாக்கம் ஆபத்தில் கூட்டாட்சி நூல் வெளியீட்டு விழா 8.4.2023 மாலை 6.30 மணிக்கு சென்னை, அண்ணாநகர் சாதிக், ஐ.ஏ.எஸ். அகாடமியில் நடைபெற்றது. திராவிடர் இயக்கத் தமிழ்ப் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் ஆ.சிங்கராயார் தலைமையேற்றார். தோழர்கள் எட்வின், முத்தையா குமரன், மாறன், ஸ்ரீவித்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். செ. இராகிலா தேவி வரவேற்பு ரையாற்றினார். ஆனை. பன்னீர்செல்வம், வாலாசா வல்லவன் வாழ்த்துரை வழங்கினர். இரா. உமா நூல் திறனாய்வு உரையாற்றினார். தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ் காந்தி நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

# செங்கோல்–ஒரு வேண்டுகோள்



- அறிஞர் அண்ணா

**புது** சர்க்காருக்குப் பிரதமராக வந்துள்ள பண்டித நேருவுக்கு திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஒரு செங்கோல் அனுப்பினார். அது 5 அடி உயரமாம்! அசல் தங்கத்தால் செய்யப்பட்டதாம்! அழகாகவும், இருக்கிறதாம்! செங்கோல் அளித்தது ஏன்? பரிசா? காணிக்கையா? பாகமா? லைசென்சு கட்டணமா? ஏதும் விளங்கவில்லை.

எதிர்பாராதது! அம்மட்டோ! அவசியமற்றது! அவசியமற்ற தாக மட்டும் இருந்தால் கூடப் பரவாயில்லையே. அதனுள் புதைந்துள்ள ஆழ்ந்த பொருளைச் சிந்தித்தால் ஆபத்தன்றோ மெள்ள மெள்ளத் தெரிகிறது.

பண்டிதர் அந்தச் செங்கோலைக் கண்டு, என்ன எண்ணினாரோ, நாமறியோம் ஆதீனகர்த்தா, கோலுடன் வேறென்ன ஓலை தந்தனுப்பினாரோ நாமறியோம்.

நாம், கூற ஒன்றிருக்கிறது பண்டித நேருவுக்கு; அந்தச் செங்கோலைப் பெற்றுக்கொண்ட உமக்குச் சில சொற்கள்.

பாரிலே உள்ள பல நாட்டு வரலாறுகளை நீர் அறிவீர். முடி அரசன் அவனைச் சுற்றிக் குடிமக்களை உழைக்க வைத்து, அதன் பலனை உண்டு கொழுக்கும் சீமான்கள் பரிவாரம் இந்தத் தங்கக் கோட்டையினுள்ளே, தாராளமாக உலவும் அனுமதியும் வசதியும் பெற்ற மதத்தை முதலாகக் கொண்டோர் உள்ளனர் என்பதை அறிவீர். மக்களாட்சி மலருவதற்கு இத்தகையவர்கள் நீக்கப்பட வேண்டும் என்னும் வரலாற்று உண்மையையும் அறிவீர்கள். அறிந்ததை ஆட்சி முறையிலே புக வைக்க முயலுவீரோ என்கிற அச்சம் கொண்ட ஆதீன கர்த்தாக்கள், செம்பொன் னால் செய்யப்பட்டது மட்டுமல்ல; நவரத்னங்கள் இழைத்த செங்கோலையும் தர முன்வருவர் - தற்காப்புக்காக! பதிகம் பாடிப் பரமன் அருளைத் தேடி, அற்புத சக்தியால் செய்யப் பட்டதல்ல! அரனடியார் ஒருவர் செய்ததாகக் கூறப்படும் நரி பரியான கதை போல, இரும்புத்துண்டை ஒரு துளி விபூதி தூவி, ஓம் செம்பொன் ஆக்கிச் செய்யப்பட்டதல்ல! பிறர் உழைப்பு? இவருடையதுதானாம். இதுதான் அந்தச் செங்கோல்! பெயர் பொருந்துமா?

அந்தச் செங்கோல் - அய்ந்தடி உயரம்.

அழகிய வேலைப்பாடமைந்தது.

பசும்பொன்னால் செய்யப்பட்டது.

அளித்தவரோ சாமான்யரல்ல - ராஜ குடும்பமோ? அல்ல, அதற்கும் மேலே! பூர்வீக பரம்பரையோ? பூர்வீக பரம்பரையா, நேற்று முளைத்ததா, என்பதல்ல முக்கியம். பரம்பரை கேவலம், பூலோகவாசிகளின் வழி வழி அல்ல - திருக்கைலாயப் பரம்பரை!

அண்ணேன்! ஏது, நமது ஆதீனத்துக்குத் திடீரென்று- தேசபக்தி பொங்கி வழிகிறதே என்று கேட்கிறாயா, தம்பி!

இல்லே அண்ணேன், பொங்குவதும் வழிகிறதுந்தான் இங்கு பழங்கதையாச்சே ஆதீனத்தின் திருப்பார்வை, இப்படி அரசியல் மீது பாயக் காரணம் என்ன என்று கேட்டேன்?

காரணம் கிடக்கட்டும் தம்பி! எனக்கு அந்தக் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதிலே கூட அவ்வளவு பிரியம் இல்லை - ஆனால், விளைவு என்ன ஆகும் என்பதை எண்ணும் போதுதான்.

ஏன்? என்ன ஆகும் விளைவு?

செங்கோல், செம்பொன்னால்தான் செய்கிறோம். வேலைப்பாடு முதல் தரமாகத்தான் இருக்கப் போகிறது. இரவு பகலாக உட்கார்ந்து வேலை செய்கிறோமே!

ஆமாம்! அதனாலே அழகும் அந்தஸ்தும் ஏற்படும் செங்கோலுக்கு, ஆனால் இதை அனுப்பி வைப்பதன் மூலம், ஆதீனம் தன் பார்வையை அந்தப் பக்கம் செலுத்துவது தெரிகிறதல்லவா? ஆதீனத்தின் பார்வை பட்ட காரணத்தாலே, ஏற்பட்ட பலவிதமான விளைவுகளைப் பற்றி யோசிக்கும் போது…

அடடா! நீங்க அதை எல்லாமா எண்ணிக் கொண்டு, ஆயாசமடைவது? இது வேறு பார்வை அது வேறு பார்வை அல்லவா?

இருக்கலாம் தம்பி, இருக்கலாம்; ஆனால், இரண்டு ரகப் பார்வைக்குமுள்ள ஒரே காரணம், ஆசைதானே!

ஆமாம்!

ஆதீனத்தின் ஆசை, புதிய அரசாங்கத்தின் மீது பாய்வதா? நல்லதா? - அதுதான் என் கேள்வி - எனக்குள்ள பயமும் அதுதான். அருமையான செங்கோல்-நல்ல வேலைப் பாடு - ஆனால் இதைக் கையிலே வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தினால்…

தம்பி! இதிலே உள்ள தங்கம் - தரித்திரத்தைக் கூடப் பொருட்படுத்தாதவன், பகல் பட்டினி, ராப் பட்டினி கிடந்தவன், மற்றவன் பொருளை மோசம் செய்தவன், மார் உடையப் பாடுபட்டவன், கூலியைக் குறைச்சவன், உழவனுடைய வயிற்றிலே அடிச்சவன், கொள்ளை இலாபக்காரன், கொடுத்த கடனுக்கு நாமத்தைக் குழைச்சிப் போட்டவன், இப்படிப்பட்ட வன்களெல்லாம் கூட, செய்ததை மறைக்க, பாவத்தைக் குறைக்க பகவானையே ஏமாற்ற, கொடுத்த காணிக்கை, இருக்குதே. அதுதானே! அதுவுந்தானே இருக்கும் புத்தம் புதிசா ஆரம்பிக்கிற ஆட்சிக்கு, இப்படி, புத்தியைச் சுரண்டிப் பிறகு, வாழ்வையே சுரண்டி விடுகிற வழக்கத்தை முதலாக

வைத்து வியாபாரம். செய்கிறவர்களிடம் இருந்து செங்கோல் கிடைத்தால் ஆட்சி, சரியாவா இருக்கும்?

நீங்க ஒரு வேடிக்கை அண்ணேன்!

வேடிக்கை அதிகமில்லேடா தம்பி! வேதனை இருக்கு அதிகமாக. செங்கோல் செய்தவர்கள் இது போலப் பேசியிருக்க மாட்டார்கள். ஆனால், இதுபோன்று எண்ணாமல் இருந்திருக்க முடியாது!

அய்யர் : ஆஹா! பொது சிலாக்யம்! சிரேஷ்டமான காரியம். சகலரும் பாராட்டுவா!

அதிபர் : செங்கோலின் உயரம்?

அய்யர் : அய்ந்து அடியாம்! செம்பொன்னாம். சொன்னா! தங்களுடைய கீர்த்தியோ, அய்ந்து யோசனை உயரம் உயரும்.

அதிபர் : பேப்பர்காராளெல்லாம் கூட.

அய்யர் : அவாளைத் தள்ளுங்கோ படம் போடுவா பாராட்டி எழுதுவா - பெரிய பெரிய மனுஷா - அயல் தேசத்திலே இருந்தெல்லாம் வந்திருப்பா அமெரிக்கா, அய்ரோப்பா முதலிய பல இடங்களிலிருந்து - அவாளெல்லாம் செங்கோலைக் கண்டாளான்னா, ஆஹா! பிரம்மிச்சிப் போவா.

அதிபர் : ரொம்ப அழகான முறையிலே தான் பக்தர்கள் தயாரிக்கிறா.

அய்யர் : வேலைப்பாடு கூடக் கிடக்கட்டும். அதுவும் நன்னாத்தான் இருக்கும். ஆனா அதைக் கூடக் கவனிக்க மாட்டா - இந்த முகூர்த்த வேளையிலே, இப்படிப்பட்ட சிலாக்யமான செங்கோலைத் தர வேணும்னு, இந்தியா பூராவிலேயும் உள்ள படே படே, ராஜாக்கள் பரோடா, ஜெய்ப்பூர், உதயப்பூர், மைசூர், எந்த ராஜாங்கத்துக்கும் உதிக்கல்லே! ஆதீனத்துக்கு, அந்த அன்பும், அக்கறையும், அபிமானமும் ஏற்பட்டது பாருங்கள் என்று ஒவ்வொருவரும் பேசிப் பேசிப் புகழமாட்டாளா? செங்கோலைப் பற்றி ஒரு நிமிஷம் பேசுவா, இரண்டு நிமிஷம் பேசுவா, ஆனா, தங்களைப் பற்றியோ, நாளெல்லாம் பேசுவாளோன்னோ?

அதிபர் : ஆமாம் எப்படி நமது யோசனை?

அய்யர் : வேறு யாருக்கு வரும்! ராஜா கையிலே இருப்பது செங்கோல் - முதல் ராஜாங்கத்துக்குச் செங்கோல் கொடுத்தது யார்? ஆதீனம்! அதாவது, ஆதீனம் பார்த்து ஆசீர்வதித்து, அனுமதி தந்து, புது ராஜ்யம் ஆரம்பமாக லாம்னு முத்திரை தருவது போல, செங்கோலும் கொடுத்த பிறகுதான், புது ராஜாங்கமே ஆரம்பமாச்சுதுன்னு சகலரும் பேசுவா - இப்ப மட்டுமல்ல - எதிர்காலத்திலும், இப்படிப்பட்ட, பேச்சு நடந்திருக்கக் கூடும்!

*செம்பொன் தன்னால் ஆக்கித்*
*திருவருளை இழைத்திழைத்து*
*வம்பொன்றும் வராமல்*
*வாழ்க இந்த அரசு என்று*
*எம்மானைப் பெம்மானை*
*ஏறுடைய எம் சிவனை*
*வேண்டியே, அருள் பெற்று*
*வேண்டியமட்டும் சேர்த்துச்*
*செங்கோல் தனைச் சமைத்தார்*
*எங்கோவாம், ஆதீனத்தார்*

என்று புலவர் பாடி இருப்பார், இந்தச் சம்பவத்தைச் சிறப்பிக்க ஓர் பாடல் சைவ மெய்யன்பருக்குத் திருப்தி இருந்திராது. சீற்றம் பிறந்திருக்கும் காரணத்தோடு.

சைவர் : பாசுரம் பாடுகிறீர் - பாசுரம்! ஓலைச்சுவடியும், கையுமாக ஓராண்டா, ஈராண்டா, பத்தாண்டுகளாக உள்ளீர். பழுத்த பூசணியென வயிறு பருத்ததன்றிப் புலமை காணோமே?

புலவர் : கவிதையிலே, குறை உளதோ?

சைவர் : அதில் மட்டுமிருப்பின் பொறுத்திடலாமே! யூகம் இல்லையே! பாசுரம் எதுக்குப் பாடுகிறீர்?

புலவர் : ஆதீனச் சிறப்பை விளக்க.

சைவர் : ஆதீனச் சிறப்பா? இருக்கும் சிறப்புடன் இன்று புதிதாக ஆதீனம் தனிச்சிறப்புப் பெற, செங்கோல் சமைத்து அனுப்பும் சம்பவமன்றோ முக்கியம்? அதற்கன்றே பாடல்?

புலவர் : ஆமாம்!

சைவர் : அங்ஙனம் என்று, உமது பாடலில் எங்ஙனம் விளக்கியுள்ளீர்? செங்கோலின் பருமன், உயரம், எடை, அழகு, இவை பற்றிய குறிப்பெங்கே? முக்கியம் அஃதன்றோ? சம்பவத்தின் சிலாக்கியம் அப்போதன்றோ விளங்கும். செப்பனிடும், முதலில் செய்யுளை! பிறகு உம் புத்தியை!

*அடி அய்ந்து உயரம் ஆகும்.*
*ஆனதோ அழகான செம்பொன்*
*வடிவழகு கொண்டதாம் வேலை*
*ஞாலம் புகழ்ந்திடுமாம் எஞ்ஞான்றும் இந்நாளை!*

பாதகமில்லை! போம்! என்று கூறி, சைவ, மெய்யன்பர், புலவரை அனுப்பிவிட்டுப் பாடலை, பக்தர்களுக்குச் சமர்ப்பித்து இருக்கக்கூடும். புகழைப் பதிவு செய்து கொள்ளும் முறை அது.

செங்கோலைச் சமர்ப்பிக்க வந்த கூட்டத்தில், சிவந்த மேனியும், கலைக் கண்களும் படைத்தவர் ஒருவர், கட்செவியும் மயங்கும் வகையில் நாதஸ்வரம் வாசித்திட்டது அறிவீர். அவரைக் கண்ட பலர் என்ன பேசிக்கொண்டிருப்பர்?

யார் இவர்?

நாதஸ்வர வித்வான்!

ஓஹோ! இவர் வந்துள்ள காரணம்?

செங்கோலைத் தருவதற்கு ஆதீனம் இவரை அனுப்பி யிருக்கிறார். செங்கோல் தரும் ஆதீனம் எப்படி இருப்பார்?

*சிவப்பழமாக!*
*என்ன வேலை செய்கிறார்?*
*ஆதீனத்தை நடத்துகிறார்!*
*எங்ஙனம்?*
*உரத்த குரலில் கூறட்டுமா, மெல்லிய குரலிலா?*
*ஏன்?*

*ஏனெனில், இருவிதமான குரலில் கூற, இருவகை உண்டு!*
*என்று பேசிவிட்டுச் சிரித்திருப்பார்கள்.*
*பார்த்தால், அழகாகத் தெரியும்.*
*அந்தச் செங்கோலை, மற்றோர் முறை பாரும், சற்றுக் கூர்மையுடன்!*
*ரிஷபம் மட்டுமல்ல, தெரியக்கூடியது,*
*மாடென உழைக்கும் ஏழைகள் பலரும் தெரிவர்.*

இழைப்பு வேலை மட்டுமல்ல, தெரியக்கூடியது உழைப்பை உறிஞ்சுவதால், மேனியில் உளுத்தவர்களுக்கு ஏறியுள்ள மினுமினுப்பும் தெரியும்.

ஆயிரம் வேலி நிலம் தெரியும், அதை உழுது பயிரிட்டு அழுது வாழும் பாட்டாளியின் உருவம் தெரியும். அவன் வதையும் குடிசை தெரியும். அங்கு செங்கோல் செலுத்தும் வறுமை தெரியும்! மிட்டா மிராசு தெரியும், அவர்களின் மோட்டார் பங்களா தெரியும். தங்கத் தட்டும் தெரியும் அதிலே வெண்ணிறத் தூசும் தெரியும்! சுழலும் கண்கள் தெரியும். சோர்ந்த உடலும் தெரியும். வியர்வை தெரியும். பொழிந்த இரத்தம் தெரியும். மத்தடி பட்ட தயிர் போன்ற சித்தம் கொண்டவரின் உருவம் தெரியும்!

மடம் தெரியும் - அங்கு உலாவும், சிவ ஜடம் தெரியும். உடலில் அணி தெரியும் - உள்ளே பிணி உள்ளது குறிப்பாகத் தெரியும்!

தோட்டம் தெரியும், நீராடத் தனக்குதவும் குளமும் தெரியும் அக்குளம் பேசுமேல் பலப்பல குட்டிக்கதைகள் தெரியும்.

சைவம் தெரியும். பலர் அதன் அருள் பெற்று, உயர்ந்த 'வகையும்' தெரியும்.

மின்னிடும் மோதிரமும் செவியில் குலுங்கிடும் குண்டலமும் தங்கப் பாதக் குறடும், தாங்கிடும் பக்தர்களும் எனும் இவ்விதக் காட்சிகள், இன்னும் பலப் பல, மின்னி மின்னித் தெரியும் - செங்கோலை மீண்டும் மீண்டும் பார்த்தால்!

ஆதீனம் வந்து போனவரின் அடையாளப் பேச்சுப் பேசுவோர், 'ஆஹா! அருமை! அருமை! ஆனாலும் சிரமம் அதிகம் ஆதீனம் ஆனந்தம் அடைந்தது, நம் பாக்கியம்' என்று அகம் மகிழாவிட்டாலும் முக மகிழ்ந்து போகும் அடியார்களைக் காணலாம்! மற்றும் பலப் பல தெரியும். ஆனால், மாற்றுக் குறையாத பசும்பொன்னால் செய்தது, உயரம் அய்ந்தடி, உன்னதம் வேலைப்பாடு என்பவனற்றைச் சற்று மறந்து பார்க்க வேண்டும், செங்கோலை. அப்போதுதான் தெரியும் சிற்றரசன், சீமான், என்போரேனும் மக்களின் சீற்றம் கிளம்பிப் பாயுமோ தம் மேலே என்று ஆயாசமடைவர். ஆனால் இந்த ஆதீனங்களோ, அச்சம் மிகுந்த மக்கள் தமது அடி தொழ, சர்க்கார் பாதுகாப்புத் தர, பணம் படைத்தோர் படை பல தர கொலு வீற்றிருக்கிறார்கள் பயமற்று - கவலையற்று என்பது. செங்கோல் - ஒரு வேண்டுகோள்; காணிக்கை அல்ல! அன்பின் அறிகுறியல்ல! நாட்டுப்பற்றை விளக்கும் சின்னமல்ல! வேண்டுகோள்!

ஆளவந்தாரோ, மக்களைத் தாளில் விழச் செய்து, ஈடில்லாத புகழும் பொருளும் பெற்றுள்ள இந்த ஆதீனங்களைக் கலைத்துவிட வேண்டுமென்று, ஏதேதோ கற்றோமென்று கூறிக்கொள்ளும் ஒரு கூட்டம் பேசிடும் காலம் இது, எமது ஆட்சி முடியுங்காலம் என்று பேசுகின்றனர். நாங்கள், பரம சாதுக்கள்! உம்மிடம் அபாரமான ஆசை கொண்டவர்கள். சந்தேகமிருப்பின், செங்கோலை மற்றோர் முறை பாரும், அய்ந்தடி உயரம், அருமையான வேலைப்பாடு - எமது ஆதீனம், புதுமுறை வேண்டுபவரின் புன்மொழிக்கு ஆளாகாமல் இருக்கச் செய்யும். எமக்கு இறவா வரம் தாரும். எம்மானே, நேரு பெம்மானே! இறவா வரம் தாரும் - இன்னுமோர் இருபதாண்டுகளுக்கேனும், இறவா வரம் தாரும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் - சைவ மெய்யன்பர். இந்தக் கோல் கொடுத்ததன் மூலம், தமக்கும், புதிய சர்க்காருக்கும், சினேகம் இருப்பதாகக் காட்டிக் கொள்வதன் மூலம், மேலும் பாமரரை மயக்க விரும்புகிறார். நேரு சர்க்காரின் நேயரான ஆதீனம் ஏற்கெனவே சிவநேசத்தையும் பெற்றிருக்கிறது. எனவே, அதன் ஆதிக்கம் குறையாது, குன்றாது, என்று பாமரர் நம்ப இடமேற்படுகிறது இதனால்.

இவ்வளவும் தங்கம்! முற்றும் துறந்த முனிவர்களின் வழி வழி வந்தோரான, ஆதீனகர்த்தாவின் சுவாதீனத்திலுள்ள ஏராளமான செல்வத்திலே இது ஒரு சிறு, மிக மிகச் சிறு துண்டு!

ஆதீனத்திலே, நவரத்னங்கள் உள்ளன பேழைகளிலே! நவரத்னங்களிலும் மேலான, செந்நெல் மணி விளையும், வளமான வயல்கள் உள்ளன ஆதீன ஆட்சியிலே

மனித குல மாணிக்கங்களான பாட்டாளி மக்கள், அங்கு வதைகின்றனர்.

எத்தர்கள், இந்த ஆதீன கர்த்தாக்களை சித்தர் என்று கூற, ஏமாளிகள் மயங்கிக் குவிக்கும் ஏராளமான பணத்திலே, சிதறியதிலே சிறிது, செங்கோலாகி உம்மிடம் வந்திருக்கிறது.

தோடாக, பாடகமாக, தொங்கட்டமாக, உருவெடுத்த பொருள் இதனினும் அதிகம்!

இறவா வரம் தரச் சொல்லி, விடுத்துள்ள இந்தச் செங்கோல், எத்தகைய செம்பொன்னால் ஆக்கப்பட்டிருக்கிறதோ, அத்தகைய பொன், குன்று போலுள்ள காட்சியைக் காணலாம். இத்தகைய ஆதீனங்கள் மத ஸ்தாபனங்கள் ஆகிய இடங்களிலே உள்ள பொருளைப் பறிமுதல் செய்தால் அந்தப் பொருளை, நாட்டு மக்கள் வாழ்வை வளமாக்கும், செங்கோல் இன்றுள்ளது போல ஆதீனம் தரும் அலங்காரக் கோலாக மட்டுமின்றி, மக்களின் வாழ்வை உயர்த்திடும், மாண்பு பெறும், அந்தச் செங்கோலை அடிக்கடி பார்த்து, அது புகட்டும் பாடத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

- திராவிட நாடு, 24.8.1947

●

# கன்னியாகுமரி ஐயன் திருவள்ளுவர் சிலையை ஆர்.எஸ்.எஸ். இயக்கமான விவேகானந்தர் கேந்திராவுக்குத் தாரைவார்த்து விடுகிற வகையில் விவேகானந்தர் மண்டபப் பாறைக்கும் திருவள்ளுவர் சிலையுள்ள பாறைக்கும் இடையிலான பாலம் அமைத்துவிடக்கூடாது!

**திருக்குறள் இயக்கத்தினர், தமிழிய உணர்வாளர்கள், திருக்குறள் நெறியாளர்களின் கூட்டறிக்கை**

மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்க்குத் திருக்குறள் நெறியர்கள் அனைவரும் இணைந்து மிக வருத்தத்தோடு இந்த அறிக்கையை அளிக்கிறோம்.

கன்னியாகுமரியில் மிகக் கடுமையான எதிர்ப்புகளைக் கடந்து கலைஞர் அவர்களால் ஐயன் திருவள்ளுவருக்குச் சிலை அமைக்கப்பட்டதைத் தாங்கள் அறிவீர்கள். அது அமைக்கப்பட்ட சில ஆண்டுகளுக்குப் பிறகு அச்சிலை சரிவர பேணப்படாத நிலையிலும் அந்தச் சிலைக்குப் படகுகள் போய் வர மறுக்கப்பட்ட நிலையிலும் தொடர்ந்து திருவள்ளுவர் சிலை புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது.

அப்படியான புறக்கணிப்பை விவேகானந்தர் மண்டபத்தை நிறுவிய விவேகானந்தர் கேந்திரமும் அதற்குப் பின்புலமாக இருந்து செயல்பட்டு வருகிற ஆர்.எஸ்.எஸ். நிறுவனமும் திட்டமிட்டுச் செய்து வருவதைத் தாங்கள் அறிந்திருக்கலாம். அங்குச் செயல்படுகிற பூம்புகார் படகு போக்குவரத்துக் கழகத்தின் படகுகளைத் திருவள்ளுவர் சிலைக்கு அனுப்ப விடாது சண்டித்தனம் செய்கிற வகையிலேயே விவேகானந்தர் கேந்திரம் மறைமுகமாகச் செயல்பட்டு வருவதை அந்த மாவட்டத்தில் உள்ள திருக்குறள் செயற்பாட்டாளர்கள் அறிவார்கள்.

இந்த நிலையில், ஐயன் திருவள்ளுவர் சிலையினை மதிக்கிற வகையில் கன்னியாகுமரி கடற்கரையில் இருந்து நேரடியாகத் திருவள்ளுவர் சிலையுள்ள பாறைக்கு ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்று தொடர்ந்து திருக்குறள் இயக்கத்தினர் குரலெழுப்பி வருகிறோம்.

ஆனால், தமிழ்நாடு அரசு அதைக் கவனத்தில் கொள்ளாத வகையில் விவேகானந்தர் மண்டபம் உள்ள பாறைக்கும் திருவள்ளுவர் சிலை உள்ள பாறைக்கும் இடையே பாலத்தைக் கட்டுகிற திட்டத்தைத் தொடங்கி அடிக்கல் நாட்ட இருப்பதாக வந்திருக்கிற செய்தி தமிழ் நெஞ்சத்தினரிடையே ஈட்டியைப் பாய்ச்சுகிற கொடுஞ்செயலாகவே உணர முடிகிறது. விவேகானந்தர் பாறையைப் பார்த்துவிட்டுத்தான் திருவள்ளுவரைப் பார்க்க வேண்டுமான கொடுஞ்சூழலை தமிழ்நாடு அரசு உருவாக்கி தரக்கூடாது என வலியுறுத்துகிறோம்.

விவேகானந்தருக்கும் தமிழ்நாட்டிற்கும் என்ன வகைத் தொடர்பும் இல்லை என்பதோடு வங்காளத்திலோ வேறு எந்த வடநாடுகளிலோ பொது இடத்தில் திருவள்ளுவருக்கு மண்டபம் எழுப்பி விட முடியாத நிலையில், விவேகானந்தர் மண்டபத்திற்கு முதன்மை தந்து ஐயன் திருவள்ளுவர் சிலையை ஒதுக்கி வைப்பது ஏற்றுக்கொள்ள இயலாதது.

தமிழ்நாட்டு முதலமைச்சர் மெத்தனமாக இருந்து விடக்கூடாது என்கிற அக்கறை யோடேயே திருக்குறள் ஆர்வலர்கள் இக்கருத்தை மிகவும் வலியுறுத்துகிறோம்!



எனவே, கன்னியாகுமரி ஐயன் திருவள்ளுவர் சிலைக்குக் கடற்கரையிலிருந்து தனியே பாலம் அமைத்திட வேண்டும் என்றும், அமைச்சர் எ.வ.வேலு விவேகானந்தர் மண்டபப் பாறைக்கும் திருவள்ளுவர் சிலையுள்ள பாறைக்கும் இடையிலான பாலம் அமைக்க அடிக்கல் நாட்டுவதை நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

திருவள்ளுவரை ஆர்.எஸ்.எஸ் காவு வாங்கிவிடக் கூடாது எனும் அக்கறையிலேயே இதைத் தெரிவிக்கிறோம். 160 அமைப்பினர் அறிக்கையில் ஒப்பமிட்டு, முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## பெரியாரியல் பயிலரங்குகள்

தந்தை பெரியார் திராவிடர் கழகம் மே மாதம் சனி, ஞாயிறுகள் தோறும் தமிழகத்தில் பல மாவட்டங்களில் பெரியாரியல் பயிலரங்குகளை நடத்தியது. 20.5.2023 சனி அன்று ஈரோடு ம.தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற பயிலரங்கிற்கு கு.இராமகிருட்டிணன் தலைமைத் தாங்கினார். ந.வெ.குமரகுருபரன் வரவேற்புரையாற்றினார். நாடாளு மன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார். ஆர்.எஸ்.எஸ்-ஐ. எதிர்கொள்வோம் என்றத் தலைப்பில் பேரா.செயராமன், திராவிட இயக்க வரலாறு எனும் தலைப்பில் வாலாசா வல்லவன், பெரியாரின் போராட்டங்கள் என்ற தலைப்பில் பேரா.சாரோன், நாத்திகம் என்ற தலைப்பில் சீனி.விடுதலை அரசு ஆகியோர் பயிற்றுவித்தனர்.

இதே தலைப்பில் இதே தோழர்கள் 21.5.2023 ஞாயிறு அன்று திண்டுக்கல்லில் வாழ்க வளமுடன் அரங்கில் நடைபெற்ற பயிலரங்கில் பயிற்றுவித்தனர். ப.வெற்றிவேந்தன் தலைமை தாங்கினார். துரை.சம்பத் அறிவுமுகவுரையாற்றினார். கு.இராமகிருட்டிணன் சிறப்புரையாற்றினார். ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

குன்றத்தூரில் நடைபெற்ற பயிலரங்கில் பேரா.மு.நாகநாதன் அவர்களும் பேராசிரியர் கருணானந்தம் அவர்களும் பங்கேற்றுப் பயிற்றுவித்தனர்.

# திராவிடர் விடுதலைக்கழகம் நடத்திய ‘இது தமிழ்நாடு இளம் தலைமுறையின் எச்சரிக்கை’ மாநில மாநாடு




திராவிடர் விடுதலைக்கழகம், இது தமிழ்நாடு இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநில மாநாடு ஏப்ரல் 29, 30 சனி, ஞாயிறு 2023 இரண்டு நாள்கள் சேலம் சந்திர மகாலிலும் பொது மாநாட்டை தாதகாப்பட்டிகேட் திறந்தவெளியிலும்

சனாதனத்தை வேரறுப்போம்!
வெறுப்பு அரசியலை வீழ்த்துவோம்!
மாநில உரிமைகளைப் பாதுகாப்போம்!

எனும் முழக்கங்களோடு மிகவும் எழுச்சியோடு நடத்தியது.

29.4.2023 காலை 9 மணிக்கு கொடியேற்றத் துடன் புதுவை விடுதலைக்குரல் கலைக் குழுவினர் இன்னிசையோடு மாநாடு தொடங்கியது. இராம. இளங்கோவன் தலைமையில் கருப்பு, சிவப்பு, நீலம் இணையும் புள்ளிகள் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார், மருத்துவர் எழிலன், ச.ம.உ., மதுக்கூர் இராமலிங்கம், பேராசிரியர் த. செயராமன், முனைவர் சுந்தரவள்ளி, அன்பு தனசேகர், எட்வின் பிரபாகரன் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

பிற்பகல் 2.30 மணிக்கு உரைவீச்சு வீ. சிவகாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏற்காது தமிழ்நாடு என்ற தலைப்பில் மருத்துவர் இரவீந்திரநாத், வழக்குரைஞர் வாஞ்சிநாதன், துரை. பரிமளராசன், க. விசயக்குமார், கா. இரவிபாரதி, இரண்யா ஆகியோர் உரையாற்றினர். கழகக் குடும்பக் குழந்தைகள் கலை நிகழ்ச்சிக்குப் பிறகு, மாலை 5.30 மணிக்கு வைதீக எதிர்ப்பில் வழிகாட்டும் முன்னோடிகள் என்ற தலைப் பில் நடைபெற்ற வரலாற்றுக் கருத்தரங்கிற்கு பால். பிரபாகரன் தலைமை தாங்கினார். புலவர் செந்தலை கவுதமன், மருத்துவர் தாயப்பன், மணிக்கோ பன்னீர் செல்வம், பொழிலன், வாலாசா வல்லவன், தேன்மொழி ஆகியோர் உரையாற்றினர். இரவு 9 மணிக்கு சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் நாடகம் நடைபெற்றது.

ஏப்ரல் 30 ஞாயிறு காலை 9 மணிக்கு இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து இயக்கம் கடந்துவந்த பாதை குறும்படம் திரையிடப்பட்டது.

10.30 மணிக்கு நடைபெற்ற ஆய்வரங்கிற்கு வழக்குரைஞர் இரா. திருமூர்த்தி தலைமைத் தாங்கினார். திரிபுவாதங்களைத் தோலுரிப்போம் என்ற தலைப்பில் செந்தில், நா. அய்யனார், க. இராமர், திருப்பூர் மகிழவன், வழக்குரைஞர் இரா. சிவா ஆகியோர் உரையாற்றினர்.

மாலை 3.30 மணிக்கு சனாதன சக்திகளுக்கு எதிரான இளம் தலைமுறையின் எழுச்சிப் பேரணி இரா.உமாபதி தலைமையில் நடைபெற்றது. இறுதியாக நடைபெற்ற பொது மாநாட்டிற்கு கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். பாலபிரஜாபதி அடிகளார், வன்னி அரசு, விடுதலை க.இராசேந்திரன், சு.துரைசாமி, வி. இரத்தினசாமி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் உரையாற்றினர்.

## கோருரிமை முழக்க ஆர்ப்பாட்டம்




திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் பெரிய வரிகத்தில் 27.5.2023 காரிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு தமிழ்நாடு தொழிற்சங்க நிறுவனத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் தோழர் உரூபன் தலைமையில் பொதுமை இயக்க முன்னோடி தோழர் சிங்காரவேலர் தொடங்கிய மே நாள் நூற்றாண்டு நிறைவு மற்றும் 138-ஆம் ஆண்டு மே நாளில், 725 தொழிலாளர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக, காலணி நிறுவனத்திற்கு எதிராக தமிழ்நாடு தொழிற்சங்கம் போராடி பெற்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்தக் கோரியும், தொடர்ந்து நடைபெறும் ஆலை மூடல், ஆள்குறைப்பு உள்ளிட்ட தொழிலாளர் விரோதப் போக்கை கண்டித்து கோருரிமை முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மக்கள் தமிழகம் கட்சியின் பொதுச் செயலாளர் ந. செவ்வேள் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா. மதனகவி, தமிழ்த் தேச இறையாண்மை கே. மாரியப்பன், தொழிலாளர் ஒற்றுமை இயக்கம் கபிலன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

## சு.க.முல்லை–சே.சா.வினித் நாராயணன்

# திருமண விழா-வரவேற்பு விழா



மா.பெ.பொ.க தோழர் தாம்பரம் மா.சுப்ரமணி, ஆல்மைட்டி தா.கஸ்தூரி இணையரின் மகள் மருத்துவர் சு.க.முல்லைக்கும், தாய்கோ வங்கி மாநில துணைத் தலைவரும், தென்காசி தொழில் கூட்டுறவு, தொழில் பேட்டை தலைவரும் அதிமுக பிரமுகருமான குற்றாலம் நா.சேகர்-சே.சாந்தி இணையரின் மகன் பொறியாளர், வழக்கறிஞருமான சே.வினித்நாராயணன் ஆகியோருக்கு 13.5.23 சனிகிழமை குற்றாலம் இலட்சுமி மண்டபத்தில் வரவேற்பும் மறுநாள் 14.5.23 ஞாயிறு காலை குற்றாலம் குற்றாலநாதர் கோவிலில் திருமணமும், காசி மேஜர்புரம் இலட்சுமி மண்டபத்தில் வரவேற்பும் நடைப்பெற்றது.

விழாவிற்கு புதிய சிந்தனையான் ஆசிரியரும் மா.பெ.பொ.க துணைப் பொதுச்செயலாளர் வாலாசாவல்லவன் , துணைவியர் க.குயில் மொழி, கவியரசி, ஆவடி நாகராசன், துணைவியர் நா.சாந்தி. பா.வடிவேல், துணைவியர் வ.சுகுணா, வழக்கறிஞர் சுந்தரகாந்தம், கீதா நல்லதம்பி, யாழினி நல்லதம்பி, காஞ்சிபுரம் ஜெயபிரகாசு ராஜகோபால், உமா ராஜகோபால், மறைமலைநகர் பழனி, சமத்துவ மணி, சூரியன் பிரமோட்டர்ஸ் டெவலப்பர்ஸ், ஆல்மைட்டி அசோசியேடஸ், பங்கு தாரர்கள், உட்பட உறவினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அ.தி.மு.க. முன்னாள் அமைப்பு செயலாளர் கருப்பசாமி பாண்டியன், அமைச்சர்கள் வளர்மதி, மோகன், டி.கே.எம். சின்னையா, கடம்பூர் ராஜ், இசக்கி சுப்பையா, ராஜலட்சுமி, எம்.எல்.ஏ கிருஷ்ணா முரளி உட்பட ஏராளமான அதிமுகவினர் பங்கேற்று வாழ்த்தினர்.

சென்னையிலிருந்து குற்றாலம் வந்திருந்த பெரும்திரளான தோழர்களை ரா. ரவி (ஒ.என்.ஜி.சி.) கலைமாமணி பூவைமணி, படப்பை உஸ்மான், திருநெல்வேலி ராஜ் கமல் கௌதம், ரதிசேகர் கௌதம் வரவேற்று உரிய ஏற்பாடுகள் செய்து சிறப்பித்தனர்.

இதைத் தொடர்ந்து 22.5.23 திங்கள் மாலை சென்னை குரோம்பேட்டை வசந்தம் திருமண மாளிகையில் மணவிழா வரவேற்பு நடைப்பெற்றது.

மா.அண்ணாதுரை (இ.த.ப), தாம்பரம் மாநகர காவல் ஆணையர் (சட்டம்-ஒழுங்கு) முனைவர் பா. மூர்த்தி (இ.கா.ப), தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம், தி.மு.க. மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் காமராஜ், மண்டல தலைவர்கள் காமராஜ், இந்திரன், ஜெயபிரதாப் சந்திரன் உட்பட ஏராளமான மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் திமுகவினர் கலந்து கொண்டனர்.

அதிமுக காஞ்சி மாவட்டத் தலைவர் சிட்லப்பாக்கம் ராஜேந்திரன், டி.கே.எம். சின்னையா, மண்டல பகுதி செயலாளர் எல்.ஆர்.செழியன், உட்பட ஏராளமான அதிமுகவினர் பங்கேற்று வாழ்த்தினர்.

மதிமுக அமைப்பு செயலாளர் வந்தியத்தேவன், உட்பட ஏராளமான மதிமுக நிர்வாகிகள் பங்கேற்றனர் ஆனைமுத்து மூத்த மருமகன் புதுச்சேரி சீனு அரிமா பாண்டியன், தமிழ்ச்செல்வி, ஆனைபன்னீர்செல்வம், துணைவியர் போதம்மாள், ஆனை. வெற்றி, விசயலட்சுமி, இராமச்சந்திரன், ஆனை அருள்மொழி, ஆனை வீரமணி, ஆனை.கோவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். மா.பெ.பொ.க. தலைமை செயற்குழு உறுப்பினர் க.முகிலன், துணைவியர் கலை, வாலாசா வல்லவன், காஞ்சி சி.நடராசன் உள்ளிட்ட ஏராளமான மா.பெ.பொ.க. தோழர்கள் கலந்து கொண்டனர். மருத்துவர் சு.க.முல்லை வழக்கறிஞர் வினித் நாராயணன் மணவிழா நினைவாக ஐயா ஆனைமுத்து கடந்த 75 ஆண்டுகளுக்குமுன் குறள் முரசு இதழில் எழுதிய திருக்குறள் நெறி போதிக்கும் ‘‘காதலும் காமமும்’’ இலக்கிய கட்டுரைகள் நூல் வெளியிடப்பட்டது.

கலை அறப்பேரவை மு. கலைவாணன் வழங்கிய பொம்மலாட்டம் மற்றும் சேலையூர் சண்முகம் வழங்கிய இசை நிகழ்ச்சியும் நடைப்பெற்றது.

மணவிழா மற்றும் வரவேற்பு விழாவிற்கான இரு வீட்டார் சார்பில் திருநெல்வேலி ராஜகமல் கௌதம் ரதிசேகர் கௌதம் தாம்பரம் ரா. ரவி (ஓஎன்ஜிசி), ஆகியோர் செய்து சிறப்பித்தனர்

விழாவின் மகிழ்வாக புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூபாய் இரண்டு ஆயிரம் வழங்கப்பட்டது.

● **செய்தி : ஆவடி நாகராசன்**

## வைக்கம் நூற்றாண்டு, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் பொதுக்கூட்டம்



30.4.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை காஞ்சிபுரம் காந்தி சாலை தந்தை பெரியார் நினைவுத் தூண் அருகில் காஞ்சிபுரம் அறிவு வளர்ச்சி மன்றம் சார்பில் வைக்கம் நூற்றாண்டு, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அறிவு வளர்ச்சி மன்ற அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் தலைமை தாங்கினார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் அ.வெ. முரளி, முனைவர் பா. கதிரவன், கு. அருளானந்தம், காஞ்சி அமுதன், ஆ. திருமலை, மருத்துவர் மு. ஆறுமுகம், மா.பெ.பொ.க. சி.நடராசன், பல்லவமேடு சேகர், குறளமிழ்தன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

கூட்ட துவக்கத்தில் ஜெய்பீம் அறிவுமானன், உலக ஒளி ஆகியோர் பகுத்தறிவு பாடல்கள் பாடினர்.

நா. அறிவுமணி நன்றி கூற பொதுக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

## பிரிஜ் பூசனை கைது செய்யக் கோரியும் தில்லி காவல் துறையை கண்டித்தும் ஆர்ப்பாட்டம்



அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மற்றும் அய்க்கிய விவசாயிகள் முன்னணியும் இணைந்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் தோழர் இரா. முல்லை தலைமையில் 5.6.2023 திங்கள்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு வாணியம்பாடி ஆயுள் காப்பீட்டுக் கழக அலுவலகம் எதிரில் மற்போர் வீராங்களைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த பா.ச.க. நாடாளுமன்ற உறுப்பினர் பிரிச்சு பூசனை உடனடியாக கைது செய்ய வேண்டும். தில்லி சந்தர் மந்தரில் போராடிய வீரர்களைத் தாக்கிய தில்லி காவல் துறையை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்திய பொதுவுடைமைக் கட்சியின் நகர செயலாளர் சாகீர் உசேன், துணைச் செயலாளர் சிராஜ்கான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா. மதனகவி, மக்கள் தமிழகம் கட்சியின் பொதுச் செயலர் நா. செவ்வேள், வி.சி.க. ஒன்றிய செயலர் ந. வேலு, வெல்பேர் கட்சியின் மாவட்டத் தலைவர் அக்ரம் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

## அண்ணல் அம்பேத்கர் - பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா

### தமிழ்நாடு அரசின் பாவேந்தர் விருது பெற்ற எழுத்தாளர் வாலாசா வல்லவனுக்குப் பாராட்டு விழா




சென்னை பெரியார் நகர், முழுநேர பொது நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் 16.4.2023 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு அண்ணல் அம்பேத்கர் - பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவும் தமிழ்நாட்டரசின் பாவேந்தர் விருது பெற்ற வாலாசா வல்லவனுக்குப் பாராட்டு விழாவும் நூலகம் வாசகர் வட்டத் தலைவர் அ.லெ. சிந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மருத்துவர் சத்திய நாராயணன் முன்னிலை வகித்தார். ப. செயக்குமார் குறள் விளக்கம் அளித்தார். மகிழ்நன் வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் அரங்க மல்லிகா, அண்ணலின் “தொடரும் விடுதலை வரலாறு” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தோழர் இரா. உமா, வாலாசா வல்லவனைப் பாராட்டி பேசினார். வாலாசா வல்லவன் ஏற்புரையாற்றினார். சுமதி அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.


பெரியார் நகர் முழுநேர நூலகத்தின் வாசகர் வட்டம் சார்பில் அதன் தலைவர் அ.லெ. சிந்தா அவர்களும், மருத்துவர் சத்திய நாராயணன் அவர்களும் புதிய சிந்தனையாளன் இதழுக்கு மூன்றாண்டு கட்டணமாக ரூ.500 வீதம் வழங்கினர்.

# ஆதித் தமிழர் பேரவை நடத்திய ஒடுக்கப்பட்டோர் விடுதலையில் திராவிட மாடல் கருத்தரங்கம்



ஆதித் தமிழர் பேரவை ஒடுக்கப்பட்டோர் விடுதலையில் திராவிட மாடல் என்ற தலைப்பில் கருத்தரங்கை 9.4.2023 அன்று பகல் 10 மணிக்கு சென்னை, தேனாம்பேட்டை அன்பகத்தில் நடத்தியது. பேரவையின் தலைவர் அதியமான் தலைமைத் தாங்கினார். எழில் புத்தன் வரவேற்புரை யாற்றினார். பேரவையின் பொதுச் செயலாளர் கோவை இரவிக்குமார் தொடக்க உரையாற்றினார். மாவீரன் ஒண்டிவீரன் பகடை நூலை வெளியிட்டு டி.கே.எஸ். இளங்கோவன் உரையாற்றினார். த.பெ.தி.க. குமரன், தி.வி.க. உமாபதி, சுந்தரவள்ளி, தி.க., செ.மெ. மதிவதனி, தி.மு.க. தமிழன் பிரசன்னா, மா.பெ.பொ.க. வாலாசா வல்லவன் ஆகியோர் உரையாற்றினர். முருகேசன் நன்றியுரையுடன் கருத்தரங்கம் நிறைவடைந்தது.

# கோவை மருத்துவர் சோமாஸ்கந்தன் மறைந்தார்



திருவாரூரில் பிறந்து வளர்ந்து கோவையில் மருத்துவராகப் பணியாற்றியவர், ஈரோட்டில் பேராசிரியராகப் பணியாற்றி மறைந்த மு.க.சுப்பிரமணியன் அவர்களின் இளவல், சிறந்த பகுத்தறிவாளர், நல்ல பகுத்தறிவுக் கட்டுரைகளை சிந்தனையாளன் ஏட்டில் எழுதி வந்தவர் மரு.சோமாஸ்கந்தன் அவர்கள் இன்று 03.06.2023 மாலை தன் 89ஆம் அகவையில் இயற்கை எய்தினார்.

முகநூலில் என்ற பெயரில் பல பகுத்தறிவுக் கருத்துகளை பதிவிட்டு வந்தவர். அன்னாரது மறைவிற்கு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் புதிய சிந்தனையாளன் இதழும் தன் வீரவணக்கத்தை உரித்தாக்குகிறது

## தமிழின் மேன்மை

அந்தமிழ் மொழியினால் அகில உலகையும்
சொந்த மாக்கிடும் சுரப்புச் சுனைஅது!
மனத்துள் ஊறும் மட்டிலாக கருத்தினைக்
கணத்திற் குள்ளே கழறிட முடியும்.
அறிவின் விழிப்பில் அகப்படும் எதனையும்
வெளிப்படுத் திடத்தகும் எளியது தமிழ்மொழி!

– பாவேந்தர் பாரதிதாசன்

## புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மே-சூன் - 2023

| | | |
|---|---|---|
| இரா.சிவப்பிரகாசம்–செந்தமிழ்க்கொற்றி | சென்னை | 2000/– |
| து.செ.நிறைமொழி | காட்டுமன்னார் கோவில் | 1000/– |
| மா.முருகேசன்–அலமேலு | தீத்தாண்டப்பட்டு | 1000/– |
| சம்பந்தசிவக்குமார்–பானுமதி | காஞ்சிபுரம் | 1000/– |

ஆசிரியர் மற்றும் வெளிடுபவர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441

Editor & Published by **VALASA VALLAVAN,** No.2/12, C.N.K. Lane, Chepauk, Chennai - 600 005. Mobile : 8668109047
**Printed by Pavai Printers Pvt. Ltd.,**
16, (142), Jani Jankhan Road, Royapettah, Chennai - 600 014. Phone : 044-2848 2441